# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 14 வியாழக்கிழமை (30.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 308


# இனப்பிரச்சினைத் தீர்வு சாத்தியமற்ற திசையில்!

## கட்சிகளுக்கு இடையிலான கருத்து வேறுபாடுகளால்

கொழும்பு, செப்ரெம்பர் 30

தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதில் பிரதான கட்சிகள் இரண்டிற்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகள், இனப்பிரச்சினைக்கான தீர்வைச் சாத்தியமற்றதாக்கி வருகின்றன என அரசியல் அவதானிகளும் கல்வியியலாளர்களும் கவலை வெளியிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டதை அடுத்து - தமிழர்களின் ஆயுதப் போராட்டம் ஒழிக்கப்பட்டதை அடுத்து - சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு தேவையற்றது என்று ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்ட கருத்துக் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு கவலை வெளியிட்டனர்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் விடுதலைக்கு 4 மகாநாயக்கர்கள் கோரிக்கை

கொழும்பு ,செப்.30

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்யும்படி இலங்கையின் பிரதான நான்கு மகாநாயக்கர்கள் கூட்டாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

சரத் பொன்சேகா தவறு செய்திருந்தால் அவர் நாட்டுக்காகச் செய்த சேவையை கருத்தில் கொண்டு மன்னிப்பு வழங்கும்படி மகாநாயக்கர்கள் அந்தக் கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சரத் பொன்சேகா எம்.பியின் பாரியார் அனோமா பொன்சேகா கடந்த வாரம் மகாநாயக்கர்களைச் சந்தித்து தனது கணவரை விடுதலை செய்ய உதவும்படி வேண்டுகோள் (24ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதமிருந்த தேரர் பலவந்தமாக நேற்று வானில் ஏற்றிச் செல்லப்பட்டார்

### மட்டு. ஆஸ்பத்திரியில் அவர் அனுமதி

கொழும்பு,செப்.30

மட்டக்களப்பில் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த அம்பிட்டிய சுமணரத்ன தேரரை நேற்று அதிகாலை பொலிஸார் பலவந்தமாக வானில் ஏற்றிச் சென்று மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

அண்மையில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்திருந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவைத் தாம் சந்திக்க முற்பட்ட வேளை, அமைச்சர்கள், ஊடகவியலாளர்கள், (24ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதப் போராட்டம் தோற்றுவிட்டது அரசியல் போராட்டம் தொடர்கிறது

### திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு அரியநேத்திரன் பதில்

கொழும்பு,செப்.30

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் தோல்வியில் முடிந்ததை நாங்கள் அங்கீகரிக்கின்றோம்.

ஆனால், தமிழ் பேசும் மக்களின் அரசியல் தீர்வுக்கான போராட்டம் இன்னும் முடிவடையவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தமிழ் மக்கள் தொடர்பாகத் தெரிவித்த கருத்துக்குப் பதிலளித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.



அந்த அறிக்கையில், அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தமிழ் மக்களின் அழிவுக்கும் அவல வாழ்க்கைக்கும் அரசு மாத்திரம் காரணமல்ல. பிரதான பாத்திரம், ஐக்கிய தேசியக் கட்சிதான். அன்று ஐக்கிய தேசியக் (24ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்ட மூலம்: முஸ்லிம்களுக்கான பாதிப்பை அறியக் குழு

கொழும்பு,செப்.30

அரசால் தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தில் காணப்படும் முஸ்லிம்களுக்குப் பாதகமான விடயங்களைக் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்காக குழு ஒன்றை முஸ்லிம் கவுன்ஸில் அமைத்துள்ளது.

மேற்படி திருத்தச்சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் அச்சட்டமூலம் இக்குழுவால் ஆராயப்பட்டு அதில் முஸ்லிம்களுக்குப் பாதகமாகக் காணப்படும் விடயங்கள் பட்டியலிடப்படும்.

பட்டியலிடப்படும் விடயங்களை இக்குழு முஸ்லிம் எம்.பிக்களிடமும், தேர்தல்கள் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தனவிடமும் ஒப்படைத்து அவற்றைச் சட்டமூலத்திலிருந்து நீக்குமாறு கோரிக்கை விடுக்கும்.

இந்த விடயம் தொடர்பாக முஸ்லிம் கவுன்ஸில் நேற்று முன்தினம் ரண்முத்து ஹோட்டலில் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

(23ஆம் பக்கம் பார்க்க)

## வருடம் இரண்டாயிரம் பேர் வாகன விபத்துகளில் பலி!

கொழும்பு, செப்.30

நாட்டில் இடம்பெறும் ரயில் மற்றும் வாகன விபத்துக்களில் வருடாந்தம் இரண்டாயிரம் பேர் வரை உயிரிழக்கின்றனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

12 ஆவது சிரேஷ்ட போக்குவரத்து பாடநெறியைப் பூர்த்தி செய்த 40 பொலிஸாருக்கு சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (24ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலையில் பொறியியல் பீடம்: ஜனாதிபதியைச் சந்திக்க விசேட குழு

யாழ்ப்பாணம்,செப்,30

யாழ். பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் நிறுவப்பட வேண்டும் என்று பல்வேறு மட்டங்களில் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. யாழ். பல்கலைக்கழகத் தரப்பிலும் இதில் அதிகம் ஆர்வம் காட்டப்பட்டு வருகிறது.

இதற்கான முயற்சிகளில் ஓர் அங்கமாக, யாழ். பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடம் நிறுவும் அவசியம் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேரில் வலியுறுத்தவும் அது குறித்து விளக்குவதற்கும் இங்கிருந்து விசேட குழு ஒன்று செல்லவுள்ளது.

நல்லூர், யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற யாழ். பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தை நிறுவுவது தொடர்பான கலந்துரையாடலின் போதே விசேட குழு ஒன்றை அனுப்புவது குறித்த தீர்மானம் ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தில் வடமாகாண பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கலந்துரையாடல் வடமாகாண பிரிவின் தலைவர் என்.முத்துரட்ணானந்தன் தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே

(23ஆம் பக்கம் பார்க்க)

## பலாலிக்கு தெற்கே கண்ணிகளை அகற்றியதும் மீளக்குடியமர்வதற்கு மக்களை அனுமதிக்க முடியும்

### அதற்கேற்றவாறு பாதுகாப்பு எல்லையையும் நகர்த்தலாம் என்கிறார் தளபதி

யாழ்ப்பாணம், செப்.30

உயர்பாதுகாப்பு வலயத்தின் வடக்குப் புறமாக கிழக்குப் பகுதியில் - பலாலிக்குத் தெற்குப் புறமாக கிழக்காக - கண்ணி வெடி அகற்றப்பட்டு உத்தரவாதம் தரப்படுமாயின் அந்தப் பகுதியில் மக்களை விரைவில் மீளக் குடியமர்த்த அனுமதிக்க முடியும் என்று யாழ்:மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அனுமதிக்கப்படும் பட்சத்தில், அதற்கு அமைவாக தங்களால் பாதுகாப்பு எல்லையையும் நகர்த்த முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

வலிகாமம் வடக்கின் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது மற்றும் கண்ணிவெடி அகற்றுவது தொடர்பான கலந்துரையாடல் பலாலி இராணுவ தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அங்கு வைத்தே தளபதி இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்ட மற்றைய விடயங்கள் வருமாறு:

❋'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவன றிச்சார்ட் போஜார் கருத்துத் தெரிவிக்கையில் (23ஆம் பக்கம் பார்க்க)

## சாதாரணச் சட்டங்கள் புலிகளுக்கு பொருந்தா

### அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா தெரிவிப்பு

கொழும்பு,செப்.30

கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் தொடர்பில் சாதாரண சட்டங்களை அமுல்படுத்த முடியாது - என்று அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை சாதாரண கைதிகள் போல நடத்த முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அவர்களை சாதாரண சட்டத்தின் கீழுள்ள குற்றவாளிகள்போல நடத்தமுடியாது என்பதை எந்தவொரு நாடுமே ஏற்றுக்கொள்ளும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் தொடர்பில் தகவல்களை (24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடமராட்சி கிழக்கில் மீள்குடியேறியோர் கடற்றொழில் செய்வதற்கு அனுமதி

கொழும்பு,செப்.30

வடமராட்சி கிழக்கில் மீள்குடியமர்ந்துள்ள மக்கள் கடற்றொழிலை மேற்கொள்வதற்கு நேற்று முன்தினம் முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வுகள் நேற்றுக்காலை மாமுனை, செம்பியன்பற்று, உடுத்துறை, வத்திராயன் ஆகிய கடற்பகுதிகளில் இடம்பெற்றன.

இதில் 200 கடற்றொழிலாளர்கள் நேற்றுக் காலை தமது தொழில்களை ஆரம்பித்தனர். இவர்கள் மாமுனையில் இருந்து ஆழியவளை வரை எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இன்றித் தமது தொழில்களில் ஈடுபடமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

551ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சுகத் பெரேரா நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

வடமராட்சி கிழக்கில் இதுவரையில் ஆயிரத்து 600 கடற்றொழிலாளர் குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14-சி)

# எரு லொறியில் பாலை மரங்கள்; பொலிஸாரின் சோதனையில் சிக்கின



யாழ்ப்பாணம்,செப்.30

எரு நிரப்பப்பட்டு அதற்குள் தரமான பாலை மரக்குற்றிகளை மறைத்துக் கடத்தி வந்த லொறியை சாவகச்சேரி பொலிஸார் நேற்று முற்பகல் கைப்பற்றினர்.

முல்லைத்தீவு, விசுவமடுப் பகுதியில் பாலை மரங்களை வெட்டி ஏ-9 வீதியூடாக புத்தூருக்குக் கடத்தி வந்தவேளை இந்த லொறி கனகம்புளியடியில் வைத்துப் பொலிஸாரின் சோதனையின்போது சிக்கிக்கொண்டது. லொறியின் உள்ளே மரங்களை அடுக்கி அவற்றுக்குமேல் எருவை நிரப்பி கடத்திவந்திருந்தனர். பொலிஸார் நுட்பமாக நடத்திய சேதனையின்போது இந்தக் கடத்தல் அம்பலத்துக்கு வந்தது.

இதேபோன்று கடந்த திங்கட்கிழமையும் வவுனியாவிலிந்து பாலைமரக் குற்றிகளைக் கடத்தி வந்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-16)

# சீரற்ற காலநிலை தொடரும் அபாயம் இடி, மின்னல் குறித்து எச்சரிக்கை

கொழும்பு, செப். 30

நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலை இன்னும் ஒருசில நாள்களுக்கு நீடிக்கும் என்றும் மாலை நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதால் மக்கள் இடி மின்னல் தாக்கம் குறித்து அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றும் வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் பல இடங்களில் வெள்ளநீர் தேங்கியிருப்பதுடன் மலைப் பாங்கான பிரதேசங்களில் மண் சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

சீரற்ற காலநிலையால் தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயம் இருப்பதால் மக்கள் சந்தைகளில் மரக்கறி வகைகளை கொள்வனவு செய்தல், வெளியிடங்களில் உணவு உட்கொள்ளுதல் மற்றும் சூழலை சுத்தமாக வைத்திருத்தல் தொடர்பான விடயத்தில் அவதானமாக இருக்கும்படி சுகாதார அமைச்சின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு கோரியுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் 28 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரையான 24 மணிநேர காலப் பகுதியில் 10.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், கடந்த 27 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரையுமான 24 மணி நேரத்தில் 8.1 மில்லி மீற்றர் மழையும் பதிவாகியுள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்கள யாழ்.பிராந்திய பொறுப்பதிகாரி பி.புஷ்பநாதன் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களில் சராசரி வெப்ப நிலை 31 பாகை செல்சியஸாகப் பதிவாகியுள்ளது என்றார் அவர். (ஒ-14-சி)

# கடல் விமான சேவை

கொழும்பு,செப்.30

கடல் விமான சேவையொன்றை விரைவில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

முதற்கட்டமாக இந்த விமான சேவையை நீர்கொழும்புக் களப்பில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சிப் பிரதியமைச்சர் சரத்குமார தெரிவித்துள்ளார்.

சுற்றுலாக் கைத்தொழிலை உயர்த்துவதே இதன் பிரதான நோக்கம் என்றும் பிரதியமைச்சர் கூறியுள்ளார். (ஒ-சி)

# கோபுரத்தில் ஏறி நின்று ஆர்ப்பாட்டம் நடத்திய நபருக்கு பிணை

கொழும்பு,செப்.30

கொழும்பு விஹாரமகாதேவி பூங்காவிற்கு அருகிலுள்ள விளம்பரக் கோபுரத்தில் ஏறி நின்று ஆர்ப்பாட்டம் நடத்திய நபரை நீதிமன்றம் நேற்று பிணையில் விடுவித்துள்ளது.

வாடகைக் கார் மேசடி விவகாரமொன்றில் சம்பந்தப்பட்ட இந்த நபரே கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். (ஒ-10)

# பாம்பு தீண்டிய பெண்ணின் நிலை மோசம்; பார்வை பார்த்ததால் வந்தது வினை

தென்மராட்சி, செப். 30

பாம்பு கடித்ததற்குப் பார்வை பார்த்துக் குணமாக்க முயன்ற பெண் மூன்று தினங்களின் பின்னர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டார்.

சரசாலை தெற்கில் கடந்த 23 ஆம் திகதி வியாழக்கிழமை பாம்பு தீண்டிய பெண்ணுக்குப் பார்வை பார்த்து வீட்டில் வைத்திருந்தனர். எனினும் மூன்று தினங்களில் நிலைமை மேசமடைந்தது. அதைத் தொடர்ந்து கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி வைத்தியசாலையில் அந்தப் பெண் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்ற நிலையில் நிலைமை மேலும் மோசமடையவே அம்புலன்ஸ் மூலம் யாழ். பேதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

சரசாலை தெற்கைச் சேர்ந்த வல்லிபுரம் கந்தப்பிள்ளை (வயது 60) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார்.

இதேவேளை பாம்பினால் கடியுண்ட மேலும் இருவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சாவகச்சேரி சிவன் கோயிலடியைச் சேர்ந்த எஸ்.நடராசா (வயது 72) சாவகச்சேரி சப்பச்சிமாவடியைச் சேர்ந்த நவரத்தினம் ஜெயக்குமார் (வயது 25) ஆகியோரே அந்த இருவரும் ஆவர். (ஒ-207)

# ஒக்., நவ. மாதங்களில் கடும் மழையால் வெள்ள அனர்த்தம் ஏற்படும் சாத்தியம்

## வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, செப். 30

எதிர்வரும் மாதங்களில் (ஒக்டோபர், நவம்பர்) கடுமையான மழை பெய்யலாம் என்றும் இதனால் வெள்ள அனர்த்தம் ஏற்படும் சாத்தியம் உள்ளது என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது.

பருவக்காற்று அதன் இறுதிக் கட்டத்தில் இருப்பதால் பருவக்காற்று இடை மழை விரைவில் வரக்கூடும். இதனால் பிற்பகலிலும் மாலை வேளையிலும் நாட்டின் சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி டி.ஏ.ஜயசிங்க ஆராச்சி கூறினார்.

காற்று வீசுவது தணிந்தமையால்தான் மழை பெய்கிறது. ஆனால் இது சுழல் காற்றாக மாறவில்லை. நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய இடங்களில் அதிக மழை பெய்யலாம். மேல் மாகாணத்தைப் பொறுத்தவரையில், இடி மின்னலுடன் மழை பெய்யும். சில பகுதிகளில் கடும் மழை பெய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, மழை உள்நாட்டுப் பகுதியை நோக்கி நகர்ந்து வருவதால் மண்சரிவு அபாயம் ஏற்படலாம். அனர்த்தம் எதிர்பார்க்கப்படும் இடங்களில் வசிப்போருக்கு எச்சரிக்கை விடுக்கப்படும். தேவையெனில் அவர்கள் வேறு இடங்களுக்கு அனுப்பப்படலாம் - என்று தேசத்தைக் கட்டியெழுப்பும் ஆய்வு நிறுவனப் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.பீ.ஜெ.பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதுவரையில் மண்சரிவுச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது. அத்துடன் அவ்விடத்திலிருந்து சுமார் 30 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன என்றும் அவர் கூறினார்.

# பட்டப்பகலில் வீடு புகுந்த கொள்ளையர் ஆயுதமுனையில் நகைகள், பணம் சூறை

## மட்டுவில் தெற்கில் சம்பவம்

யாழ்ப்பாணம்,செப்,30

வீட்டில் தனிமையில் இருந்த பெண்ணை ஆயுத முனையில் அச்சுறுத்தி பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் மட்டுவில் தெற்கில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கணவன் வெளியில் சென்ற வேளை வீட்டினுள் நுளைந்த இனந்தெரியாத இருவர் ஆயுத முனையில் தனிமையில் இருந்த பெண்ணை அச்சுறுத்தி நகைகளை அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்றுவிட்டனர்.

நீளக் காட்சட்டை அணிந்திருந்த அவர்கள் மேட்டார் சைக்கிளில் வந்தனர் என்றும் மேலும் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தியே நகைகளைக் கொள்ளையடித்தனர். என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாங்கள் படையினர் என்றும் வீட்டைச் சோதனையிட வேண்டும் என அவர்கள் அந்தப் பெண்ணை அச்சுறுத்தினர் என்றும் கூறப்பட்டது.

தாலிக்கொடி மற்றும் ஒருலட்சத்துக்கும் மேற்பட்ட பணமும் கொள்ளையிடப்பட்டதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-16-131)

# இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் குறித்து சர்வதேச சமூகத்துக்கு அக்கறையில்லை

## அஷ்ரப் நினைவுதினக் கூட்டத்தில் ஹக்கீம் குற்றச்சாட்டு



கொழும்பு, செப். 30

இந்தியா மட்டுமன்றி, சர்வதேச நாடுகளும் தற்போது நடைபெற்று வரும் மீள்குடியேற்ற விவகாரத்தை உற்றுநோக்குகின் றன. ஆனால், இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் மீள்குடியேற்ற விவகாரம் எடுபடவில்லை. ஏனென் றால், அதுபற்றி உலகநாடுகளுக்கு அக்கறை இல்லை. முஸ்லிம் காங்கிரஸைத் தவிர வேறு யார் பேசினாலும் இந்த விடயம் எடுபடப்போவதில்லை.

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கூறினார்.

அண்மையில் புத்தளம், ஹசைனியாபுரத்தில் நடைபெற்ற மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரபின் நினைவு தினக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரவூப் ஹக்கீம் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இருக்கின்ற அரசியல் அதிகாரத்தை பயன்படுத்துவது எவ்வாறு? இதற்கு இருக்கின்ற பிரயோக வலு என்ன? என்ற கேள்வி எழுவது இயல்பானது.

இதற்கான பதில், கட்சிக்குக் கிடைத்துள்ள ஆசனங்கள்தான் எங்களது வலு என்பதும், அடுத்து நடக்கப்போகின்ற தேர்தல்களின் முடிவுகள்தான் எங்களது அரசியல் அதிகாரத்தின் வீச்சைத் தீர்மானிக்கப் போகின்றன என்பதும் ஆகும்.

நீண்டகாலமாக வடக்கில் இடம்பெயர்ந்து வாழும் மக்களை வேண்டுமென்றே பாகுபடுத்திக் காட்டுகின்ற புதிய அணுகுமுறை மிகவும் வேதனையளிக்கின்றது. இந்தப் புனர்வாழ்வு, மீள்குடியேற்ற விவகாரத்தின் பின்னணியில் ஏதோ சதிகள் இருக்கின்றன என்றும் தோன்றுகின்றது.

வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்த அரசு தீர்மானித்திருக்கிறது என அண்மையில் அமைச்சர் தினேஷ் குணவர்தன விடுத்திருந்த ஊடக அறிக்கை ஒன்றில் நான் பார்த்தேன்.

ஜனாதிபதி நாடு திரும்பியதும் [illegible] வடக்கில் தேர்தல் நடத்தப்போவதைப் பற்றி கூறப்போகிறார் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

வட மாகாணத்திற்கான இந்தத் தேர்தலை முன்னரே நடத்துவதாகக் கூறப்பட்டது. அது பின் தள்ளப்பட்டு, இப்பொழுது மீண்டும் அதைப் பற்றி பேசத் தொடங்கியிருக்கிறார்கள்.

அத்தோடு, ஓர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அடுத்த ஜனவரி, பெப்ரவரி மாதமளவில் நாடு தழுவிய ரீதியில் நடக்கவிருக்கிறது. 'சுடுகிறது மடியைப் பிடி' என்றவாறு அரசு இவ்விரு தேர்தல்களை நடத்த அவசரம் காண்பிப்பதாகத் தோன்றுகின்றது. இவ்விரு தேர்தல்களுமே எங்களைப் பொறுத்தவரை மிகப் பெரும் சவால்களாகும்.

அரசியல் சதுரங்கத்தில் நாம் காய்களை நகர்த்துகின்றோம். சில காய்களை நகர்த்தி இருக்கின்றோம். இது ஓர் அரசியல் சதுரங்க ஆட்டமே. இதில் யார் வெற்றி பெறப் போகின்றார்கள்? ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெற்றி பெற வேண்டும்; முஸ்லிம் சமூகமும் மொத்தத்தில் வெற்றி பெறவேண்டும்; அரசும் வெற்றி பெறவேண்டும். அதே வேளையில் ஏனைய சமூகங்கள் தோற்கவும் கூடாது. எந்தச் சமூகமும் தோற்க வேண்டும் என்பது முஸ்லிம் காங்கிரஸின் விருப்பமும் அல்ல.

முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் சரணாகதி அரசியலை செய்ததில்லை. செய்யவும் மாட்டாது. சமூகத்திற்கு எத்தகைய பாதிப்பும் ஏற்பட நாம் இடமளிக்க மாட்டோம். இடம்பெயர்ந்த மக்களின் எதிர்காலம் சீரும் சிறப்புமாக இருப்பதற்கு உறுதுணையாய் இருப்பது, நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் சிதறி வாழும் ஒவ்வொரு முஸ்லிமினதும் தார்மீக கடமையாகும்.

இப்படி அவர் தெரிவித்தார். (உ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் போரில் பாதிக்கப்பட்ட 29 அரச ஊழியருக்கு நஷ்ட ஈடு

## அமைச்சர் டியூ குணசேகர நேற்று வழங்கினார்

வவுனியா,செப்.30

வன்னியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 29 அரச ஊழியர்களுக்கு நஷ்டஈடாக 37 லட்சம் ரூபாவுக்கான காசோலைகளை சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டியூ குணசேகர நேற்று வழங்கினார்.

வவுனியாவில் வடமாகாணத்துக்கான புனர்வாழ்வு அதிகாரசபையின் (ரெபியா) பிராந்திய அலுவலகத்தைத் திறந்து வைக்கும் வைபவத்திலேயே இக்காசோலைகள் வழங்கப்பட்டன. இந்த வைபவத்தில் அமைச்சர் பேசும்போது கூறியவை வருமாறு:-

சரணடைந்த நான்காயிரம் விடுதலைப் புலி உறுப்பினர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மேலும் போர்க் காலத்தில் ஊனமடைந்தோர், பரீட்சை எழுதவேண்டிய மாணவர்கள், வயோதிபர்கள், பெண்கள், சிறுவர்கள் உள்ளிட்ட 12 ஆயிரம் பேர் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளனர்.

### 402 பேர் விடுவிப்பு

இதேவேளை, இன்று வியாழக்கிழமை வவுனியா புனர்வாழ்வு நிலையங்களில் தங்கியுள்ள 402 பேர் விடுவிக்கப்படவுள்ளனர். அத்துடன் மேலும் இரண்டாயிரம் பேரை விரைவில் விடுவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வடக்கு மக்களுடைய நலன் கருதி இந்தப் பிராந்திய அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. எனது அமைச்சு மூன்று முக்கிய பணிகளை மேற்கொண்டுள்ளது. புனர்வாழ்வு அதிகாரசபையின் ஊடாக நஷ்டஈடு வழங்கல், சரணடைந்த புலி உறுப்பினர்களுடைய புனர்வாழ்வுப் பொறுப்பு, நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் உள்ள 30 ஆயிரம் கைதிகளுடைய பராமரிப்பு நிர்வாகம் என்பன என்னிடம் உள்ளன.



கடந்த ஐந்து மாத காலத்தில் மிகப் பெரிய பணிகளை மேற்கொண்டுள்ளோம். பொதுமக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்குடன் இந்தப் பிராந்திய அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் போரினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நஷ்டஈடு வழங்குவதாகும்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் வடக்கே எனது அமைச்சு நடத்திய நடமாடும் சேவையில் பல அனுபவங்களைக் கண்டோம். நடமாடும் சேவைக்கு 9ஆயிரம் பேர் சமுகமளித்திருந்தனர். அதில் 36 ஆண்கள் மட்டுமே வந்திருந்தனர். ஏனையவர்கள் அனைவரும் இளம் பெண்கள். அவர்களில் விதவைகளும் அடங்கியிருந்தனர். இது எங்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. சமூகத்தின் அடிப்படையில் பல பிரச்சினைகள் உள்ளன என்பதை உணர முடிகின்றது. தேவைகள் நிவர்த்தி செய்யப்படவேண்டும். பொருளாதார வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதை உணர்த்துகின்றது - எனவும் அமைச்சர் இங்கு தெரிவித்தார். (ஒ-சி)

# இலங்கைத் தமிழ் தம்பதியர் ஆஸியில் வீட்டுக் காவலில்

கொழும்பு,செப்.30

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இலங்கைத் தமிழ் தம்பதியினர் ஆஸ்திரேலிய பாதுகாப்புப் புலனாய்வுப் பிரிவால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் இவர்களது இரண்டு குழந்தைகளுடன் ஆஸ்திரேலிய குடிவரவுத் திணைக்களத்தால் கிறிஸ்மஸ்தீவு தடுப்பு முகாமில் இருந்து விலாவூட் குடிவரவுத் தடுப்பு நிலையத்துக்கு மாற்றப்பட்டனர்.

இப்போது இவர்கள் சிட்னியில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வெளி உலகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்த முடியாதவாறு வீட்டைச் சுற்றி பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

காவலில் வைக்கப்பட்டுள்ள பெண் கடந்த ஒக்டோபர் மாதம் ஒஸ்யானிக் வைகிங் கப்பலில் வந்த 78 இலங்கை அகதிகளுள் ஒருவராவார். ஆஸ்திரேலிய பாதுகாப்புப் புலனாய்வுப் பிரிவினரால் வீஸா மறுக்கப்பட்ட நால்வரில் ஒருவராகவும் அந்தப் பெண் உள்ளார்.

இலங்கையில் வடக்கில் புலிகளின் நீதிமன்றத்தில் பணிபுரிந்த புலி உறுப்பினர் என்று இந்தப் பெண் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

இவரது கணவர் கடந்த வருட நடுப்பகுதியில் வேறொரு படகு மூலம் ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுக்குள் நுழைந்தவராவார். இவரும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவர் என்று கருதப்படுகின்றார். இதனாலேயே இந்தத் தம்பதியினர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஒ-சி)

# உயர் கல்விக்கு தெரிவாகும் மாணவர்களுக்கு 'லப்ரொப்'

## அமைச்சர் திஸநாயக்க ஆலோசனை

கொழும்பு,செப்.30

உயர் கல்வி நிலையங்களுக்கு அனுமதி பெற்றுத் தமது கற்கையை ஆரம்பிப்போருக்குத் தனித்தனி 'லப்ரொப்'(மடிக் கணனி) வழங்குதல் தொடர்பாகத் தாம் பரிசீலனை மேற்கொண்டிருப்பதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழி மூலமான கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கான திட்டத்தின் ஒரு பகுதியே இத் திட்டமாகும்.

இம்மாணவர்கள் 4 மாதங்கள் ஆங்கிலக் கற்கைநெறிகளை மேற்கொள்ளுமாறு பணிக்கப்படுவர்.

இப்பயிற்சிநெறி இணையத்தள நேரடித் தொடர்புகளின் மூலம் வழங்கப்படும். எனவே இவ்வாறு குறித்த மாணவர்களுக்கு 'லப்ரொப்' வழங்குவதன் மூலம் அவர்களின் கற்கையை இலகுபடுத்த முடியும். மாணவர்களின் செயற்றிறனைக் கணித்துக் கொள்வதற்கு ஒவ்வொரு வருடமும் காலாண்டிறுதிப் பரீட்சை நடத்தப்படும். இப்பரீட்சையில் தேர்ச்சி பெறாதோர் குறித்த பயிற்சிநெறியை அடுத்த ஆண்டிற்குத் தொடர அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ரி)

# குறிகாட்டுவான்-நெடுந்தீவு படகுச் சேவை நேரமாற்றம்

யாழ்ப்பாணம்,செப்.30

குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்குப் புறப்படும் பயணிகள் படகுச்சேவை நாளை வெள்ளிக்கிழமை முதல் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்குக் காலை 7 மணிக்குப் புறப்படும் பயணிகள் படகு முற்பகல் 10.30 மணிக்கே நெடுந்தீவுச் சேவையில் ஈடுபட்டுவந்தது. இந்த நேரத்தில் இப்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இனிமேல் இந்தப் படகுச் சேவை குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கு காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

இந்தப் பயணிகள் படகு நெடுந்தீவில் இருந்து பிற்பகல் 2 மணிக்கும் குறிகாட்டுவானிலிருந்து மாலை 4 மணிக்கும் தனது இரண்டாவது சேவையை ஆரம்பிக்கும்.

அத்துடன் இனிமேல் சனி, ஞாயிறு தினங்களிலும் இந்தப் பயணிகள் படகு இரண்டு தடவைகள் மேற்படி நேர ஒழுங்கில் சேவையில் ஈடுபடும். இதுவரை காலமும் சனி, ஞாயிறு தினங்களில் காலை 7 மணிக்கு நெடுந்தீவிலிருந்து புறப்படும் படகு மாலை 4.30 மணிக்கு மீண்டும் குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கு திரும்பி வந்தமை குறிப்பிடத்தக்கது. (த-7)



ஐக்கிய நாடுகள் சபையின் 65ஆவது மாநாட்டில் கலந்து கொள்ள நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று அதிகாலை நாடு திரும்பினார். கட்டுநாயக்க விமான நிலையத்தில் முன்னாள் ஐ.தே.கட்சி முக்கியஸ்தர்களான அஸாத் சாலி, அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் ஜனாதிபதியை வரவேற்கின்றனர்.

# கொழும்புக்கான இ.போ.ச.பஸ்சேவை காரைநகரில் இருந்து நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.30

காரைநகரில் இருந்து கொழும்புக்கான இ.போ.ச பேருந்து சேவைகள் நாளை வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. இ.போ.சவின் வடபிராந்திய முகாமையாளர் கே.கணேசபிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

நாளை ஆரம்பிக்கப்படும் இச்சேவை காரைநகர் துறைமுகத்திலிருந்து மாலை 5.45 மணிக்கு 782ஆம் இலக்கப் பாதையூடாக யாழ்ப்பாணம் வந்து இங்கிருந்து இரவு 8 மணிக்கு கொழும்புக்குப் புறப்படவுள்ளது.

இப்பேருந்து சேவைக்குரிய ஆசனப்பதிவுகளை இ.போ.ச காரைநகர் சாலை மற்றும் யாழ். பேருந்து நிலையத்திலும் மேற்கொள்ள முடியும்.

அத்துடன் இதற்கான கட்டணமாக 615 ரூபா அறவிடப்படும். அதேவேளை பதிவுக்கட்டணமாக 50 ரூபாவும் அறவிடப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-16)

# சிற்றுண்டிகள் பறிமுதல்

தென்மராட்சி,செப்.30

சாவகச்சேரி நகர்ப் பகுதி உணவு கையாளும் நிலையங்களில் அச்சிட்ட தாள்களில் வைக்கப்பட்டிருந்த சிற்றுண்டிகள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன.

கடந்த திடங்கட்கிழமை சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரும் சாவகச்சேரி பொலிஸ் நிலைய விசேட சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவினரும் இணைந்து நடத்திய திடீர் பரிசோதனையின்போது சிற்றுண்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

அத்துடன் வர்த்தக நிலையங்களில் காணப்பட்ட காலாவதியான பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன. (ஒ-207)

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை - யாழ்ப்பாணம்
புரட்டாதி 29, 2010
பங்குச் சந்தைச் சுட்டிகள்

அனைத்துப்பங்கு(ASPI) 6,929.90↑

மிலங்கா(MPI) 7,347.78↑

உரிமைமுதல் தகவல்கள்

வியாபாரப்புரள்வு(Rs.) 3,268.94Mn

பங்குகளின் அளவு(No.) 143.33Mn

வியாபாரம்(No.) 31,779

சந்தை முதல்(Mkt.Cap)Rs. 2,286.54Bn

விலை அசைவுகளின் அடிப்படையில்

அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.

சிங்க லங்கா 220.00

ரேணுகா அக்ரீ 6.30

மாறவில ரீசொட்ஸ் 16.80

இண்டர்ஸ்ரியல் அஸ்பா(f) 390.00

விதுல்லங்கா 14.00

குறைவு(Top 5 losers) - விலை Rs.

பிறிண்ட் கெயார் 120.00

போகல கிறபை(f)ற் 75.90

சிங்கர் இண்டஸ்ரீ 150.00

மெற்றோபொலிரன் ரீசோசஸ் 48.80

சிலிங்கோ இன்சூரன் 440.40

மேலதிக தகவல்கள் -www.csc.lk

# முதியோர் வார நிகழ்வு நாளை ஆரம்பம்

கைதடி முதியோர் இல்லத்தில் சர்வதேச முதியோர் வார நிகழ்வுகள் நாளை முதலாம் திகதி தொடக்கம் நடத்தப்படவுள்ளன.

முதல் நாள் நிகழ்வுகள் இல்ல மண்டபத்தில் வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் க.சிவகரன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, இலங்கை வங்கியின் வடக்கு மாகாண உதவிப் பொதுமுகாமையாளர் கே.ஈ.டி.சுமணசிறி ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர். (ஒ-207)

# முறிகண்டியில் கட்டப்படும் ஹோட்டலை அரசு எடுத்து யாத்திரிகர் மடமாக்கவேண்டும்

## ஆளுநருக்குக்கான அறிக்கையில் சங்கரி வலியுறுத்தல்

யாழ்ப்பாணம்,செப்.30

முறிகண்டிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் அமைக்கப்பட்டு வரும் ஹோட்டல் விடுதிக்கான கட்டடத்தை அரசுதன் பொறுப்பில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதனை யாத்திகர் தங்குமிடமாக மாற்றி அமைக்க வேண்டும்.

இவ்வாறு வற்புறுத்தியுள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி.

அவர் வடமாகாண ஆளுநருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஹோட்டல் திறக்கப்படுவதை உடனடியாகத தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என வற்புறுத்தியுள்ள ஆனந்தசங்கரி, ஹோட்டலின் உரிமையளாருக்கு போதுமான அளவு இழப்பீடு வழங்கவேண்டும். அதனைக் கொண்டு கோயில் அமைந்துள்ள இடத்துக்கு அப்பால் புதிய கட்டடம் ஒன்றை அமைக்கும்படியும் அங்கு மரக்கறி உணவே பரிமாறவேண்டும். எக்காரணம் கொண்டும் மதுபானம் பாவிக்கப்படலாகாதெனவும் நிபந்தனை விதிக்கவேண்டும் என்றும் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்துக்களாலும் பௌத்தர்களாலும் மிகப் புனிதமாகக் கருதப்படும் ஓர் இடத்தில் ஹோட்டல் ஒன்று கட்டப்படுவது மிகவும் கவலைக்குரியது. அதுவும் கோயிலின் மிக அருகில் கட்டப்படுவது மோசமான செயலாகும்.

இக்கட்டடம் ஒரு மாடிக் கட்டடமாகவிருக்கின்றது.

அதேவேளை பிள்ளையார் சுவாமியோ ஒரு சிறு கொட்டிலிலேயே அமர்ந்திருக்கிறார். இது பிள்ளையாரின் விருப்பம் என்றே அப்பகுதி மக்கள் கருதுகிறார்கள்.

பெரும் பணச்செலவில் முன்யோசனையின்றி எவருக்கும் தெரியாத விதத்தில் இப்படியான ஒரு கட்டடம் கட்டப்படுவது துரதிஷ்டமாகும். இந்து கலாசார திணைக்களமும் இந்து மன்றங்களும் பௌத்த நிறுவனங்களும் இந்த விடயத்தை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரவேண்டும்.

இவ்வாறு ஆனந்தசங்கரி தமது வலியுறுத்தியிருக்கிறார். (ப)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீவிரவாத முகாம்களை அழிக்காவிடின் பாகிஸ்தானுள் நுழைந்து தாக்குவோம்!

## அமெரிக்க இராணுவத் தளபதி எச்சரிக்கை

வாஷிங்ரன், செப்.30

பாகிஸ்தானிலுள்ள பழங்குடியினப் பகுதியில் தஞ்சம் புகுந்திருக்கும் வெளிநாட்டுத் தீவிரவாதிகள் முகாம்களை தகர்க்க நீங்கள் மறுத்தால், எங்கள் தரைப்படை உங்கள் நாட்டுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி தீவிரவாதிகளின் முகாம்களை அழிக்கும் என அமெரிக்க இராணுவத் தளபதி ஜெனரல் டேவிட் எச். பெட்ராயஸ் பாகிஸ்தான் அரசை எச்சரித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள நேட்டோ இராணுவத்தின் தளபதியான அமெரிக்க இராணுவ ஜெனரல் பெட்ராயஸ் நிருபர்களிடம் குறிப்பிடுகையில்,

பாகிஸ்தானில் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதி அல்-குவைதா, தலிபான் தீவிரவாதிகளின் சொர்க்கமாக இருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்க பாகிஸ்தான் அரசு தயங்குகிறது.

இது அமெரிக்க அதிகாரிகள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. தீவிரவாதிகளை ஒடுக்கும் விடயத்தில் பாகிஸ்தானின் பங்கு இன்னும் கூடுதலாக இருக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதியான வடக்கு வசிரிஸ்தானில் தீவிரவாதிகளின் கட்டமைப்பைத் தகர்க்க பாகிஸ்தான் மறுத்தால், அமெரிக்க தரைப்படை பாகிஸ்தானுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தும்.

தீவிரவாதிகள் மீது பாகிஸ்தான் அரசு தாக்குதல் நடத்தாமல் இருப்பதால்தான், அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல்களை அதிகரித்து இருக்கிறது. கடந்த 24 நாட்களில் 20 ஏவுகணைத் தாக்குதல்கள் நடந்துள்ளன.


ஏவுகணைத் தாக்குதல்கள் தவிர, மற்ற வழிகளிலும் போர் விரிவடைந்து வருகிறது. அமெரிக்க ஹெலிக்கொப்டர்கள் பாகிஸ்தானுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியதில் 50 தலிபான் தீவிரவாதிகள் பலியாயினர்.

பாகிஸ்தானுக்குள் புகுந்து தாக்குதல் நடத்துவதற்காக தனி நடவடிக்கை கொமாண்டர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் தாக்குதலுக்கான திட்டத்தை வரையறுத்து வருகிறார்கள். இவற்றுக்கு ஒபாமா ஒப்புதல் பெறப்பட இருக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிலுள்ள தீவிரவாதிகளின் 150இற்கும் மேற்பட்ட முகாம்களில் தாக்குதல் நடத்தி, அவற்றை அழிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

(சி)

## மின்னலாக பறந்த ரயில் புதிய சாதனை படைத்தது



பீஜிங், செப்.30

சீனாவில் அதிவேக ரயில் இயக்கப்பட்டு வருகிறது. கடந்த 2008ஆம் ஆண்டு ஜூன் 24ஆம் திகதி பீஜிங் - தியான்ஷின் நகரங்களுக்கிடையே மணிக்கு 394.3 கி.மீற்றர் வேகத்தில் இயக்கப்பட்டது. இதன் மூலம் உலகிலேயே அதிவேக ரயில் என்ற சாதனையை படைத்தது.

தற்போது அதை விட அதிக வேகமாக இயங்கக்கூடிய ரயிலை சீனா உருவாக்கியுள்ளது. இந்த ரயில் ஷாங்காய் - ஹாங்ஹீ நகரங் களுக்கிடையே பரிசோதனை ஓட்டம் நடத்தப்பட்டது.

அப்போது மணிக்கு 416.6 கி. மீற்றர் மின்னல் வேகத்தில் பறந்து சாதனை படைத்தது. இந்த ரயில் மணிக்கு 350 கி.மீற்றர் வேகத்தில் செல்லும் அளவுக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இது ஷாங்காய் - ஹாங்ஹீ நகரங்களுக்கிடையே 202 கி.மீற்றர் தூரத்தை 40 நிமிடங்களில் கடந்து சாதனை படைத்துள்ளது.

இதற்கு முன்னர் இந்தத் தூரத்தை ரயில்கள் 2 மணி நேரத்தில் கடந்து சென்றன. தற்போது மிகக் குறைந்த நேரத்தில் சென்றதன் மூலம் உலகிலேயே மிக நீளமான அதிவேக விரைவு ரயில் என்ற பெருமையை இது பெற்றுள்ளது.

## இந்திய எல்லைவரை சீனா ரெயில் பாதை அமைக்கிறது

பீஜிங்,செப்.30

சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் திபெத்தில் ரெயில் போக்குவரத்தை தொடங்குவதற்கான கட்டுமானப்பணிகளை தொடங்கியுள்ளது. 10 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் இந்தப் பணிகள் நடந்து வருகின்றன.

## அல் குவைதாவின் முக்கிய தலைவர் பலி!

இஸ்லாமாபாத், செப். 30

பாகிஸ்தானின் வட்கிழக்குப் பகுதியில் அமெரிக்கப் படைகள் தாக்கியதில் அல்- குவைதா பயங்கரவாத அமைப்பின் முக்கிய தலைவர் கொல்லப்பட்டார்.

பாகிஸ்தான் வடகிழக்கு மாகாணமான வடக்கு வசிரிஸ்தானில் அல்-குவைதாவுக்கு எதிராக அமெரிக்கப் படைகள் நடத்திய தாக்குதலில் அல்-ஃபதா (வயது - 50) எனும் முக்கிய தலைவர் பலியானார் என ஜிங்கூவா பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது.

பலியான அல்-ஃபதா கடந்த 1996ஆம் ஆண்டு ஏமனிலிருந்து ஆப்கானிஸ்தானுக்கு இடம் பெயர்ந்தவர். முதலில் தலிபான் அமைப்பிலும் பின்னர் அல்- குவைதா அமைப்பிலும் சேர்ந்து முக்கிய கொமாண்டராகப் பணியாற்றி வந்தார் என்றும் அந்த பத்திரிகை தெரிவித்துள்ளது.

உலக அரங்கில்



கியூபாவில் இராணுவப் புரட்சிக் குழு அமைக்கப்பட்டதன் 50ஆவது ஆண்டு தினத்தையொட்டி தலைநகர் ஹவானாவில் நடைபெற்ற விழாவில் கலந்துகொள்ள முன்னாள் ஜனாதிபதி பிடல் கஸ்ட்ரோ வரும்போது...

# ஆப்கானிஸ்தானில் தற்கொலைப்படை தாக்கு; துணை ஆளுநர், புதல்வர் உட்பட 6 பேர் பலி!

காபூல், செப். 30

ஆப்கானிஸ்தானில் செவ்வாய்க்கிழமை தற்கொலைப் படை வீரர் நடத்திய தாக்குதலில் கஜினி மாகாணத் துணை ஆளுநர் காஸிம் அல்லயார், அவரது புதல்வர், பாதுகாவலர்கள் உட்பட 6 பேர் கொல்லப்பட்டனர்.

கஜினி மாகாணத்தில் காலையில் துணை ஆளுநர் காஸிம் அல்லயார், வீட்டிலிருந்து அலுவலகத்துக்கு காரில் சென்று கொண்டிருந்தார். அவருடன் அவரது புதல்வரும், மூன்று பாதுகாவலர்களும் சென்றனர்.

அப்போது இடுப்பில் குண்டுகளைக் கட்டிக்கொண்டு தனது வாகனத்தில் வந்த தீவிரவாதி, துணை ஆளுநரின் காரின் மீது தனது காரை மோதியுள்ளார். அத்துடன், குண்டுகளை வெடிக்க வைத்துள்ளார்.

இவற்றில் சம்பவ இடத்திலேயே, துணை ஆளுநர், அவரது புதல்வர், கார்ச் சாரதி, பாதுகாவலர்கள் மூவர் ஆகியோர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

இந்தத் தீவிரவாதத் தாக்குதலை எந்த தீவிரவாத அமைப்பு நடத்தியது என்பது தெரியவில்லை. இதற்கு எந்த அமைப்பும் உடனடியாகப் பொறுப்பேற்கவில்லை.

எனினும் தலிபான்கள்தான் இதை நிகழ்த்தியிருப்பார்கள் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். ஏற்கனவே இரு மாதங்களுக்கு முன்னர் காஸிம் அல்லயாரை தீவிரவாதிகள் தாக்க முயற்சித்தனர். ஆனால், தீவிரவாதிகளின் முயற்சி தோல்வியைத் தழுவியது.

இதைத்தொடர்ந்து அவரைத் தாக்குவதற்குச் சரியான தருணத்துக்காகக் காத்திருந்த தீவிரவாதிகள், இப்போது அவரை தீர்த்துக் கட்டியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் பொதுவாகத் தங்களுக்கு எதிராகச் செயல்படும் அரசு அதிகாரிகளைத் தலிபான்கள் குறிவைக்கின்றனர்.



குண்டுவெடித்த இடத்தில் சோதனை நடத்தும் பொலிஸார்

## ஆஸியில் புதிய அரசு பதவியேற்பு

மெல்போர்ன், செப்.30

ஆஸ்திரேலியாவில் தொழிலாளர் கட்சி தலைமையிலான புதிய கூட்டணி அரசு கடந்த செவ்வாய்க்கிழமை பதவியேற்றுக் கொண்டது.

கான்பெராவில் 43ஆவது நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள் அனைவரும் பதவியேற்றுக் கொண்டனர். உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ரொபர்ட் பிரெஞ்ச், உறுப்பினர்கள் அனைவருக்கும் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்றத்தின் மூத்த உறுப்பினர் மதில்டா கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார். தமது உரையில் அவர், ''ஆஸ்திரேலியா ஒரு ஐக்கிய, சமரச, பாரம்பரிய கலாசார நாடு. நாட்டின் இந்த மாண்பை, தொடர்ந்து கட்டிக்காக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாடுபடவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் பிரதமர் ஜூலியா கில்லார்ட், எதிர்க்கட்சித் தலைவர் டோனி அப்போட் ஆகியோரும் பங்கேற்றனர்.

இதில் பேசிய ஜூலியா கில்லார்ட், தமது தலைமையில் புதிதாகப் பதவியேற்றுள்ள சிறுபான்மைக் கூட்டணி அரசுக்கு, நாட்டின் நலன் கருதி எதிர்க்கட்சி ஒத்துழைப்பு அளிக்கவேண்டும் என்று கோரினார்.

நாடாளுமன்ற முறைமையில் சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டது. ஆனால் அவற்றை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. இதற்காக வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் கடந்த 70 ஆண்டுகளில் முதல் தடவையாக தொங்கு நாடாளுமன்றம் உருவானது. எனினும், ஸ்திரமான அரசு அமையவேண்டும் என்றே நாட்டு மக்கள் விரும்புகின்றனர் என்றும் பிரதமர் ஜூலியா கில்லார்ட் தெரிவித்தார்.

தமது கட்சி தலைமையில் உருவாகியுள்ள கூட்டணி, கௌரவமான உடன்பாட்டின் அடிப்படையில் உருவாகியுள்ள கூட்டணி என்றும் அவர் பெருமிதம் தெரிவித்துக் கொண்டார்.

## முன்னாள் அமெ. ஜனாதிபதி கார்ட்டர் வைத்தியசாலையில்

வாஷிங்ரன்,செப்.30

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மிகார்டர் திடீர் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியாக இருந்தவர் ஜிம்மி கார்ட்டர் (வயது - 86) (1977-81). இவர் கிளைவ்லாண்ட் மாகாணத்தில் தான் எழுதிய புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வதற்காகச் சென்றார்.

அவருக்கு கடுமையான வயிற்று வலி ஏற்பட்டு உடனடியாக அட்லாண்டா கொண்டுவரப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

முன்னாள் ஜனாதிபதியாக இருந்தபோதிலும் இவர் தற்போதும் அரசியலில் தீவிரம் காட்டி வருகிறார். தற்போது வெளிநாடுகளில் நடைபெறும் பொதுத்தேர்தல் பார்வையாளராகச் செயல்பட்டு வருகிறார்.

# மெக்ஸிக்கோ நிலச்சரிவில் நூற்றுக்கணக்கானோர் பலி!

மெக்ஸிக்கோசிட்டி, செப். 30

மெக்ஸிக்கோவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி நூற்றுக்கணக்கானோர் பலியாயினர். 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வீடிழந்தனர்.

மெக்ஸிக்கோவிலுள்ள ஒகாசகா மாகாணத்தில் கனமழை பெய்து வருகிறது. இங்கு சான்டா மரியா நகரில் ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு பெய்த தொடர் மழையால் அதிகாலை 4 மணியளவில் திடீர் என நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் சிக்கி நூற்றுக்கணக்கானோர் பலியாகியுள்ளனர். மேலும் பலர் மண்ணில் புதைந்திருக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இது குறித்து அம்மாகாண ஆளுநர் யூலிசிஸ்ரூயிஸ் கூறுகையில், ''நிலச்சரிவில் சிக்கி 500 அல்லது 600 பேர் வரை இறந்திருக்கலாம். மீட்புப்பணிகள் நடைபெற்று வருகின்றன. நிலச்சரிவால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது, மீட்புப்பணியில் தேசிய பொலிஸாரும், உள்ளூர் மக்களும் ஈடுபட்டு வருகின்றனர்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அத்தநாயக்காவின் அரசியல் சித்தாந்தம்

தமிழ் மக்கள் மத்தியில் இப்போது ஆயுதக் குழுக்கள் எதுவும் செயற்படவில்லை. ஆகையால் மத்தியில் உள்ள அதிகாரங்களை பிராந்தியங்களுக்கு, மாகாணங்களுக்கு பகிர்ந்து கொள்ள வேண்டிய தேவை இல்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள். ஆகையால் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு என ஒன்று தேவை இல்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ்ச் சமூகத்தினரின் அன்றாடத் தேவைகளை, பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதே இப்போதுள்ள உடனடித் தேவை.

இவ்வாறு புலம்பி உள்ளார் நாளாந்தம் தெற்கில் சிங்கள மக்களின் ஆதரவையும் செல்வாக்கையும் இழந்து வரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செய லாளர் திஸ்ஸ அத்தநாயக்கா.

பாவம், அவரது 'அரசியல் ஞானம்' இத்தனை கீழ் மட்டத்துக்குப் போகும் என்று ஆளுங்கட்சியில் உள்ள அவரது பரம வைரிகள் கூட எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்!

தமிழர்களை அரசியல் உரிமை அற்றவர்களாக்கி, இரண்டாம் தரப் பிரசைகளாக வைத்திருக்க வேண்டும் என்ற அரசியல் கருவை வளர்த்த டி.எஸ்.சேனநாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, சிறில் மத்தியூ, எவ்.ஆர்.ஜெயசூரியா ஆகிய சிங்கள தலைவர்களின் வாரிசாக வருவதற்கு அத்தநாயக்கா சபதம் எதனையும் எடுத்திருப்பாரோ என்னவோ...

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்கு ரணில் பொருத்தம் இல்லாதவர், அரசியல் பலவீனம் கொண்டவர் என்பதால் அந்தக் கட்சி சாய்ந்து விடும் நிலை ஒன்று உருவாகி வருவதால் -

அதனைத் தூக்கி நிமிர்த்த, தமிழர்களுக்கு அரசியல் தீர்வு எதுவும் தேவையற்றது என்று சிங்கள மக்கள் மத்தியில் நச்சு விதையைத் தூவி, ஐ.தே.கவின் தலைமைப் பதவியைத் தாம் தட்டிக் கொள்வதற்கு தமிழர்களுக்கு இனி அரசியல் தீர்வு என ஒன்று தேவையில்லை என்று அத்தநாயக்கா முழங்கத் திட்டமிட்டுள்ளாரோ என்ற சந்தேகமும் எழுகின்றது.

2002இல் அரச கட்டிலில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழீழமே தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்று அதனை அடைவதற்காக ஆயுதம் எடுத்துப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் நோர்வே அரசின் அனுசரணையில் -

ஒன்றுபட்ட இலங்கைக்குள், உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டி அமைப்பு ஒன்றை உருவாக்க இணங்கிக் கொண்டன.

இது உலகு அறிந்த உண்மை.

இதற்கு முன்னதாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி, இந்திய அரசின் அனுசரணையில் மேற்கொண்ட அரசமைப்புக்கான 13 ஆவது சட்டத் திருத்தத்தில் மாற்றம் கொண்டு வருவதற்குத் தானும் ஐக்கிய தேசியக் கட்சி இணங்காது என்றும் அத்தநாயக்கா அடித்துச் சொல்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்துக் கொண்டு பலர் அரச தரப்புக்குப் பாய்ந்து விட்டனர். ரணில் விக்கிரமசிங்காவின் தலைமைத்துவமோ துரும்பாக இளைத்து மெலிந்து விட்டது. ஏனையவர்களைப் பின் தொடர்ந்து தாமும் அரசுப் பக்கம் தாவுவதற்கு 'தமிழர்களுக்கு அரசியல் தீர்வு தேவையில்லை' என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டு, பரபரப்பை உண்டாக்கி, ஆளும் பக்கம் பாய்வதற்கான ஓர் உத்தியை உருவகித்துள்ளாரோ என்னவோ...? அவரது உள்நோக்கமும், அரசியல் சித்து விளையாட்டும் எப்படியாகவும் இருந்து விட்டுப் போகட்டும்...

தமிழர்களுக்குரிய பிறப்புரிமைகளை, நியாயமான அரசியல் உரிமைகளை வழங்குவதில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அவை இரண்டின் தலைமைத்துவங்களும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்பது இந்த நாட்டின் அரசியல் சரித்திரம். ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஒருமுறை தனது சுயரூபத்தைக் காட்டியிருக்கிறது.

அரசியல் தீர்வு தமிழர்களுக்கு இப்போதைக்குத் தேவை இல்லை என்பது ஒரே நாடு, ஒரே மக்கள் என்று சங்கொலித்து வரும் இப்போதைய அரசுக்குப் பக்கப் பாட்டுப் பாடும், பந்தம் பிடிக்கும் செயல் என்பது இன்னொரு கோணம்.

திஸ்ஸ அத்தநாயக்கா கண்டுபிடித்த அரசியல் சித்தாந்தமானது, தமிழர்களே, உங்களுக்குரிய உரிமைகள் வேண்டுமானால் ஆயுதம் எடுத்துப் போராடுங்கள். அப்போதுதான், அந்தச் சூழ்நிலையில் மட்டும்தான், உங்களுக்கு உரிமைகள் வழங்கப்படும் என்ற வாய்ப்பாட்டை முன்மொழிந்திருப்பதாகவும்,தமிழர் களை நையாண்டி செய்வதாகவும் கொள்ளலாம்.

தமிழர்களுக்குரிய அரசியல் தீர்வை, சிங்களத் தலைவர்கள் மனமொத்துத் தரமாட்டார்கள். அதனை அரசியல் மூலதனமாக வைத்து மாறி மாறி ஆட்சிக் கட்டில் ஏறுவார்கள் என்ற நிலையிலும் இப்போது தளர்வு ஏற்பட்டுவிட்டது.

ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சி இன்னும் பல ஆண்டுகளுக்கு நீடிக்கும். இத்தகைய ஒரு சூழமைவில் தமிழர்களும் அவர்களின் அரசியல் தலைவர்களும் தமக்கான உரிமைகளைப் பெறுவதற்கு விரைந்து செயற்படவேண்டிய தேவை எழுந்துள்ளது. அதுமட்டுமன்றி நிதானத்துடனும் எதிர்கால அரசியல் சுபீட்சத்தை மனதிற்கொண்டும் செயற்படவேண்டிய வேளை இது. அவர்கள் இதில் மனம் கொள்வது எப்போது....?

# வடமராட்சி கிழக்கில் தமிழர்களின் தொன்மையான மரபுரிமை எச்சங்கள் தொடர்ச்சியாகக் கண்டெடுப்பு!

### பேராசிரியர் கிருஷ்ணராஜா தகவல்

யாழ்ப்பாணம், செப்.30

வடமாராட்சி கிழக்கு பகுதிகளான அம்பன், குடத்தனை, நாகர்கோயில் பகுதிகளில் தமிழர்களின் இருப்பின் தொன்மையை உறுதிப்படுத்தும் தொல்லியல் எச்சங்கள் பலவும் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வருவதாக யாழ். பல்கலைக்கழக தொல்லியற்றுறை பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு -

வடமாராட்சி கிழக்கில் அம்பன், குடத்தனை, நாகர்கோயில் பகுதிகளில் தமிழர் பாரம்பரியத்தையும் இருப்பின் தொன்மையையும் வெளிப்படுத்தும் எச்சங்கள் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வருகின்றன.

எனது தலைமையிலான வரலாற்று ஆய்வுக்குழுவொன்று நேரடியாகக் களத்திற்குச் சென்று இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

இப்பகுதியில்தான் மணல் அகழ்வுக்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு மணல் அகழ்ந்தெடுக்கப்பட்ட குழிகளுக்குச் சென்று அவதானித்த போது சுன்னாகம், கந்தரோடைப் பகுதியில் இருந்து மீட்கப்பட்டதைப் போன்ற மணிவகைளை ஒத்த தொல்பொருள் சின்னங்கள், பல்வேறு மூலப்பொருள்களால் உருவாக்கப்பட்ட மணிவகைகள், கூரை ஓடுகள், கொல்லப்பட்டறையின் கழிவு இரும்புகள் (கீச்சுசிட்டங்கள்) போன்ற மரபுரிமைப் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டு யாழ். பல்கலைக்கழக அரும்பொருள்காட்சியகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.இதுதவிர தமிழ் பிராமி வரிவடிவில் ''நாகபூமி'' ''கொலம்'' ''பரராச'' என்ற சொற்கள் பொறிக்கப்பட்ட நாணயங்கள் நாகர்கோயில் பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

தமிழர்களின் தொல்லியல் மரபுரிமை எச்சங்கள் அப்பகுதியில் இருப்பது இவற்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டடுள்ளது.

ஆனால் அப்பகுதியில் மணல் அகழ்வுப் பணியில் ஈடுபவோர் தமது வியாபார நிமித்தம் மண் ஏற்றும் போது இந்தத்தொல்லியல் எச்சங்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் தொடர்ந்தும் செயற்படுகின்றனர்.

எனவே இப்பிராந்தியத்தில் மணல் அகழ்வுப் பணியில் ஈடுபடுவோர் தொல்பொருள்களுக்குச் சேதம் விளைவிக்காது அவதானமாகச் செயற்படு மாறும், தொல்பொருள்கள் கண்டெடுக்கப்பட்டால் அவற்றினை யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறையில் ஒப்படைத்து தமிழர்களின் பாரம்பரிய சொத்துக்களை பாதுகாக்க ஒத்துழைக்குமாறும் - அவர் கேட்டுள்ளார். (எ-319)

# மக்கள் சொல்லொணாத் துயரில் வாடும் சூழலில் வடமாகாண இலக்கிய விழாவை இரத்துச் செய்க

### கிளிநொச்சி அரச அதிபருக்கு ஆனந்தசங்கரி கடிதம்

தடுப்பு முகாம்களில் உள்ள உறவுகளை நினைத்தும், காணாமல் போனவர்களின் கதி குறித்தும் மக்கள் சொல்லொணாத் துயடைந்துள்ள இச்சூழலில் கிளிநொச்சியில் கொண்டாட ஏற்பாடாகியுள்ள வடமாகாண இலக்கிய விழாவை இரத்துச் செய்ய வேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிடம் கடிதம் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி கோரிக்கை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு-

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து மூன்று நாள்களுக்கு கிளிநொச்சியில் வடமாகாண இலக்கிய விழா நடை பெறவுள்ள செய்தி கிடைத்து திகைப்படைந்தேன். இந்நிகழ்ச்சியை உங்களுடன் (கிளிநொச்சி அரசஅதிபருடன்),தொடர்பு கொண்டு இரத்து செய்யுமாறு என்னிடம் பல மக்கள் கேட்டுள்ளனர். கிளிநொச்சி பொதுமக்களில் கணிசமானவர்கள், இது மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களுக்கு உகந்தநேரம் அல்ல எனக் கூறி இவ்விழாவை இரத்துச் செய்யுமாறு கோருகின்றனர். கற்றறிந்த பாடங்கள்மற்றும்நல்லிணக்கஆணைக்குழு தனது விசாரணைகளை கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் நடத்திய போது அவர்கள் முன் கூடி நின்ற பெரும் தொகை மக்கள் எனது கூற்றுக்கு சான்று பகர்வார்கள். மக்கள் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருக்கும் தமது பிள்ளைகளைப் பற்றியும், காணாமல் போய் உள்ள உறவினர்களைப் பற்றியும் சொல்லொண்ணாத் துயரில் இருக்கும் போது அவர்கள் எதுவித கொண்டாட்டங்களிலும் கலந்து கொள்ளும் மன நிலையில் இல்லை. மேலும் மீள் குடியமர்த்தப்பட்டவர்கள் எனக் கூறப்படும் இவர்கள் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு இன்றும் இருக்கின்றனர். அவர்க ளின் அனேகமான வீடுகள் கூரை அற்ற நிலையிலும் மனித சஞ்சா ரத்துக்கு தகுதியற்றவைகளாகவே இன்றும் இருக்கின்றன. பிள்ளைகள் உள்ள குடும்பங்கள் அதிகளவான கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள். தொடர்ந்தும் முகாம்களில் உள்ள அவர்களுடைய உறவுகள் படும் கஷ்டமோ மிக மோசம்.

தயவு செய்து இந்நிகழ்ச்சியை நடத்துவதில் உங்களுக்குள்ள கஷ்டங்களை அதிகாரிகளும் எடுத்துக் கூறி இந்நிகழ்ச்சியை இரத்துச் செய்யவும். யாழ். மத்திய கல்லூரி அதிகாரிகளுக் கும், திருமறைக் கலாமன்றத்தினருக்கும் எனது வேண்டுகோளை பரிசீலிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன். (எ)

## சேமிப்பு வங்கியின் ஊக்குவிப்பு நிகழ்ச்சி

தென்மராட்சி,செப்.30

தேசிய சேமிப்பு வங்கியினர் வங்கியின் ஆளுமையினை உயர்த்துவதற்காக பாரிய ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தினை யாழ் மாவட்டத்தில் மேற்கொள்ளவுள்ளனர்

உங்களினதும் நாட்டினதும் முன்னேற்றத்தின் முன்னோடி என்னும் தொனிப்பொருளில் சேமிப்பு உண்டியல் தாங்கிய ஊர்தியினை குடாநாடு முழுவதும் எடுத்துச் சென்று பிரசாரம் செய்யவுள்ளனர்.

எதிர்வரும் எட்டாம் திகதி வெள்ளிக் கிழமை சாவகச்சேரி நகர்ப்பகுதியில் ஊர்திப் பவனியை மேற்கொண்டு சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிக்கும் பணிகளை மேற்கொள்ளவுள்தாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-207)

## சிறுவர் நாடகவிழா கொழும்பில்

கொழும்பு,செப்.30

தேசிய கலாசார மற்றும் மரபுரிமைகள் அமைச்சின் ஏற்பாட்டில் சிறுவர்களுக்கான நாடகவிழா எதிர் வரும் 5ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை கொழும்பில் நடை பெறவுள்ளது. கொழும்பு ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் உள்ள ஜோன் டி சில்வா திரையரங்கில் இந்த விழா நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து சிறுவர்கள் இந்த விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர். (த-319)

## நாளை

| | | |
|---|---|---|
| புரட்டாதி 15 | | 01.10.2010 வெள்ளிக்கிழமை |
| திதி: | : | அட்டமி பி.ப 04.240 வரை |
| நட்சத்திரம் | : | திருவாதிரை பி.ப. 04.54 வரை |
| சுபநேரம் | : | 06.02-07.32 வரை |
| இராகுகாலம் | : | [illegible].32-12.02 வரை |

## மரங்கள் மீள் நடுகை செய்யாவிட்டால் காலநிலை சமநிலை மாறும் அபாயம்

### பசுமைப் புரட்சியாளர் கவலை

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்.மாவட்டத்தில் 2008ஆம் ஆண்டு வீசிய 'நிஷா' புயல்தாக்கத்தினால் 98000 மரங்கள் அழிந்துள்ளன. எனினும் இவற்றில் 25 வீத மரங்கள் கூட இதுவரை மீள்நடுகை செய்யப்படவில்லை. இதனால் யாழ். மாவட்டத்தின் காலநிலைச் சமநிலையில் எதிர்மறையான பாரிய மாறுதல்கள் ஏற்படும் அச்சுறுத்தல் எழுந்துள்ளது.

பசுமைப் புரட்சியாளர் வை.செகராஜசிங்கம் இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

வடக்குப் பகுதியின் அபிவிருத்திக்காக மரங்களை நாட்ட வேண்டும்; 10 மில்லியன் மரம் நடுகைத் திட்டம், புதிய மரநடுகைத்திட்டம் எனப் பல்வேறு திட்டங்களை ஊடகங்கள் மூலம் அறிவிக்கின்றார்கள்.

ஆனால் இதுவரையில் புதிய மரங்கள் நடப்பட்டதாக புள்ளி விவரங்கள் இல்லை.

கடந்த 35 ஆண்டுகளில் நான் 57 ஆயிரம் மரங்களை உற்பத்தி செய்து வடபகுதி எங்கும் வழங்கியிருந்தேன்.

வருடந்தோறும் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் பிறந்த தினத்தில் 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் மரக்கன்றுகளை உற்பத்தி செய்து மக்களுக்கு இலவசமாக வழங்கியிருந்தேன்.

எனக்கு வயதாகிவிட்டாலும் இந்த மண்ணில் இருக்கும்வரை பசுமைப் புரட்சியை மேற்கொண்டு நாட்டில் சுபீட்சத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது எனது நீண்டநாள் கனா.

பருவ மழை பெய்ய ஆரம்பித்துள்ள சூழலில் ஒவ்வொரு குடும்பத்தவர்களும் 'வீட்டுக்கு இரு மரம்' என்ற தொனிப்பொருளில் மரங்களை நட வேண்டும்.

இதன் மூலம் 'நிஷா' புயலாலும் ஏனைய மனிதத் தேவைகளாலும் அழி வடைந்த எமது மர வளங்களை மீள நிரப்பி அபிவிருத்தி செய்ய முடியும்.

கடந்த வருடம் என்னால் 3700 மரக்கன்றுகள் மானிப்பாயிலும் யாழ்ப்பாணத்திலும் வைத்து பொது அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், பாடசாலைகள் எனப் பல்வேறு அமைப்புக்களுக்கும் வழங்கினேன்.

ஆனால் அவற்றில் 50 வீதமானவை மட்டுமே தப்பிப் பிழைத்து மரங்களாக வளர்ந்துள்ளன - என்றார். (ஏ-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
175 புள்ளிகளைப் பெற்று
கிளிநொச்சி மாவட்டத்தில் முதல்
நிலை பெற்ற கிளி/ புனித திரேசா
பெண்கள் கல்லூரி மாணவன்

செல்வன்
**நிஷாந்த் ஹம்ஷிகன்**

அவர்களைப் பாராட்டி
வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
அறிவு நதி புத்தகசாலை, கிளிநொச்சி.



## வேலையாள் தேவை

கணனி அறிவும் ஆங்கில அறிவுமுடைய படித்த பெண் எமது அலுவலகத்திற்கு உடனடியாகத் தேவை. சம்பளம் நேரில் கதைக்கலாம்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
திருமதி ச.விஜயகாந்தன்
துவங்கரை ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு. தொ.பே.இல. 021 320 1111



## வீடு வாடகைக்குண்டு

யாழ். கந்தர்மடத்தில் 3 படுக்கை அறைகள், 1 சமையல் அறை, விசாலமான வரவேற்பறை மற்றும் 25 வாகனங்கள் தரிப்பிட வசதிகொண்ட வீடு வாடகைக்குண்டு.

இல. 283/2, பலாலி வீதி,
(கெற்றபோல் சந்தி)
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P. 0777769260, 0772328684
(பார்வையிடும் நேரம் காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை)



## நிஜமான மாற்றம்




அழகான உடலைப் பெற...

சொக்லட் மற்றும் வனிலா சுவை கொண்ட வெயிட் கெய்னர், அதில் அடங்கியுள்ள தீவிர செயற்பாட்டுச் சேர்வை மூலம் அவசியமான போஷாக்கை வழங்கி, உங்களது நேர்த்தியான உடல் வளர்ச்சிக்கு உதவும் மெலிந்த தோற்றமுடைய நீங்கள் முற்றிலும் வித்தியாசமான, கவர்ச்சியான உடலழகை பெறுவீர்கள்.

**Hotline 0777 536 796**

Manufactured under licence from Edge USA


## மஹஜன சம்பத / මහජන සම්පත / Mahajana Sampatha

**28.09.2010**

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2298

வெற்றி எழுத்து: J
வெற்றி எண்கள்: 7 9 3 4 3 2

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | J 7 9 3 4 3 2 | ரூபா.14,318,952/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 7 9 3 4 3 2 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | 9 3 4 3 2 | ரூபா. 100,000/= | பரிசுகள் 13 |
| 3 பரிசுகள் | 3 4 3 2 | ரூபா. 10,000/= | பரிசுகள் 124 |
| 4 பரிசுகள் | 4 3 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1324 |
| 5 பரிசுகள் | 3 2 | ரூபா. 100/= | பரிசுகள் 13103 |
| 6 பரிசுகள் | 2 | ரூபா. 20/= | பரிசுகள் 129246 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 7 9 3 4 3 | ரூபா. 10,000/= | பரிசுகள் 12 |
| 8 பரிசுகள் | 7 9 3 4 | ரூபா. 1,000/= | பரிசுகள் 133 |
| 9 பரிசுகள் | 7 9 3 | ரூபா. 100/= | பரிசுகள் 1291 |
| 10 பரிசுகள் | 7 9 | ரூபா. 50/= | பரிசுகள் 12958 |
| 11 பரிசுகள் | J | ரூபா. 20/= | பரிசுகள் 51571 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை **Rs. 13,820,540.00**

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு
**Rs. 14,519,856.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.புனித ஜோன் பொஸ்கோ
வித்தியாலய மாணவி

**சத்தியசீலன் ஆரபிகா**

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 2010 இல் 171 புள்ளிகளுடன் மாவட்ட மட்டத்தில் 50 ஆவது இடத்தைப்பெற்ற இவரை வாழ்த்திப் பாராட்டுவதோடு இவர் கல்வி கற்ற பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் தனிப்பட்ட முறையில் கல்வி கற்பித்த ஏனைய ஆசிரியர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

.குடும்பத்தினர்
609, நாவலர் வீதி, நல்லூர்.

(103956)



## யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி
## தரம் 6 அனுமதி - 2011

2011 ஆம் ஆண்டு தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்களை 4 ஆம் திகதியன்று 2 மணிக்குப் பின்னர் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 2010.10.31**


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்
1229 நீலம்
மிதுனம்
09 21 41 52
28-09-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 2,943,900/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 228,758 | 20/- | 4,575,160/- |
| 2 இலக்கங்கள் | 20,913 | 40/- | 836,520/- |
| 1 இல. + லக்கினம் | 20,704 | 60/- | 1,242,240/- |
| 2 இல. + லக்கினம் | 1,960 | 200/- | 392,000/- |
| 3 இலக்கங்கள் | 571 | 1000/- | 571,000/- |
| 3 இல. + லக்கினம் | 42 | 10,000/- | 420,000/- |
| 4 இலக்கங்கள் | 03 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,943,900/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,636,920/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 623 | | 610,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 273,574 | | 9,246,920/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,965,000/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்
மேடம்
14 35 40 55
ஜக்பொட் பரிசு ரூபா. 800,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 620 | 500/- | 310,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 800,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 623 | | 610,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா.900,000/-


## O/L நாளைமுதல் வெளிவருகிறது

மாணவர்களுக்காக உதயன் கல்விச்சுடர் நடத்தும்
மாவட்ட வலம் - 2010
அம்பாறை வலம்

தேசிய ரீதியில் புகழ்பெற்ற உதயன் கல்விச்சுடர் வளவாளர்களின் சேவையை வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு!

*நாளைமுதல் வெளிவரவுள்ள அம்பாறை மாவட்ட வலத்தில் இடம்பெறுபவை:*

**சமூகக்கல்வியும் வரலாறும்**



திரு.கே.குமாரசாமி
BA (Hons) Dip.in.Edu.
ஆசிரிய ஆலோசகர்-வலயக்கல்வி அலுவலகம், சம்மாந்துறை
வெளிவரும் திகதி: 01.10.2010

திரு.வே.யோகராசா
B.com., Dip.in.sp.Edu, Dip.in.Psychology, SLTS



**தமிழ்மொழியும் இலக்கியமும்**



திரு.கே.கே.மோகன்
BA, (PGDE, Dip.in.Edu, SLTS
ஸ்டார் கல்வி நிலையம்- காரைதீவு
வெளிவரும் திகதி: 04.10.2010

**கணிதம்**



திரு.எல்.பாறூக்
BA (NDT-Maths, PGDE, Dip.in.English, SLTS
வெளிவரும் திகதி: 04.10.2010

**வணிகக்கல்வியும் கணக்கீடும்**



திரு.கே.கே.ராஜீ
BBA, SPI BRAIN'S COLLEGE
வெளிவரும் திகதி: 06.10.2010

**ஆங்கிலம்**



திரு.எஸ்.சிறிகாந்தன்
BA, (Dip.in.English, English Trained, SLTS
திரு/தம்பிலுவில் ம.வி.
வெளிவரும் திகதி 07.10.2010

**விஞ்ஞானம்**



எம்.ஐ.எம்.அஸ்மி
B.Ed (NDT- Science SLTS)
கமு/சாஹிறா தேசிய பாடசாலை
வெளிவரும் திகதி 08.10.2010

எம்.எம்.நிம்சாட்
B.A, (SPL) Dip.in.Edu,SLTS
சது/அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி



பெற்றோர்களே, மாணவர்களே !
உங்கள் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள அருகிலுள்ள "உதயன்" முகவரிடம் இன்றே பத்திரிகைக்கு முற்பதிவு செய்துகொள்ளவும். இம்முகவர்கள் மூலம் உங்களுக்குப் பிரதிகள் கிடைப்பதை உறுதிசெய்துகொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு
கல்விச்சுடர் ஆசிரியர் - உதயன், இல 365, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
விசேட [illegible] இலக்கங்கள்: யாழ் 0215677222, கொழும்பு 0115737599.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதற்கு நீண்ட நேரமாகக் காத்திருக்கும் நோயாளர்கள்

## வைத்தியர்களின் பற்றாக்குறையே காரணமாம்

வண்ணை,செப்.30

யாழ். போதனா வைத்திய சாலையில் வைத்திய நிபுணர்கள், உதவி வைத்தியர்கள் பற்றாக்குறை நிலவி வருகிறது. இதனால் நோயாளர்கள் தாம் வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக் ஆகிய இடங்களில் நீண்ட மணிநேரங்கள் காத்திருக்க வேண்டி ஏற்படுவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

நோயாளர்களின் எண்ணிக்கை யாழ். ஆஸ்பத்திரியில் தற்போது அதிகரித்துள்ளது. நோயாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வைத்திய நிபுணர்கள், உதவி வைத்தியர்கள் அங்கு இல்லை. இதனால் நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை மருந்தாளர்களும் மருந்துகளுக்கும் கூட தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அநேக நோயாளர்களுக்கு ஒன்றில் இருந்து மூன்று வரையான மருந்துகள் வழங்கப்படுவதில்லை. அவற்றை வெளியில் வாங்கிப் பாவிக்குமாறு கூறப்படுகிறது.

நோயாளர்கள் மருந்தைப் பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் ஒரு மணி நேரத்திற்கும் அதிகமாகக் கால்கள் கடுக்க நின்றே மருந்துகளைப் பெற்றுச் செல்ல நேர்வதாகவும் கவலை தெரிவித்துள்ளனர். (த-160)

# சமுர்த்திப் பயனாளிகளுக்கு விநியோகிக்கும் பொருள்கள் தரமானதாக இருக்க வேண்டும்

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,செப்.30

சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கப்படும் பொருள்கள் தரமானவையாக இருக்க வேண்டும் எனக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

சமுர்த்திப் பயனாளிகளுக்கு அரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு ஆகிய பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றைத் தரமானதாகவும், நியாயமான விலையிலும் விநியோகிக்க வேண்டும்.

இதனைக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் கண்காணிக்க வேண்டும்.

பழுதடைந்த பொருள்களை விநியோகிக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்- என்றார். (204-313-318)

# பழுதடைந்த திராட்சைப்பழம் யாழ். நகரப் பகுதியில் விற்பனை

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்.நகரில் மழையினால் அழுகிப் பழுதடைந்த திராட்சைப் பழங்கள் வியாபாரிகளால் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நல்ல நிலையில் உள்ள திராட்சைப் பழங்களுடன் அழுகிய பழங்களும் சேர்த்து விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இந்த திராட்சைப் பழங்கள் கிலோ 250 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

சுற்றுலாப் பயணிகள் இந்தப் பழங்கள் மலிவாக விற்பனை செய்வதாகநினைத்து கொள்வனவு செய்வதை அவதானிக்க முடிகின்றது.

பழுதடைந்த திராட்சைப் பழங்களை மக்கள் வாங்கிச் சென்று உண்பதனால் நோய்கள் ஏற்படும் என்று கூறப்படுகின்றது எ(204-26)

# கால்வாய் குளத்துடன் இணையாமையால் மழைநீர் குடியிருப்புக்குள் செல்கிறது

கொழும்புத்துறை,செப்.30

ஆரியகுளத்தின் கிழக்குப் புறமுள்ள பிரதான கால்வாய் குளத்துடன் இணைக்கப்படாமையால் கால்வாய் ஊடாக வரும் மழைநீர் மக்கள் குடியிருப்புகளுக்குள் செல்லும் நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் குளத்தைச் சுற்றி அணைக்கட்டுக்கள் அமைக்கப்பட்டபோது வெள்ள வாய்காலின் அணைக்கட்டு குளத்துடன் இணைக்கப்படவில்லை.

இதனால் வேறு குளங்களிலிருந்தும் அயற்பகுதிகளிலிருந்தும் வந்து சேரும் நீர் கடந்த வருடம் குடிமனைகளுக்குள் புகுந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இம்முறை மழைகாலத்திற்கு முன்னராவது இக்குறைபாட்டை நிவர்த்தி செய்து வெள்ளப் பாதிப்பிலிருந்து பாதுகாக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (204-135)

# அரியாலைப் பிரதேச வயல் நிலங்களில் நெற்செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம்,செப்.30

அரியாலைப் பிரதேசத்தில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது பெய்துவரும் மழையை அடுத்து செம்மணி, நெடுங்கேணி, நாயன்மார்கட்டு போன்ற இடங்களில் அமைந்துள்ள வயல்களை விவசாயிகள் சீர்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

வயல்களில் உழவு இயந்திரங்களை பயன்படுத்தி ஊழுது, பசளை போடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சில வயல்களில் விதைப்புப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-204-26)

# மானிப்பாய் வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்.மானிப்பாய் வீதியில் ஏற்பட்டிருக்கும் சேதங்கள் தார்க் கலவை மூலம் சீர்செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது பெய்ய ஆரம்பித்திருக்கும் மழையினால் இந்தப் பிரதான வீதியில் சிறு குழிகள் ஏற்பட்டுள்ளன.

இந்தச் சேதங்களை கலவை மூலம் சீர்செய்யும் பணியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் ஈடுபட்டுள்ளனர். (204-26)

# கழிவுநீர் வாய்க்காலில் நுளம்புப் பெருக்கம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்.நாவாந்துறைப் பகுதியில் உள்ள கழிவுநீர் ஓடும் வடிகால் வாய்க்கால்கள் பல தூர்ந்து போன நிலையில் காணப் படுவதால் அவற்றில் கழிவு நீர் தேங்கி நின்று நுளம்பின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கழிவுநீர் ஓடும் வடிகால் வாய்க்கால்கள் சீரான முறையில் துப்புரவு செய்யப்படாததால் கழிவு நீர் ஓடுவது தடைப்பட்டுக் காணப்படுகின்றது.

கழிவுநீரின் தேக்கத்தினால் துர்நாற்றம் வீசுவதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மழைக்காலம் ஆரம்பித்துள்ளமையால் நீர்தேங்கி நோய்கள் பரவுவதற்கும் வாய்ப்புக் காணப் படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (204-26)

# வர்த்தக நிறுவனங்களில் கழிவுப்பொருள் அகற்றுவதற்கு நாளொன்றுக்கு 230 ரூபா

## வியாபாரிகள் தரப்பில் விசனம்

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்.நகர வர்த்தக நிலையங்களிலிருந்து ஒரு பரல் கழிவுப் பொருள்களை அகற்றுவதற்கு நாளொன்றிற்கு 230 ரூபா வீதம் அறவிடப்படுவதாக வர்த்தகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மாநகர சபை எல்லைக்குள் செயற்படும் நிறுவனங்களில் சேரும் கழிவுகளை அகற்றுவதற்கு கட்டணங்கள் அறவிடப்பட்டு வருவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

அரை பரல் கழிவுகளை அகற்ற நாளொன்றுக்கு வரி உள்ளடங்கலாக 115 ரூபாயும், ஒரு பரல் கழிவுகளை அகற்ற நாளொன்றுக்கு வரி உள்ளடங்கலாக 230 ரூபா வும் அறவிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் வர்த்தக நிலையங்களுக்கு வாரம் ஒருமுறை மருந்துகளை விசிறுவதற்கு 72 ரூபா வீதமும் யாழ்.மாநகர சபையால் அறவிடப்பட்டு வருகின்றது.

யாழ்.மாநகர சபையின் இந்த நடவடிக்கை தொடர்பில் வர்த்தகர்கள் கடும் விசனம் தெரிவித்தனர். "நாம் சோலைவரி, கடையை நடத்துவதற்கான வரி என்பவற்றைச் செலுத்துகின்றோம். மாநகர சபை ஊழியர்களுக்கு அரசினால் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. இவற்றையெல்லாம் விட எம்மிடம் எதற்காக இவ்வாறு கழிவுகளை அகற்றுவதற்குக் கட்டணம் அறவிடப்படுகின்றது என்று தெரியவில்லை" என்றனர்.

மாநகர சபையானது நகரைச் சுத்தமாக வைத்திருக்கும் நோக்கிலேயே தாம் செயற்படுவதாகத் தெரிவிக்கின்றது. (204-15)



யாழ்.பொலிஸ் தலைமை யகத்தின் போக்குவரத்துப் பிரிவால் கடந்த திங்கட்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் வீதி ஒழுங்கு விழிப்புணர்வுக் கண்காட்சியின் போது எடுக் கப்பட்ட படங்கள் இவை.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா, யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவ ஆகியோர் அழைத்து வரப்படுவதையும் வீதி ஒழுங்கு தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம். (16-14)

# மின்விளக்குகள் இல்லை: இருளில் முக்கிய வீதிகள்

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட சில வீதிகளிலுள்ள மின்குமிழ்கள் ஒளிராமையால் இரவு வேளையில் அவை இருளில் மூழ்கிவிடுகின்றன. போக்குவரத்துச் செய்யும் மக்கள் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

ஆஸ்பத்திரி வீதிச் சந்திக்கு அப்பாலும் மற்றும் வேம்படி வீதி, பிரதான வீதி போன்றவையுமே இருளில் மூழ்கிவிடுகின்றன.

இந்த வீதிகளில் போடப்பட்ட மின்குமிழ்கள் ஒளிராமல் இருப்பதனாலேதேய இருளில் மூழ்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மழைகாலம் ஆரம்பித்துள்ளதனால் வீதிகளில் உள்ள மின்குமிழ்களைச் சீர்செய்வதற்கு யாழ். மாநகர சபை நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (204-26)

# புகை மண்டலத்தில் மூழ்கும் உணவகங்கள்

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்.நகரப் பகுதியிலுள்ள உணவகங்களில் புகைத்தல் நடவடிக்கையில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் இதனால் குறித்த உணவகங்கள் புகைமண்டலமாகக் காட்சியளிப்பதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உணவகங்களில் மறைவிடமாகவும் சிலவற்றில் வெளிப்படையாகவும் பலர் புகைப்பிடிப்பதாகவும் இதனால் ஏனையவாடிக்கையாளர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

'உணவகங்களில் இங்கு புகைபிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது' என்று அறிவிப்பு காணப்படுகின்றபோதும் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறுவதனை அவதானிக்க முடிகின்றது.

பொதுமக்களுக்குப் பெரும் தீங்கினை உண்டுபண்ணக்கூடிய புகைப்பொருள் பாவனையை உணவகங்களில் இல்லாதொழிக்க சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (எ-204-322)




# கொட்டடிச் சந்தைக்கு மின்சாரம்; இரவு நேரத்திலும் மீன் விற்பனை

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்.கொட்டடி மீன் சந்தைக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டதனால் இரவு நேரத்திலும் சந்தையில் மீன் விற்பனை களை கட்டியுள்ளது.

தீவுப் பகுதியில் பிடிக்கப்படும் கடலுணவுகள் கொட்டடிச் சந்தைக்கு மாலை வேளைகளிலேயே எடுத்து வரப்படுவது வழமை. எனினும் கொட்டடிச் சந்தையில் மின்சார வசதி செய்யப்படாமையால் இரவு நேரங்களில் மீன்விற்பனை மந்தமாகவே இருந்து வந்தது.

தற்போது கொட்டடிச் சந்தைக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதால் இரவு நேரங்களில் மீன் விற்பனை அமோகமாக நடைபெற்று வருகின்றது. இதனால் வியாபாரிகளும், நுகர்வோரும் பெரிதும் நன்மையடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-204-26)

# வருடாந்தத் திருவிழா

கொழும்புத்துறை,செப்.30

யாழ்.றக்காவீதி புனித திரேசம்மாள் ஆலய வருடாந்தத் திருவிழா நடைபெற்று வருகின்றது.

நற்கருணைப் பெருவிழா ஒக்ரோபர் 2 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 4.45 மணிக்கும், திருவிழாத் திருப்பலி மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.45 மணிக்கும் இடம்பெற்று திருச்சொரூபப் பவனியும் ஆசீரும் நடைபெறும். (204-135)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## யா/யாழ்ற்ரன் கல்லூரி - காரைநகர்
### பழைய மாணவர்களுடனான கலந்துரையாடல்

இடம்: யாழ்ற்ரன் கல்லூரி மண்டபம்
காலம்: 03.10.2010 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணி
தலைமை: திரு.தி.சோமசேகரம் (அதிபர்)

நிகழ்ச்சி நிரல்

1. தேவாரம்
2. தலைமையுரை
3. P.S.I இற்கான பழைய மாணவரைத் தெரிதல்
4. பிற விடயங்கள்
5. நன்றியுரை

- அதிபர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில்
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2010 இல் சித்தியடைந்தோர்

| சித்தியடைந்தோர் பெயர் | புள்ளி |
|---|---|
| 01. குமாரசுவாமி சௌமியா | 172 |
| 02. நடேசமுதலி மிதுனா | 170 |
| 03. துஸ்யந்தன் டெபோறா ஜோய் | 161 |
| 04. வேணுகோபாலவாணிதாசன் ஜதீஸ்வர்யா | 161 |
| 05. வாமதேவன் ஜெயமிதிலா | 160 |
| 06. சிவசெந்திநாதன் கம்சாயினி | 159 |
| 07. புவனேஸ்வரன் சுமித்திரா | 158 |
| 08. ஸ்ரீ ராமச்சந்திரன் விதுர்சினி | 153 |
| 09. தேவாபாலன் தேவாம்பிகை | 152 |
| 10. சண்முகலிங்கம் சந்தியா | 150 |
| 11. சுந்தரராஜன் கீர்த்திகா | 146 |
| 12. நடராஜப்பெருமான் லக்ஷிகா | 145 |
| 13. ரவீந்திரன் சங்கவி | 144 |
| 14. கிருஸ்ணகுமார் சர்மினி | 143 |
| 15. குமாரசீலன் ரக்சாயினி | 142 |
| 16. மார்க்கண்டு மயூரி | 142 |

மேற்படி மாணவர்கள் எதிர்காலத்திலும் கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப்பெற்றுப் பாடசாலைக்குப் புகழை ஈட்டித் தரவேண்டுமென வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை.

## அறிவித்தல்

*மானிப்பாய் கிராம உப அலுவலகம்*
*ஆதனப் பெயர் மாற்றம்*
*வட்டாரம் 04*
*சுதுமலை வீதி*
*ஆதன இல. 81*

வட்டாரம் 04 சுதுமலை வீதி ஆதன இலக்கம் 81 இல் அமைந்துள்ள ஆதனமானது சுந்தரம் தர்மலிங்கமும் பெண் வெற்றியம்மா என்பவர்களால் சீதனமாக வழங்கப்பட்டு சீனித்தம்பி ஸ்ரீசந்திரன் பெண் விஜயசிறி என்பவர்களால் 2683 / 14.11.1997 ஆம் திகதி எழுதப்பட்ட உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் என்பதைத் தெரியப்படுத்தி, எமது ஆதனப்பதி வேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக பெயர் மாற்றத்திற்கு விண் ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந் தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து சீனித்தம்பி ஸ்ரீசந்திரன் பெண் விஜயசிறி எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலி.தென் மெற்கு பிரதேச சபை, மானிப்பாய்.



அத்தியடிப் பிள்ளையாரின் ஆனந்த திரு நடனம்

## யாழ்.அத்தியடி பிள்ளையார் கோயில்
## நவக்கிரக ஹோமம்

02.10.2010 சனிக்கிழமை காலை 9 முதல் நண்பகல் வரை நடைபெறவுள்ள மேற்படி யாகத்தில் அடியார்கள் பங்குபற்றுவதன் மூலம் தத்தம் கிரக தோஷங்களுக்கு பரிகாரம் தேடிக்கொள்ளமுடியும். பங்கு கொள்ளும் அடியார்கள் தங்களதும், குடும்பத்தினரதும் மற்றும் வேண்டியவர்களினதும் பெயர், நட்சத்திரங்களை கோயில் அலுவலகத்தில் பதிவுசெய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கோயில் நிர்வாகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2010ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த
யா/துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாடசாலையின் மாணவச் செல்வங்களான..



செல்வன் குகனேந்திரன் மாலன்பன் (171)



செல்வி சிவகுமார் சிவந்தினி (161)



செல்வி விவேகானந்தம் ஹம்சிகா (155)



செல்வன் தருமராசா கவிதன் (154)



செல்வி முத்துலிங்கம் யாழினி (144)

மற்றும் வெட்டுப்புள்ளியை அண்மித்த செல்வன் தெ.அகிலன் (141) ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகிறோம். பரீட்சைக்குத் தோற்றிய 15 மாணவர்களில் 12 மாணவர்கள் 100 புள்ளிகளுக்குமேல் பெற்றுள்ளனர் என்பதுடன் 15 மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். இவர்கள் கல்வியில் மென்மேலும் பலசிறப்புக்கள் பெறவாழ்த்துவதுடன் இவர்களை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களையும் உளமாரப் பாராட்டி வாழ்த்தி நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

(சி/571458) பாடசாலைச் சமூகம்.

## 14 வயதில் தாய்

கொழும்பு, செப். 30

கொழும்பு காசல் வைத்தியசாலையில் 14 வயது சிறுமியொருத்தி குழந்தை பெற்றுள்ளார். வைத்தியசாலை அதிகாரிகள் இதுகுறித்து தேசிய சிறுவர் பாதுகாப்பு சபைக்கு அறிவித்ததையடுத்து தாயும் குழந்தையும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சிறுமி 13 வயதில் அவரின் வீட்டிற்கு வந்த ஒருவரால் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

தனது தந்தை இறந்துவிட்டார் எனவும் தாயார் மனநிலை பாதிக்கப்பட்டவர் எனவும் அச்சிறுமி தெரிவித்துள்ளார். (ஒ-சி)

## சிறுநீரகக் கொடையாளர் குறித்து தகவல் சேகரிப்பு

கொழும்பு, செப். 30

சிறுநீரகக் கொடையாளர்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்குச் சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஏற்கனவே 10 வைத்தியசாலைகளில் சிறுநீரகக் கொடையாளர்களின் தகவல் களஞ்சியங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகச் சிறு நீரக மாற்று அறுவைச் சிகிச்சை ஒத்துழைப்பு மன்றத்தின் தலைவர் அஜித் எஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதுவரை ஆயிர த்துக்கும் மேற்பட்டவர்கள் சிறுநீரகங்களைத் தானம் செய்வதற்கு முன்வத்து ள்ளதாகவும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் வெற்றியளித்தால் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைகளைக் காலதா மதமின்றி மேற்கொள்முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்

சிறுநீரகங்களைத் தானம் செய்ய விரும்புவோர் தமது சங்கத்துடன் 0112824373 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களை வழங்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், செப். 30

ஜி.சீ.ஈ (உ/த) இரசாயனவியல் மற்றும் இணைந்த கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பரீட்சை வினாத்தாள் தொடர்பான கலந்துரையாடலுக்கான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் நடைபெறவுள்ளது.

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தால் நடத்தப்படும் இச் செயலமர்வில் இப்பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் தவறாது பங்குபற்றுமாறு வெளிக்கள நிலையத்தினர் கேட்டுள்ளனர். (ஒ-16)

## மானிப்பாய் நூலகம் சுதுமலைக்கு மாற்றம்

சண்டிலிப்பாய், செப். 30

மானிப்பாய் பிரதான வீதியில் வலி. தென்மேற்குப் பிரதேசசபை அலுவலகத்திற்கு அருகில் இயங்கி வந்த மானிப்பாய் பொது நூலகம் தாவடி, மானிப்பாய் வீதியில் சுதுமலைச் சந்திக்குச் சமீபமாகவுள்ள தனியார் வீட்டுக்கு தற்காலிகமாக இடமாற்றப்பட்டுள்ளது.

பட்டினசபை இயங்கிய காலப்பகுதியில் அதிகார் செல்லமுத்து ஞாபகார்த்தமாக பல வருடங்களுக்கு முன் கட்டிக் கொடுக்கப்பட்ட இந்த நூல் நிலையத்தின் சுவர், கூரை சேதமடைந்துள்ளதால் அங்குள்ள நூல்களைப் பாதுகாப்பாக வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் வாசகர்களுக்குச் சிரமத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதனால் இந்த நூல் நிலையத்தை வேறு இடத்தில் அமைப்பதற்கான சகல ஒழுங்குகளையும் வலி.தென் மேற்குப் பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.

நூல் நிலையம் கட்டுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட காணியில் நவீன வசதிகளுடன் பல இலட்சம் ரூபா செலவில் நூல் நிலையம் நிர்மாணிக்கப்படவுள்ளது. அது வரையில் இந்தத் தற்காலிக நூலகம் செயற்படும். (ஓ-1ஃ6)

## கார் விற்பனைக்குண்டு

13 சிறி XXXX இலக்க NISSAN வெள்ளை நிற நல்ல நிலையிலுள்ள அழகிய கார் உடன் விற்பனைக்குண்டு.

**தொடர்புக்கு-0777159735**

## மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை
## தரம் 6 அனுமதி - 2011

எமது பாடசாலையில் தரம் 6 (2011) இற்குரிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் பாடசாலையினால் கோரப்படுகின்றன.
விண்ணப்பப்படிவங்களைப் பாடசாலையில் 10.10.2010 முதல்பெற்று விண்ணப்பிக்க முடியும் என்பதை அறியத்தருகின்றேன்.
விண்ணப்பங்களை 30.10.2010 இற்கு முன்னர் பாடசாலை அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை,
பருத்தித்துறை.
அதிபர்.

## யா/நல்லூர் ஞானோதய வித்தியாலயம்
## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பா.நிதுசன்
151 புள்ளி



சு.கயல்விழி
147 புள்ளி

ஸ்ரீ.த்ரௌமிகன்
104 புள்ளி



சு.தர்மஜீலன்
அதிபர்

மேலும் 70 புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப்பெற்ற மாணவர்களையும், வாழ்த்துவதோடு அயராது உழைத்த அதிபர், ஆசிரியர்களையும் நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/நல்லூர் ஞானோதய வித்தியாலயம், நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 147 புள்ளிகளைப் பெற்ற
எமது செல்வன்
**வே.டிலக்ஷனை**
[யா/மாணிக்கவாசக வித்தியாலயம்]
பாராட்டி மகிழ்வதுடன் , அவர் மேலும் கல்வியில் பல சிறப்புக்களையும் பெற்று சீருடன் வாழ எல்லாம் வல்ல சுட்டிபுர அம்பாளை வேண்டுகிறோம்.

வாழ்த்துவோர்.
அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமா, மாமி, சகோதரர்கள்.

வரணி, இயற்றாலை,
வரணி. (101777)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நந்தகுமார்- கோமதி தம்பதியரின் செல்வப் புதல்வன்
**ந.துஷ்யந்தன்**
(சென்.ஜோன் பொஸ்கோ)

அவர்கள் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையயிட்டு மகிழ்ச்சியடைவதுடன் இவர் தொடர்ந்துவரும் பரீட்சைகளிலும் சிறந்த பெறுபேற்றினைப் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழவேண்டும் என்று இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

இவர் சித்தியடைய வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மப்பா, அம்மம்மா, சுதா மாமா குடும்பத்தினர், சுபாஸ்மாமா குடும்பத்தினர், மதி அன்ரா குடும்பத்தினர்.

ந.நவரத்தினம்
ஐயனார் கோயிலடி,
கொடிகாமம். (103957)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த
செல்வன் **து. அருண்குமார்**
(வாழ்வக மாணவன்- சுன்னாகம்)

2010 ஆம் ஆண்டு 05ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதல் நிலை மாணவனாக சித்தியடைந் தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு இவ்வெற்றிக்கு காரணமாக இருந்த பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர் மற்றும், வாழ்வகத்தில் கற்பித்த ஆசிரியர்கள், வாழ்வக சமூகம் அனைவருக்கும் எமது கழகம் சார்பான பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சுன்னாகம் றோட்டறக்ட் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மடுமாதா தேவாலய திருவிழா ஒக்ரோபரில் இடம்பெறுவது சந்தேகம்

## தண்ணீர் தட்டுப்பாடே காரணம்

மன்னார்,செப்.30

கடுமையான வரட்சியுடன் கூடிய காலநிலையின் காரணமாக மடுத்திருத்தலத்தின் வருடாந்த ஒக்டோபர் மாதத் திருவிழா இம்முறை இடம்பெற மாட்டாது என அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் தற்போது மன்னாரில் மழை ஆரம்பித்திருக்கிறது.

ஒக்டோபர் மாதத்தில் மடு தேவாலய திருவிழா மிக விமரிசையான முறையில் கொண்டாடப்படுவது வழக்கம். இவ்வருடம் வழமையாக கிடைக்கப்பட வேண்டிய மழை கிடைக்காமை யினால் பக்தர்களின் பாவனைக்கான குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவலாம் என மடுத்திருத் தலத்தின் பரிபாலகர் அருட் தந்தை டெஸ்மன் குலாஸ் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் தற்போது மன்னார் மாவட்டத்தில் பருவ மழையானது காலம் பிந்திய நிலையில் பெய்யத் தொடங்கியிருக்கின்றது. இது தொடர்பில் மடுத்திருத்தலத்தின் பரிபாலகரிடம் ஒக்டோபர் மாதத் திருவிழா ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியிருப்பது தொடர்பில் கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

'மடுத்திருத்தலத்தின் திருவிழாவையொட்டி முன் கூட்டியே தேவையான ஆயத்தங்களை மேற்கொள்வது வழமையானது. அதிலும் குறிப்பாக இலட்சக்கணக்கான பக்தர்களின் வருகையினைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கான சுகாதாரம் மற்றும் குடிதண்ணீர் வசதிகளை மேம்படுத்தி வந்திருக்கின்றோம்.

ஆயினும் இந்த வருடம் மன்னார் மாவட்டத்துக்கு கிடைக்க வேண்டிய பருவ மழை காலக்கிரமத்தில் கிடைக்காமையினால் கடுமையான வரட்சியுடன் கூடிய கால நிலை நிலவி வந்தது. இந்த நிலையிலேயே ஒக்டோபர் மாத மடுத்திருத்தல விழா, இடம் பெறாது என அறிவித்திருந்தோம்.

ஆனால் தற்போதுதான் மழை பெய்ய ஆரம்பித்திருக்கிறது. இருந்த போதும் ஒக்டோபர் இரண்டாம் திகதி இடம்பெற விருக்கும் திருவிழா நிகழ்வில் கலந்து கொள்ளும் இலட்சக்கணக்கான பக்தர்களுக்குத் தேவையான நீரினை பெற்றுக் கொள்ளக் கூடியதான நிலை தற்போதும் ஏற்படவில்லை' எனத் தெரிவிக்கும் மடுத்திருத் தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை டெஸ்மன் குலாஸ் அடிகளார் திருவிழா தினத்தில் திருப்பலி இடம் பெறும் எனவும் தெரிவித்திருக்கின்றார். (க-80)

# மாயவனூர் கிராமத்தில் பயனாளிகள் தெரிவு

கிளிநொச்சி,செப்.30

வடகிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் கீழ் மாயவனூர் கிராம சேவையாளர் பிரிவில் பயனாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தத் திட்டத்தின் 5 ஆம் கட்டத்தின் கீழ் வீடுகள் புனரமைப்புச் செய்வதற்கு கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் மாயவனூர் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களிலே 294 பயனாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களின் பெயர்ப்பட்டியலை மாயவனூர் கிராம சேவை யாளர் அலுவலகத்தில் பார்வையிடலாம். எவராவது இதற்கு ஆட்சேபம் தெரிவிக்க விரும்பினால் கடந்த 21 ஆம் திகதியிலிருந்து 14 நாள்களுக்குள் ஆட்சேபனைகளை கிளிநொச்சி அரசாங்க அதிபர் அல்லது கரைச்சி உதவி அரசாங்க அதிபர் அல்லது நீர்ப் நிறுவனத்தின் பிரதி திட்டப் பணிப்பாளர் ஆகியோரிடம் சமர்ப்பிக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-405)

# கிளிநொச்சியில் நான்கு இசுறு பாடசாலைகள் ஆரம்பப் பிரிவுகள் அகற்றப்பட்டாலே அங்கீகாரம்

கிளிநொச்சி,செப்.30

இசுறு பாடசாலைகளிலிருந்து ஆரம்பப் பிரிவுகள் நீக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் நான்கு பாடசாலைகள் இசுறு பாடசாலைகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவையாவன கிளிநொச்சி மத்திய கல்லூரி, முருகானந்தா மகா வித்தியாலயம், முழங்காவில் மகா வித்தியாலயம், அக்கராயன் மகாவித்தியாலயம் என்பனவாகும்.

இந்த இசுறு பாடசாலைகளின் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக இப்பாடசாலைகளிலிருந்து ஆரம்பப் பிரிவு வகுப்புக்கள் அகற்றப்பட வேண்டும். இதற்காக ஆரம்பப்பிரிவுகளைப் படிப்படியாக நீக்குவதா அல்லது ஆரம்பப் பிரிவினை வேறாக்கி வேறு பாடசாலையாக இயங்கச் செய்வதா என்பதற்கான அதிபர்களின் சம்மதம் கோரப்பட்டுள்ளது.

இதற்கான அறிவித்தலை வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் ஊடாக குறித்த பாடசாலை அதிபர்களுக்கு விடுத்துள்ளார். இவ்வாறு சம்மதம் தெரிவிக்காத பாடசாலைகள் இசுறு செயற்றிட்டத்தின் கீழ் உள்வாங்கப் படமாட்டாதெனவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-405)

# கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகள் வறிய மக்களுக்குப் பகிர்ந்தளிப்பு

கிளிநொச்சி,செப்.30

உரிமையாளர்கள் இல்லாமல் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் மாடுகளைப் பிடித்து வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு வழங்கும் திட்டமொன்றை திருவையாறு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கக் கிளையினர் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது ஏராளமான மாடுகள் உரிமையாளர்கள் இல்லாத நிலையில் அலைந்து திரிகின்றன. இவை விவசாயிகளின் பயிர்களுக்குச் சேதத்தையும் ஏற்படுத்தி வருகின்றன. இதனைத் தவிர்க்கும் பொருட்டு கிளிநொச்சி மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் திருவையாறு கிளையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதன் பிரகாரம் இத்தகைய கட்டாக்காலி மாடுகளை மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் அனுமதியுடன் பிடித்து அந்தப் பகுதியில் இதற்கென விசேடமாக அமைக்கப்பட்ட இலகுவில் மக்கள் பார்வையிடக் கூடிய பட்டிகளில் அடைத்து வைக்கின்றனர். பின்னர் இவற்றை வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் குடும்பங்களுக்கு வழங்குகின்றனர்.

இதுவரை இத்தகைய 20 குடும்பங்கள் கிராமசேவையாளர்கள் ஊடாக அடையாளம் காணப்பட்டு ஒவ்வொரு குடும்பத்துக்கும் சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான மாடுகள் வழங்கப்பட்டுள்ளதெனவும், இவ்வாறான செயற்பாட்டினூடாக கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதோடு, பெரும்போக நெற்செய்கையின் போது விவசாயிகளுக்கு இவற்றால் ஏற்படக் கூடிய அழிவுகளிலிருந்து காப்பாற்ற முடியுமெனவும் கிளிநொச்சி கால்நடை வைத்திய அதிகாரி நகுலேஸ்வரன் கீதாஞ்சலி தெரிவித்தார். (க-440)

# கிளிநொச்சி தமிழ் இலக்கிய விழாவில் ஆய்வரங்க நிகழ்வுகளுக்கு சிறப்பான இடம்

கிளிநொச்சி,செப்.30

அடுத்த மாதம் 2,3,4,5 ஆம் திகதிகளில் வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் நடைபெறவிருக்கும் தமிழ் இலக்கிய விழாவில் ஆய்வரங்க நிகழ்வுகள் சிறப்பான இடத்தை வகிக்கின்றன.

இந்த ஆய்வரங்க நிகழ்வுகள் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் பண்டிதை பத்மாசனி அரங்கு, மங்கள நாயகம் தம்பையா அரங்கு, அப்புச்சி கதிரவேற்பிள்ளை அரங்கு, வன்னியூர்க் கவிராயர் அரங்கு, மெற்றாஸ் மெயில் அரங்கு ஆகியவற்றில் நடைபெறவிருக்கின்றன.

முதலாம் நாள் காலை நிகழ்வுக்கு பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும், மாலை நிகழ்வுக்கு வடமாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவியும், இரண்டாம் நாள் காலை நிகழ்வுக்கு திருமதி பத்மா சோமகாந்தனும், மாலை நிகழ்வுக்கு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனும் தலைமை தாங்குவார்கள்.

மூன்றாம் நாள் காலை நிகழ்வுக்கு பேராசிரியர் சபா.ஜெயராசாவும், மாலை நிகழ்வுக்கு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனும் தலைமை வகிப்பர்.

மூன்று தினங்களும் ஈழத்துத் தமிழ் இலக்கியமும் பெண்களும் என்னும் தலைப்பில் ஆய்வுரைகள் இடம்பெறும். இலங்கைத் தமிழ் ஆய்வில் பெண்கள் என்னும் தலைப்பில் அருட்பணி தமிழ் நேசன் அடிகளாரும், நாட்டார் பாடல்களில் பெண்கள் (ஒப்பாரி) என்னும் தலைப்பில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும், தமிழ் இலக்கியத்தில் முஸ்லிம் பெண்கள் என்னும் தலைப்பில் மக்கள் காதரும், தமிழ் நாடகத்தில் பெண்கள் என்னும் தலைப்பில் மா.அருள்சந்திரனும், சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலங்களில் பெண்கள் என்னும் தலைப்பில் பேராசிரியர் இரகுநாதனும், சுதந்திரத்துக்கு முற்பட்ட தமிழ்க் கவிதைகளில் பெண்கள் என்னும் தலைப்பில் கலாநிதி செ. யோகராசாவும், சுதந்தி ரத்துக்குப் பிற்பட்ட தமிழ் கவிதை களில் பெண்கள் என்னும் தலை ப்பில் கலாநிதி மகேஸ்வரனும், சுதந்திரத்துக்கு முற்பட்ட தமிழ் சிறுகதைகளில் பெண்கள் என்னும் தலைப்பில் கலாநிதி முருகதாசும், சுதந்திரத்துக்குப் பிற்பட்ட தமிழ் சிறுகதைகளில் பெண்கள் என்னும் தலைப்பில் திருமதி தாமரைச் செல்வியும், நாட்டார் பாடல்களில் பெண்கள் என்னும் தலைப்பில் நமீஸ் அப்துல்லாவும், தமிழ் ஊடகத்துறையில் பெண்கள் என்னும் தலைப்பில் திருமதி அன்னலட்சுமி இராசதுரையும் ஆய்வுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

இறுதிநாள் நிகழ்வாக இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களும் பல்வேறு துறைகளில் ஆளுநர் விருது பெற்றவர்களும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியினால் விருதும் பொற்கிளியும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். அத்துடன் இலக்கிய விழாவின் நான்கு தினங்களும் குறவன் கூத்து, நாட்டிய நாடகம், கோவலன் கூத்து, சமூக நாடகம், இரும்பொறை நாடகம், மீனவ நடனம், கண்ணகி வழக்குரை, சல்லாரி, குழு நடனம், கூத்துருவ நாடகம் உட்பட பல்வேறு கலை நிகழ்வுகள் நடைபெற இருக்கின்றன.

அதிதிகள், பேராளர், விருது பெறுகின்றவர்கள் அனைவருக்கும் தங்கும் வசதிகள் உணவு வசதிகள் அனைத்தும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க-80)



தடுப்பு முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கான தொழில் வாய்ப்புப் பற்றிய முகாம் நேற்று வவுனியாவில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

## வசதிகள் இன்றி இயங்கும் மாங்குளம் ம.வி.

மாங்குளம்,செப்.30

மாங்குளம் கண்டி வீதியில் அமைந்துள்ள மாங்குளம் மகா வித்தியாலயம் போதிய அடிப்படை வசதிகளற்று தனியார் காணியொன்றில் கொட்டகைகளில் இயங்கி வருகின்றது.

தற்போது இப்பாடசாலையில் 330 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். குடிதண்ணீர் வசதிகளோ, மலசல கூட வசதிகளோ அற்ற நிலையில் இப்பாடசாலை மாணவர்கள் உள்ளனர்.

யுனிசெப் மூலம் பதினாறு கொட்டில்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு இவை போதுமானதாக இல்லை என பாடசாலை வட்டாரங்கள் விசனம் தெரிவிக்கின்றன.

ஆரம்பப் பிரிவு மாணவர்கள் தற்போது மர நிழலின் கீழே கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-314)

# கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் ஆங்கில தினப் போட்டிகளின் முடிவுகள்

கிளிநொச்சி,செப்.30

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே வலய மட்டத்தில் நடத்தப்பட்ட இந்த ஆண்டுக்கான ஆங்கில தினப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியரின் விவரங்கள்.

எழுத்துருவாக்கம்

தரம் -6

எஸ்.மதுவர்திக் - முழங்காவில் மகாவித்தியாலயம், எம்.லக்சிகா - முழங்காவில் மகாவித்தியாலயம், ஏ.ஜனனி - புனித பற்றிமா கிறிஸ்தவ தமிழ் கலவன் பாடசாலை

தரம் -7

கே.கிருத்திகா -கிளிநொச்சி மகாவித்தியாலயம், வி.மிதுஷா - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, வி.நிம்ஷி - ஜெயபுரம் மகா வித்தியாலயம்.

தரம்-8

கே.சாரயா - வட்டக்கச்சி மகா வித்தியாலயம், எஸ்.கௌசியன் - ஜெயப்புரம் மகாவித்தியாலயம், கே.கௌசல்யா - கிளிநொச்சி மகாவித்தியாலயம்.

தரம் -9

எஸ்.துலக்ஷிகா - கிளி நொச்சி மகா வித்தியாலயம், ஜே.நிதூயா - புனித திரேசா மகளிர் கல்லூரி, எஸ்.நிரோசனா - ஜெயபுரம் மகா வித்தியாலயம்.

தரம்-10

ஜே.இந்திரஜித் - கிளிநொச்சி மகா வித்தியாலயம், ஜே.நர்மிதா - புனித திரேசா மகளிர் கல்லூரி.

தரம்-11

எஸ்.மகிஷா - ஜெயபுரம் மகா வித்தியாலயம், ஆர்.தர்சினி - கிளி நொச்சி மகா வித்தியாலயம், [illegible] - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

தரம்-12

என்.நிக்ஷன் - முழங்காவில் மகா வித்தியாலயம், எஸ்.தர்சினி - கிளிநொச்சி இந்துக் கல்லூரி,




ஜே.ஜீவரூபன் - ஜெயபுரம் மகா வித்தியாலயம்.

தரம் -13

ஏ.பி.தயாநந்தி - கனகபுரம் மகா வித்தியாலயம், ஆர்.ராசநாயகி - ஜெயபுரம் மகாவித்தியாலயம், எம்.கஸ்தூரி - கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



எங்களுக்காய்:
04.05.1929

இறைவனுக்காய்:
21.09.2008

### திருமதி சோமசுந்தரம் சரஸ்வதி

திதி: அபரபக்க ஸப்தமி

பத்துமாதம் சுமந்து பகலிரவாய் உழைத்த உடல்
இத்தரையில் எங்களுக்காய் இரவுபகல் இளைத்த உடல்
பற்றதனால் எங்களை நாள் பார்த்துவகை கொண்ட உடல்
சுற்றிவரு மக்களினைத் துலங்கிட நாள் வைத்த உடல்
சென்றிடுமோ எமைவிட்டு? சேர்ந்திடினும் இறைபாதம்
உத்தமியே ஆண்டிரண்டு உருகிடினும் அம்மா நாம்
செத்தொழியும் நாள்மட்டும் செத்தொழியாதுன் நினைவு
பத்தினியே வேல்தாளில் பகலிரவாய் நிறைவாக உற்றிடநாம்
தினம் வேண்டி உருகுகிறோம் உன் நினைவாய்...

சரவணை கிழக்கு,
வேலணை 9 ஆம் வட்டாரம். (103952) குடும்பத்தினர்.

## ஊனமுற்றோருக்கு சக்கர நாற்காலிகள்

நாவற்குழி,செப்.30

யு.எஸ்.எய்ட் நிறுவனத்தின் நிதியில் மோறிவேசன் லங்கா என்னும் நிறுவனத்தினால் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் வைத்து 06 ஊனமுற்றோருக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம், உடுவில், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த ஊனமுற்றோர் இவற்றைப் பெற்றுக் கொண்டனர்.

சக்கர நாற்காலிகள் தேவைப்படுவோர் பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் சக்கர நாற்காலிகள், முச்சக்கர வண்டிகள் திருத்தம் செய்ய விரும்புவோரும் பிரதேச செயலகப் பிரிவுகளுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-121)

## ஓய்வூதிய உரிமைப் பத்திரங்களைப் பெறலாம்

நவாலி,செப்.30

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் சமூக ஓய்வூதியத் திட்டத்தில் கடந்த வருடம் இணைந்து கொண்டவர்களின் உரிமைப் பத்திரங்கள் வந்து சேர்ந்துள்ளன.

கிராம சேவையாளர்கள் மூலம் இணைந்து கொண்டவர்களை அவர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (201-100)

**குறிப்பு**
இப்பக்கத்தில் பிரசுமாகியுள்ள செல்வன் பாலசுப்பிரமணியம் சனாதனின் நினைவஞ்சலி விளம்பரம் நேற்றையதினம் பத்திரிகையில் வெளியாகியிருக்க வேண்டும். தொழில்நுட்பத் தவறுகள் காரணமாக இன்றைய தினமே பிரசுரமாகின்றது (ஆ-ர்)


## கணனி விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள P4, 2.26 GHz, Computers Full Set மற்றும் கணனிப் பொருள்கள் என்பன ஒருவருட உத்தரவாதத்துடன் உடன் விற்பனைக்குண்டு. (விலை ரூபா 16750/= மட்டுமே) மொனிற்றர் தனியாகவும் கொள்வனவு செய்யமுடியும், 17'' விலை ரூபா 3500/= தொடர்பு: SKY Computer System 162, Main Street, Jaffna. T.P.021 222 1417 (சி/571446)


## வடமராட்சிக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுயர்ந்த



### திரு. ப.விக்னேஸ்வரன்

அவர்களுக்கு வாழ்த்துக்கள்

கல்வியில் உயர்ந்தவராய்
கண்ணியத்தில் கனம் பொருந்தியவராய்
மாணவரின் திறன் பேண
நாளும்தான் வளம் பேணி
கடைமையிலே கருத்தூன்றி
காரியத்தில் செயலோங்கி
பண்பு பெற்றுயர்ந்த பார்போற்றும்
எங்கள் கல்லூரி மைந்தனுக்கு
வாழ்த்துக் கூறி நின்றோம்
வையகத்தில் மேன்மேலும் உயர்வதற்காய்...!

கல்லூரிச் சமூகம்,
யா/ யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்.

## 31ஆம் நாள் நினைவலைகள்



எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி சசிகலா பாஸ்கரன்
அவர்களின் அருமை மாமனார்

அமரர்

**இராசையா நவரத்தினசிங்கம்**

அவர்களின் 31ஆம் நாள் நினைவு நாளில் அவரின் ஆத்மா நித்திய சாந்தி அடையவும், குடும்பத்தினர் மன அமைதி பெறவும் அஞ்சலி செய்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
கிளி/கனகபுரம் ம.வி, கிளிநொச்சி.

## நகராட்சிமன்றம் வல்வெட்டித்துறை
## வல்வெட்டித்துறை நவீன சந்தைக் கடைகள்
# கேள்வி அறிவித்தல்
### கடை இல.01,08,10,11,14,15,17,19,22,23,25,26,27

வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத்தின் நவீன சந்தைக் கடைகள் பதின்மூன்று (13) 2010ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 01ஆம் திகதி தொடக்கம் வாடகைக்கு விடுவதற்கான கேள்விகள் 18.10.2010ஆம் ஆண்டு திங்கட்கிழமை நண்பகல் 12 மணி வரை நகராட்சி மன்றம் வல்வெட்டித்துறை காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 2 மணிக்கு திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை ''செயலாளர்'', நகராட்சி மன்றம் வல்வெட்டித்துறை என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், கடையின் இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இணைப்பிரதியை ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்'' என முகவரியிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்களை குறிப்பிடப்பட்ட மீளளிக்க முடியாத படிவக்கட்டணமும் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்துவதன் மூலம் நகராட்சிமன்றம் வல்வெட்டித்துறை அலுவலகத்தில் 11.10.2010ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையை கொண்டு வருதல் வேண்டும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் மூன்று நாள்களுக்குள் கீ மணி, பெறுமதி சேர்வரி (VAT), என்பவற்றின் முழுத்தொகையையும் செலுத்தி ஒப்பந்தம் செய்தல் வேண்டும். மேலதிக விவரங்களை வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் அலுவலகத்தில் காரியாலய நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

குறிப்பு:

1. ஆகக் குறைந்த கேள்வித் தொகைக்குக் கீழ் குறிப்பிடப்படும் கேள்விகாரரின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
2. ஒரு விண்ணப்பப் படிவத்தில் ஒரு கடைக்கு மட்டும் விண்ணப்பிக்க முடியும். ஒருவர் எத்தனை கடைகளுக்கும் விண்ணப்பங்களை மன்றத்தில் உரிய முறையில் பெற்று விண்ணப்பிக்கலாம்.
3. தங்களால் கோரப்படும் கேள்வித் தொகையுடன் 12% VAT செலுத்தப்படல் வேண்டும். மேற்படி தொகையையும் விண்ணப்பப் படிவத்தில் காட்டப்படல் வேண்டும்.
4. கீ மணி மீள வழங்கப்படமாட்டாது.
5. நடத்தப்படவுள்ள வியாபாரத்தின் தன்மை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்படல் வேண் டும். தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை மன்றத்தால் பரிசீலிக்கப்பட்ட பின்பே அனுமதி வழங்கப்படும். பழவகைகள், வெற்றிலை, பாக்கு மற்றும் உணவுச் சாலைகள் போன்றவற்றுடன்தொடர்புடைய வியாபாரங்களை இக் கடைகளில் மேற்கொள்ள முடியாது.

| கடை இலக்கம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக்குறைந்த கேள்வித் தொகை VAT தவிர |
|---|---|---|---|
| 01 | ரூபா 1000.00 | ரூபா 15000.00 | ரூபா 312000.00 |
| 08 | ரூபா 1000.00 | ரூபா 15000.00 | ரூபா 312000.00 |
| 10 | ரூபா 1000.00 | ரூபா 15000.00 | ரூபா 312000.00 |
| 11 | ரூபா 1000.00 | ரூபா 15000.00 | ரூபா 264000.00 |
| 14 | ரூபா 1000.00 | ரூபா 15000.00 | ரூபா 264000.00 |
| 15 | ரூபா 1000.00 | ரூபா 15000.00 | ரூபா 264000.00 |
| 17 | ரூபா 1000.00 | ரூபா 15000.00 | ரூபா 312000.00 |
| 19 | ரூபா 1000.00 | ரூபா 15000.00 | ரூபா 312000.00 |
| 22 | ரூபா 1000.00 | ரூபா 15000.00 | ரூபா 216000.00 |
| 23 | ரூபா 1000.00 | ரூபா 15000.00 | ரூபா 216000.00 |
| 25 | ரூபா 1000.00 | ரூபா 15000.00 | ரூபா 264000.00 |
| 26 | ரூபா 1000.00 | ரூபா 15000.00 | ரூபா 264000.00 |
| 27 | ரூபா 1000.00 | ரூபா 15000.00 | ரூபா 264000.00 |

நகராட்சிமன்றம்,
வல்வெட்டித்துறை
30.09.2010.

திருமதி வி.சந்திரபோகன்
செயலாளர்
நகராட்சிமன்றம் வல்வெட்டித்துறை.

(சி/571436)

## நெஞ்சை விட்டகலா மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
13 . 11 . 1984

மறைவு
29 . 09 . 2007



### செல்வன் பாலசுப்பிரமணியம் சனாதன் (சனா)

காலம் எனும் காட்டாறு கரைபுரண்டு ஓடுதைய்யா
மூன்றாண்டுகள் ஆனதுவோ சனாதா நீ எமைப் பிரிந்து
தாண்டிடுவேன் தடைகளெல்லாம் தரணியிலே என்றிடுவாய்
பெரியவனாய் நீ வளர்ந்து சிறப்படைவாய் என நினைத்தோம்
எண்ணிய எண்ணமெல்லாம் கனவாகிப் போனதடா
பண்ணிய பாவம் என்ன? சனாதா உனைப் பறி கொடுக்க
வேண்டும் என்று பறித்தனனோ? வேதனையில் மாழுகின்றோம்
மீண்டும் உன் வரவை எண்ணி ஈண்டு நாம் வழி பார்க்கின்றோம்.

பொ. பாலசுப்பிரமணியம்
கமலாம்பிகை பவனம்,
இணுவில் மேற்கு,
இணுவில்.

உன் பாசவலையில் சிக்கித் தவிக்கும்:
அப்பா, அம்மா, சகோதர,
சகோதரிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் நெருப்புக் காய்ச்சல் அபாயம்! சுற்றுலாப் பயணிகளின் அதிகரிப்பே காரணம்

## எச்சரிக்கிறார் டாக்டர் ஜமுனானந்தா

யாழ்ப்பாணம்,செப்.30

குடாநாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையால் குடிமனைகள் அதிகமாக உள்ள இடங்களில் நெருப்புக் காய்ச்சல் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது என யாழ். மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி வைத்தியக் கலாநிதி சி.யமுனாநந்தா தெரிவித்தார்.

பொ.ஐங்கரநேசன் எழுதிய ஏழாவது 'ஊழி' நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்ற போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்:

மட்டுப்படுத்திய எண்ணிக்கையானவர்கள் வாழ்வதற்காக அமைக்கப்பட்ட வீடுகள் பலவும் இன்று தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகள் தங்கிச் செல்வதற்கு வாடகைக்கு விடப்படுகின்றன.

போதியளவான மலசலகூடங்கள் மற்றும் காற்றோட்ட வசதிகள் இல்லாமலுள்ள வீடுகளில் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் தங்க வைக்கப்பட்டு வருகின்றனர்.

எனவே மலசலகூடத்தை அளவுக்கு அதிகமானவர்கள் திடீரெனப் பாவிப்பதன் மூலம் மலசலகூடக் கழிவு நீர் குடிமனைகளில் உள்ள பாவனைக் கிணற்றுக்குள் தரைக்கீழ் நீராகச் செல்லக்கூடிய சந்தர்ப்பம் மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றது.

குடி தண்ணீரில் கலக்கும் இத்தகைய கழிவு நீர் நெருப்புக் காய்ச்சல் ஏற்படக் காரணமாக அமைகின்றது.

இதேவேளை தற்போது கையடக்கத் தொலைபேசிப் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. எனவே நீண்ட நேரம் ஒருவர் மேற்படி தொலைபேசியைப் பயன்படுத்துவதால் மூளைப் புற்றுநோய் ஏற்படக் கூடிய அபாய நிலையும் காணப்படுகின்றது.

மேலும் மென்பானங்களில் காணப்படும் ஒரு வகையான நச்சுப் பொருள் பெண்களின் என்புகளைப் பாதிப்படையச் செய்கிறது.

மென்பானங்களை சிறுபிள்ளைகளுக்கு வழங்குவதைத் தவிர்க்க வேண்டும். இதனுடைய தாக்கம் முப்பது வருட காலத்தின் பின்னர் தான் ஏற்படும் சாத்தியக்கூறுகள் இருக்கும் என ஆய்வுகள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது- என்றார். (த-201-86)

# கித்துள் பனங்கட்டி உற்பத்தியை அதிகரிக்க அமைச்சு நடவடிக்கை.

வலி.வடக்கு,செப்.30

கித்துள் பனங்கட்டி உற்பத்தி செய்யும் தொழிலாளர்களைப் பதிவு செய்யவும் அவர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்கவும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை அனைத்துப் பிரதேச செயலகங்கள்,உதவி அரசாங்க அதிபர் காரியாலங்களுக்கும் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கித்துள்உற்பத்திக் கைத்தொழிலை தேசிய ரீதியில் மேம்படுத்துவதற்கும் கித்துள் பனங்கட்டி உற்பத்தியாளர்களின் சமூக மற்றும் தொழில் சார் தன்மையை ஏற்று அவற்றை உயர்ந்த மட்டத்துக்குக் கொண்டு செல்லும் முகமாகவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இதன் மூலம் கித்துள்பனங்கட்டி உற்பத்தியாளர்களின் எதிர்காலப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் கித்துள் பனங்கட்டி கைத்தொழிலை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது கிராமிய பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு சிறப்பான காரணமாகவும் இருக்கின்றது.

அனைத்துப் பிரதேச செயலாளர்கள்,உதவி அரசாங்க அதிபர்களும் கூடிய கவனம் எடுத்து கிராம அலுவலர்கள் மூலம் தொழிலை பதிவு செய்ய நடவடிக்கையெடுக்கும் படியும் அறிவுறுத்தபட்டுள்ளது. (த-201-86)

# முதியோர் வார நிகழ்வுகள் கைதடியில் நாளை ஆரம்பம்

நாவற்குழி,செப்.30

சர்வதேச முதியோர் வாரத்தையொட்டிய நிகழ்வுகள் கைதடி முதியோர் இல்லத்தில் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் வியாழக்கிழமை வரை 7 நாள்கள் நடைபெறவுள்ளன.

இதில் ஆரம்பநாள் நிகழ்வு வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் க.சிவகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்டப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த கத்துருசிங்க, இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் கே.ஈ.டி. சமணசிறி ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி பு.சிவலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர்.

வரவேற்புரையை முதியோர் இல்ல அத்தியட்சகர் நாகேசர் இராஜலிங்கமும் ஆசியுரைகளை கைதடி மேற்கு முருகன் ஆலயக் குருக்கள் சிவஸ்ரீ யோ.குருசாமிக் குருக்களும் சாவகச்சேரிப் பங்குத் தந்தை அருட்பணி எம்.எல். தயாகரன் ஆகியோரும் வழங்குவர்.

சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை,கைதடி சேதுகாவலர் வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

(த-26-201-121-288-315-311)

# உடுவில் மகளிர் கல்லூரியில் 41 மாணவர் சித்தியெய்தினர்

வலி.வடக்கு,செப்.30

இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் உடுவில் மகளிர் கல்லூரியில் இருந்து 41 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இதேவேளை மேற்படி கல்லூரியில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 113 பேர் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று கல்வி அமைச்சு வழங்கும் சான்றிதழ்களைப் பெறத்தகுதி பெற்றுள்ளனர்.

மேற்படி கல்லூரியிலிருந்து 116 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதில் 113 பேர் 70 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ள அதேவேளை யாழ். மாவட்டத்தில் 187 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (201-86)

# அடிக்கடி நோய்வாய்ப்படும் குமுதினிப் படகு திருத்த வேலைக்காக ஊர்காவற்றுறைக்கு

யாழ்ப்பாணம்,செப்.30

நெடுந்தீவுக்கான போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்ட குமுதினி அரச படகு மீண்டும் பழுதடைந்ததை அடுத்து திருத்த வேலைகளுக்காக ஊர்காவற்றுறைப் பிரதேசத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை மேற்படி படகு பழுதடைவதும் அதனைத் திருத்தியமைக்க ஒவ்வொரு தடவையும் பல லட்சம் ரூபா நிதி செலவிடப்படுவதும் தெரிந்த விடயமாகும்.

இதேவேளை வீதி அபிவிருத்தி அதிகார சபை இவ்வாறு படகு பழுதடையும் வேளையில் சேவைக்கான மாற்று வழியை மேற்கொள்ள வேண்டும். நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கப்படகு , அங்குலாட்டி நிறுவனத்தின் படகுகள் சேவையில் ஈடுபடக் கூடிய நிலையில் உள்ளன.

எனவே மாற்று வழியாக மேற்படி படகுகளை வாடகைக்கு அமர்த்தி மக்களுக்குச் சிரமமற்ற முறையில்போக்குவரத்துச் சேவையை மேற்கொள்ள சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (201-7)



அண்மையில் இளவாலை பொலிஸ் பிரிவினரால் நடமாடும் சேவை யொன்று இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படம் இது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.ஆர்.பியந்த சேனநாயக்க, காங்கேசன் துறைப் பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திரா, பிரதேச செயலக முகா மைத்துவ உதவியாளர் எஸ்.சூரியக்குமார், இளவாலை கிராமசேவகர் என். நாக ராசா, காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரி.வை.ராஜி ஆகியோர் அழைத்து வருவதைப் படத்தில் காணலாம். *(படம்: தட்சி,கர்ணி)*

# சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்தவில்லை அதனால் இன்று நெருக்கடிக்குள் சிக்கியுள்ளோம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரை

அச்சுவேலி,செப்.30

மாணவர்கள் தமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை உரிய முறையில் பயன்படுத்தி தம்மை வளர்த்துக் கொள்வதனூடாக சமூகத்துக்கு இயன்றளவு உதவிகளைச் செய்ய வேண்டும். இவ்வாறு எமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களைத் தகுந்த முறையில் பயன்படுத்தாமையால் தான் இன்று பெரும் நெருக்கடிகளுக்குக் குள்ளாகி இடர்பாடடைகின்றோம்.

இவ்வாறு தெரிவித்தார் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கோப்பாய் சமுர்த்தி அபிவிருத்தி மன்றத்தால் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

எமது மாணவர்களின் கல்வி நிலை எதிர்பாராதளவுக்குப் பின் தங்கியுள்ளது. இதிலிருந்து விடுபட்டு எமது கல்வி நிலையை மேலும் முன்னேற்றமடையச் செய்ய வேண்டும்.

சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றம் ஆண்டு தோறும் இத்தகைய கல்வி மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டு வருவது பாராட்டத்தக்கது. இத்தகைய பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும்.

தமக்குக் கிடைக்கும் கற்றல் சாதனங்கள் முழுமையாகப் பயன்படுத்தி கல்வியில் முன்னேற வேண்டும். கற்றல் முன்னேற்றத்தைத் தகுந்த முறையில் பயன்படுத்தி தமது கல்வி நிலையையும் வாழ்க்கைத் தரத்தையும் உரிய முறையில் முன்னேற்றுவதுடன் தாம் பெற்றுக் கொண்ட அறிவாற்றல்களைத் தகுந்த முறையில் சமூக முன்னேற்றத்துக்கும் பயன்படுத்த வேண்டும் எனக் கூறினார்.

நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய வலி .கிழக்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஸ் உரையாற்றுகையில்:

கல்வியில் முன்னணியில் திகழும் வறிய மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை கருத்திற் கொண்டு கற்றல் சாதனங்கள் மாணவர்களுக்கு வழங்கும் முயற்சி பாராட்டத்தக்க விடயமாகும்.

கோப்பாய் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றம் கடந்த வருடங்களிலும் பார்க்க இவ்வருடம் கூடியளவு மாணவர்களுக்கு கற்றல் துணைச்சாதனங்களை வழங்குகின்றது.

அடுத்த வருடம் மேலும் தொகையை அதிகரிக்க எல்லோருக்கும் கற்றல்சாதனத் தொகுதியை வழங்கவுள்ளோம்.

கல்வியில் சிறந்த வறிய மாணவர்களுக்கு கற்றல் சாதனம் வழங்கும் நிகழ்வு ஆண்டு தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இக்கற்றல் சாதனங்களை சம்பந்தப்பட்ட மாணவர்கள் உரிய முறையில் பயன்படுத்தி தமது கல்வித் தரத்தை முன்னேற்றமடையச் செய்ய வேண்டும்- என்றார்.

இந்நிகழ்வில் வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்வியில்சிறந்த வறிய மாணவர்கள் 160 பேருக்கு தலா இரண்டாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதி கொண்ட கற்றல் துணைச் சாதனங்கள் வழங்கப்பட்டன. (த-201-11)

# மகப்பேற்று மனைக்கு உதவிப் பொருள்கள்

யாழ்ப்பாணம்,செப்.30

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையின் மகப்பேற்று மனைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மெத்தைகளையும் ஊனமுற்றோருக்கான ஊன்று கோல்களையும் வழங்கியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற பொருள்கள் வழங்கும் இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் மானிப்பாய் பிரதேச அமைப்பாளர் அன்ரன் ஜோன்சன், ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் நிசாந்தன், வைத்தியசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (201-100)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# பனை, தென்னை வளப் பணியாளருக்கு ஓய்வூதியத் திட்டம் புதிதாக அறிமுகம்

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்.மாவட்டப் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் மூலம் ஓய்வூதியத் திட் டம் கடந்த திங்கட்கிழமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பனை, தென்னை வள நிறுவனங்களின் பணியாளர்களை ஒன்றிணைத்தே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த 2005 ஆம் ஆண்டளவில் மேற்படி திட்டத்தின் உருவாக்கம் குறித்து ஆரம்ப வேலைகள் இடம்பெற்றன.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தத் திட்டத்துக்காக பணியாளர் ஒருவரிடமிருந்து வருடமொன்றுக்கு 600 ரூபா வீதமும், 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒவ்வொரு மாதமும் 250 ரூபாவும் அவர்களின் பணித் தொகையிலிருந்து அறவிடப்பட்டன. இதன் மூலம் இதுவரை திரட்டப்பட்ட 5 மில்லியன் ரூபாவும் மேலும் கூட்டுறவு ஆணையாளர் தீர்மானத்தின் படி சமாசம், கொத்தணி நிறுவனம் மூலம் 5 மில்லியன் ரூபாவும் திரட்டப்பட்டது. இந்த நிதியை வங்கியில் வைப்பிலிட்டு அதன் மூலம் கிடைக்கும் வட்டிப் பணத்தைக் கொண்டே இவர்களுக்கான ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தில் இதுவரை 400 பேர் வரை இணைந்துள்ளனர். மேலும் பணியாளர்கள் 60 வயதில் ஓய்வுபெறும் போது அவர்களின் நிதியில் 5 வீதம் அவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-201-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:**
தொழிலில், பணியில் விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள். மாமன், மைத்துனர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். கண்ட இடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். சக ஊழியர்களை அனுசரித்துச் செல்ல வேண்டும். வீண் உல்லாசம் பேசுவது நல்லதல்ல. முடிவுகள் எடுக்க முடியாமல் தடுமாற்றங்களைச் சந்திக்கலாம்.



**இடபம்:**
நினைத்த காரியங்கள் சாதகமாக முடியும். பெண்கள் விரும்பிய ஆடை, ஆபணங்கள் வாங்கலாம். பல நாள்களுக்கு முன்னர் நிறுத்தி வைத்த காரியம் ஒன்றை இன்று சிறப்பாக செய்து முடிப்பீர்கள். தொழிலில் புதிய அனுபவங்களைப் பெறலாம். பெற்றோரிடம் அனுசரணை அவசியம். உதிரி வருமானம் பெறலாம். அனுகூலமான நாள்.



**மிதுனம்:**
மறதியால் தண்டச் செலவுகளை எதிர்கொள்ள லாம். பொது நலப் பணியாளர்கள் விமர்சனங்க ளுக்கு ஆள்படலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல வாய்ப்பு கிடைக்கலாம். நீங்கள் எதிர்பாராத உறவினர் ஒருவர் உங்களிடம் உதவி கேட்கலாம். தொழில் ரீதியாக சிலருக்கு உதவி செய்யும் சூழ்நிலை உருவாகலாம். குடும்பச் செலவு கூடும்.



**கடகம்:**
சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்கலாம். சில வேலைகளில் ஆரம்பத்தில் தாமதம் இருந்தாலும், பன்னர் சரியான நேரத்திற்கு முடிவுக்கு வரும். உங்களின் அனுபவம் ஒன்றைப் பற்றி நண்பர்களிடம் சொல்வீர்கள். உறவினர்கள் நீங்கள் கேட்காம லேயே உதவிகள் செய்வர். பிள்ளைகள் மீதான பாசம் கூடும்.



**சிங்கம்:**
கடமையில் கண்ணும் கருத்துமாக இருக்கும் நாள். முன்னர் காலை வாரி விட்ட சிலர் இப்போது கை கொடுத்து உதவுவர். உத்தியோகத்தர்கள் அதிக வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். விமர்சனப் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். காரிய வெற்றி உண்டு.



**கன்னி:**
எதிலும் உள்நோக்கத்துடன் செயற்படும் நாள். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். உறவினர்கள் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள். பெண்கள் கணவனின் பாராட்டைப் பெறலாம். எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். சில வேலைகளை அவசரப்பட்டு செய்து விட்டு வருத்தம் அடைவீர்கள். சிவாலய வழிபாட்டின் மூலம் சிறப்பு பெறலாம்.



**துலாம்:**
கணவன் மனைவி இடையே சச்சரவுகள் தோன்ற லாம். திட்டமிட்ட பணிகளை திடீரென தள்ளி வைக்க நேரிடலாம். பேராசை, சபலங்களால் சில இழப் புக ளுக்கு ஆள்படலாம். நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம். இறை வழிபாட்டின் மூலம் இன்னல்களை குறைக்க வேண்டிய நாள்.



**விருச்சிகம்:**
மனைவி வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். உறவினர்களுடன் வெளியூர்களுக்குச் செல்லலாம். இருந்த இடத்தில் இருந்தே தொலைபேசி மூலம் காரியம் சாதித்துக் கொள்வீர்கள். சொத்துக்கள் வாங்கல், கொடுக்கலில் எச்சரிக்கை அவசியம். சில விடயங்களில் கருணை, பெருந்தன்மையோடு நடந்து கொள்வீர்கள். மகிழ்ச்சியான நாள்,



**தனுசு:**
அடுத்தவர்கள் பணம் உங்களின் கைகளில் புரளலாம். வர்த்தகர்கள் புதிய முதலீடு விடயங்களில் நிதானம் அவசியம். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெறும் சூழ்நிலை உருவாகும். ஒரு விடயத்தில் அதிகமாக கஷ்டப்பட்டாலும், ஆதாயம் கிடைக்கும். உறவினர்கள் சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆள்படலாம். கனிவான பேச்சால் காரியம் சாதிப்பீர்கள்.



**மகரம்:**
பலர் பங்கேற்கும் நிகழ்ச்சிஒன்றில் கலந்து கொள்ளலாம். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். அரசு பணியாளர்கள் பணியில் அதிக எச்சரிக்கையுடன் செயல்ற்பட வேண்டும். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்ய நேரிடலாம். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகுமோ என கலக்கம் அடையலாம்.



**கும்பம்:**
எதிலும் பொறுப்புடன் செயற்பட்டு பெருமை சேர்க்கும் நாள். உற்வினர்கள் தொடர்பான விடயங்களில் நாசுக்காக நடந்து கொள்ள வேண்டும். அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய பேச்சுக்களை தவிர்க்க வேண்டும். நிறுத்தி வைத்த கடன் மிகுதி ஒன்றை உடனே கொடுக்க நேரிடலாம். சக ஊழியர்கள் சிலர் மீது கோபம், எரிச்சல் உண்டாகலாம்.



**மீனம்:**
செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிப்பீர்கள். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். முக்கியமான விடயங்களில் நல்லவர்களின் அறிவுரையை கேட்டு நடப்பீர்கள். நண்பர்கள் சந்திப்பால் சந்தோஷம் அதிகரிக்கும். நடக்குமோ நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று நல்ல விதமாக நடந்து விடலாம். சூரியவழிபாட்டின் மூலம் சுகம் கூடும்.

# தற்செயல் நிவாரணக் கொடுப்பனவைப் பெறலாம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் தற்செயல் நிவாரணம் பெறுவதற்கு விண்ணப்பம் செய்த கென்யூட் இளவாலையைச் சேர்ந்த் மேரி செகஸ்தா, மாரிசன் கூடல், இளவாலையைச் சேர்ந்த அ.சந்திரன், சுயதொழிலுக்கு விண்ணப்பித்த சில்லாலையைச் சேர்ந்த த.கருணாதேவி ஆகியோரின் கொடுப்பனவுக் காசோலை கள் செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

இவர்களை மேற்படி செயலகத்துக்கு வந்து காசோலைகளைப் பெற்றுச் செல்லுமாறு சமூக சேவைகள் உத்தியோகத்தர் வி.அருந் தவராசாகேட்டுள்ளார். (201-100)

# அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி, செப்.30

தென்மராட்சிக் கல்வி வலயப் பாட சாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடை பெறுமென வலயக் கல்விப் பணிப் பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (எ-207)

# வறுமையின் விலை



ஒரு ஊரிலே இமாம் என்னும் ஒருவர் துணி வியாபாரம் செய்து வந்தார். அவர் பல விதமான துணிகளை விற்பனை செய்து வந்தார். ஒருநாள் வயதான அம்மா ஒரு பழைய பட்டுச் சேலையை எடுத்து வந்து அதை இமாமிடம் காட்டினார்.

'' ஐயா... இந்தப் பழைய சேலையை விலைக்கு வாங்கமுடியுமா?'' என்று கேட்டார். அங்கு வேலை செய்பவர். புதுப்புடைவை வியாபாரம் செய்பவர்கள் யாராவது பழைய புடைவையை விலைக்கு வாங்குவார்களா?

அதுசரி இமாம் என்ன சொல்கிறார் என்று அவர்கள் கவனித்தார்கள். இமாம் அந்த மூதாட்டியை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தார். பின் ''அம்மா... இதற்கு எவ்வளவு பணம் வேண்டும்?'' என்றார். ''இதற்கு நூற்று இருபது ரூபா வேண்டும்!'' என்றார் அந்த அம்மா.

இமாம் இலேசாகச் சிரித்துக் கொண்டு தன்னுடைய ஊழியரைப் பார்த்தார். ''இந்த அம்மாவுக்கு 400ரூபா கொடுத்தனுப்பு'' என்றார். அந்தப் பணியாளருக்கு மிகவும் ஆச்சரியம்! என்ன இது அந்த அம்மா பழைய புடைவையைக் கொண்டு வந்து கொடுத்து 120 ரூபா வேண்டுமென்று கேட்கிறார். இவரும் 400ரூபா கொடுத்தனுப்புங்கள் என்றார். ஒன்றும் புரியாது யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

''ஆமாம் அவர்களுக்கு 400ரூபா கொடுத்தனுப்புங்கள்'' என்றார் அவர். ஒருவர் மெதுவாக கேட்கிறார். ''ஏன் இதற்கு இவ்வளவு அதிக விலை கொடுக்க வேண்டும்?'' அந்தப் பழைய புடைவையை பார்த்துக் கொண்டு இமாம் சொல்கிறார்.

பேசாமல் நான் சொல்லும்படி செய்யுங்கள்! நீ அந்தத் துணியைப் பார்க்கிறாய். நான் அந்த ஏழையின் வறுமையை பார்கிறேன் என்றார்.

அதன் பின் அந்த ஊழியர் மறுவார்த்தை பேசாது பணத்தைக் கொண்டு வந்து அம்மாவிடம் கொடுத்தார் அந்த அம்மா. மனது நிறைந்தது! வறுமைக்கு விலை இல்லை! அது எல்லோருக்கும் புரியாது! பெரியவர்களுக்குத்தான் புரியும்.

ஒருவர் நற்பண்புகள் யாவை? என்று நபிகள் நாயகத்திடம் கேட்டார். அதற்கு அவர் ஒற்றுமையோடு இருப்பது நல்ல செயல்களைச் செய்வது, தர்மம் புரிவது, சலாம் சொல்ல முந்திக் கொள்வது, நோயாளிகளை சென்று காண்பது, நல்லவரா? கெட்டவரா? என்று பாராமல் பிரேத ஊர்வலத்தில் கலந்து கொள்வது, முஸ்லீமா? முஸ்லிம் அல்லாதவரா? என்று பாராமல் அயலாருடன் அன்புடன் நடந்து கொள்வது, முதியவர்களுக்கு மரியாதை செய்வது, மன்னிப்பது, சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைப்பது, கோபத்தை அடக்குவது, விலக்கப்பட்டதைத் தவிர்ப்பது, உறவினர்களிடம் அன்பாய் நடந்து கொள்வது, கர்வம் கொள்ளாமல் இருப்பது இவையெல்லாம் நற்பண்புகள் என்றார் அவர்.

இப்படிப்பட்ட நற்பண்புகளில் ஒன்றுதான் அந்த இமாம் அந்த மூதாட்டிக்குச் செய்த உதவி.

**கோ.சுவாமிநாதன்.**

# வாழப்பழகுவோம் வாருங்கள்



வாழ்க்கை இரண்டு வகையானது.ஒன்று இன்பத்தைத் தேடும் முயற்சி, இரண்டு உண்மையைத் தேடும் முயற்சி. ஆனால் உண்மை யைத் தேடி அதை உணருவதுதான் வாழ்க்கை.

புடைவைக் கடைக்குச் செல்லும் எந்தப் பெண் ணும் திருப்தியோடு வெளியே வந்ததாக சரித்திரம் இல்லை. வாங்கியதை விட வாங்காதவையில்தான் ஏக்கம் அதிகமாக இருக்கும்.

இவ்வாறுதான் வெறிநாய்கள் போல் வேட்டையாடப் போய்த் தறிகெட்டு அலைவது போல் நாமும் பொறிகள் வழியான வேட்டையில் நெறிகெட்டு அலைகிறோம்.

எல்லா இன்பங்களுக்கும் இலவச இணைப்பாக துன்பம் தரப்படுகிறது என்பது நமக்குப் புரிவதில்லை.

மதுபானக் கடைகள், உணவுக்கடைகள், பிர மாண்டமான துணிக்கடைகள், சினிமாக் கொட்டகைகள், இரவு விடுதிகள் எல்லாம் மக்கள் இன்பத் தைக் கொள்முதல் செய்யும் இடங்கள்.

அதிருப்தி,வயிற்றுவலி, தலை வலி, மனவருத்தம்,எயிட்ஸ் என்பன இலவச இணைப்புகளாகக் கிடைப்பன.

எனவே இன்பத்தைத் தேடும்போது துன்பமும் சேர்ந்து கிடைப்பதால் இன்பத்தை எப்படி அடைய முடியும்.

இன்பமும் துன்பமும் கலந்ததுதான் வாழ்க்கை என்பதை உணர்ந்து தேடும்போது நிம்மதி, நிறைவு, சாந்தம் என்பன கிடைக்கிறது. நம்முடைய நரகம் அழிந்து விடுகிறது.

**சுகி.சிவம்.**

# பக்தனுக்கு உதவும் திருவுருவ வழிபாடு

கடவுள் ஆர்வமுள்ளவன் கல்லில் உள்ள பிரதிபிம்பத்தைக் கடவுளின் நிலைக்கு உயர்த்துகிறான். அவன் கடவுளை கல்லின் நிலைக்குக் குறைக்கவில்லை.

திருவுருவம் என்பது ஒரு தெய்வீக பாத்திரம், தெய்வீகத்தை ஊட்டிக் கொண்டிருப்பது, தெய்வீகத்தின் அடிப்படை, தெய்வீகத்தை ஞாபகப்படுத்துவது. அந்தத் திருவுருவத்தில் வந்து ஆரோகணிக்கும்படி (இருந்து கொள்ளும்படி) தெய்வம் ஆராதிக்கப்படுகிறது. எல்லையற்ற ஒன்று ஒரு அற்பமான சிறியதாகக் குறைக்கப்படவில்லை. ஒரு சிறியது எல்லையற்ற ஒன்றின் அடையாளமாக அங்கீகரிக்கப்படுகிறது.

பார்ப்பதில் இருந்து பார்க்கப்படவேண்டிய ஒன்றுக்கு, துளியில் இருந்து எல்லையற்ற சமுத்திரத்திற்கு, வெளிப் படையான ஒன்றில் இருந்து மறைபொருளான ஒன்றிற்கு, இப்படித்தான் திவுருவ வழிபாடு பக்தனுக்கு உதவி செய் கிறது. உண்மையில் எல்லையற்ற பரம்பொருளை ஒரு சக்தியாக கருணையின் உருவமாக ஞானமாக, பேரறிவாக, தூய்மையாக, அதீத பலமாகத்தான் ஒருவனால் புரிந்து கொண்டு உருவகப்படுத்த முடியும். இந்தக் குணங்கள் அவனு டைய உணர்வில் ஊடுருவி, சூரியன், தாமரை, சமுத்திரம், அலைகள் என்று உருப்படியான அனுபவமாக முடியும்.

இறைவனின் நாமம் என்பது சொல்லக்கூடிய உருவம், திருவுருவம். பார்க்க கூடிய (கிரகித்துக் கொள்ளக் கூடிய) ஒரு அடிப்படை. ஒரு சிறிய விதை ஒரு பெரிய ஆலமரத்தை உள்ளடக்கி இருக்கிறது. லிங்கம் என்பது வெளிப்படையாகக் கூடியதை மட்டுமல்ல, வெளிப்படையான பிரபஞ்சத்தையும் அதன் சிருஷ்டி கர்த்தாவையும் உள்ளடக்கியுள்ளது. அது தான் அவர் சங்கற்பம்.

நாக்கினால் நாமம் உச்சரிக்கப்பட்டதும் திரு உருவம் மனதினால் வணங்கப்படுகிறது. இது ஒரு நாளாந்த யந்திர வழிபாடாகக் குறைந்து விடக்கூடாது, நாமத்தின் கருத்தும், திருவுருவத்தின் சிறப்பும், உள்ளடக்கமும் ஊனாய், உயிராய், உணர்வாய் உட்புகவேண்டும். வழக்கமாக, ஒரு கிரமமாகச் செய்யும் வழிபாட்டிலிருந்து மேம்பட்டு விடுங்கள். வழிபாட்டில் உண்மையாகவே ஆழமாக உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். மனித முயற்சிகளும், பிரயத்தனங்களும் சம்பாதித்துக் கொள்ளவேண்டிய அமைதிக்கும் திருப்திக்கும் இதுதான் வழி. பருத்தி மரத்துக்கான விதையை நடுவதன் மூலம் நீங்கள் எப்படி மாம்பழங்களை எதிர்பார்க்க முடியும்?



இப்பொழுதே செய்யுங்கள். எல்லாப் பிரச்சினைகளுக்கும் அடிப்படையான இந்தப் பிரச்சினையின் உடனடித் தேவை இதுதான். இன்று இப்பொழுது பசியாக இருந்தால் நாளை சாப்பிடலாம் என்று இருக்கமாட்டீர்கள். நாளைக்கு பட்டினியாக இருக்க வேண் டுமே என்று இன்றைக்குச் சாப்பிடமாட்டீர்கள். முன்போ, பின்போ அல்ல பசிக்கும் போது சாப்பிடுங்கள். இப்பொழுது வணங்குங்கள். இப்பொழுது அடைந்து விடுங்கள்.

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராதனை பல்கலை மாணவர்கள் செவ்வாய் முதல் விரிவுரைப் பகிஷ்கரிப்பு

## சகல பீடங்களும் முடங்கின

கண்டி,செப். 30

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஏழு பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் நேற்று செவ்வாய்க் கிழமை முதல் இரண்டு வாரங்களுக்கு விரிவுரைகளைப் பகிஷ்கரித்துள்ளனர்.

கலைப்பீடம், பொறியியல் பீடம், விஞ் ஞானபீடம், விலங்கு மருத்துவபீடம், பல் மருத்துவ பீடம், இணைந்த சுகாதார கற்கை நெறி பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களே இந்தப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள் ளனர்.

உயர்கல்வி அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்க கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையை ஆரம்பித்து வைப்பதற்காக வந்த பொழுது மாணவர்கள் சவப்பெட்டியுடன் கூக்குரலிட்டு ஆர்ப்பாட்டம் செய்திருந்தனர்.

இது தொடர்பாக, அண்மையில் நான்கு மாணவர்கள் கைது செய்யப்பட்டு கண்டி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இவர் கள் கைதானதை எதிர்த்தும், நான்கு பேருக் கும் பிணை வழங்க மறுக்கப்பட்டமைக்கும் எதிர்ப்புத் தெரிவித்தே தாம் இந்த வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வகுப்பு பகிஷ்கரிப்பு காரணமாக பல்கலைக்கழகம் முழுவதும் கறுப்புக்கொடி கள் கட்டப்பட்டுள்ளன.இதனால் பல்கலைக் கழகம் வெறிச்சோடியுள்ளது.

இணைந்த சுகாதார பீட மாணவர் தலைவரும், பொறியியல் பீட மாணவர் தலைவரும், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தலைவர் உட்பட நால்வரே விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

வகுப்புகளைப் பகிஷ்கரித்த மாணவர்கள் கண்டி மாநகரில் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டம் நடத்தவும் திட்டமிட்டுள்ளனர். (ளி)




# ஆன்மீகத்தை வளர்ப்பதன் மூலமே பொருளாதார இலக்கை எட்டலாம்

## கண்டியில் பிரதமர் உரை

கண்டி,செப். 30

''ஆன்மீக வளர்ச்சிக்கு முக்கியத் துவம் கொடுப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளார் என பிரதமர் டி.எம். ஜயரட்ண தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை கண்டி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற புத்த ஜயந்தி 2600 வருட கொண்டாட்டங்கள் தொடர்பாக அரச ஊழியர்களையும் அதிகாரிகளையும் அறிவுறுத்தும் நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உலக வரலாற்றை எடுத்துப் பார்த்தால் அனைத்து நாடுகளிலும் யுத்தத்தின் பின்னர் ஏதாவது ஒரு சீர்திருத்த சிந்தனை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இதேவிதம் இலங்கையிலும் ஒரு சீர்திருத்தம் தேவைப் படுகிறது.

இலங்கைக்கு தற்போது தேவைப்படுவது ஆன்மீக சிந்தனையாகும். இந்த ஆன்மீக சிந்தனையை ஏற்படுத்தவே நாம் தேசிய வேலைத்திட்டம் ஒன்றை முன் எடுத்துள்ளோம். இது நாடளாவிய வேலைத்திட்டமாகும்.

இது ஒரு சமயத்திற்கு மட்டும் சொந்தமான வேலைத் திட்டமல்ல. ஏனைய சமயங்களையும் உள்ளடக்கிய வேலைத்திட்டமாகும்.

பௌத்தர் அல்லாத 27 சதவீத மக்கள் இலங்கையில் உள்ளனர். அவர்களை நாம் கைவிட முடியாது. 30 வருட யுத்தத்தின் பின்னர் நாம் விடுதலையடைந்து 16 மாதங் கள் மட்டுமே ஆகிறது. 16 மாதத்தில் 8.5 சதவீத வளர்ச்சியைப் பெற்ற நாம் யுத்த மில்லா விட்டால் எங்கோ போயிருக்கலாம்.

இருப்பினும் எமது இந்தப் பொருளாதார வளர்ச்சியில் சரியான பயனை அடைவதா யின் ஆன்மீக வளர்ச்சியும் தேவை.

இப்படி பிரதமர் தெரிவித்தார்.

இதனையடுத்து பிரதமர் கண்டி சுயீஸ் ஹோட்டலில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பௌத்த குருமாருக்கு தானம் வழங்கினார்.

அதன் பின்னர் கண்டி பிள்ளையார் கோவில், மீராமக்கம் பள்ளி, புனித அந்தோனியார் தேவாலயம் போன்ற சர்வமத ஸ்தலங்களுக்கும் விஜயம் செய்து வழிபாடுகளும் மற்றும் பிரார்த்தனைகளில் ஈடுபட்டார். (ளி)

# மாணிக்கக்கல் வர்த்தகரை ஏமாற்றி ரூபா 3 லட்சம் மோசடி; மூவர் கைது

கொழும்பு, செப்.30

மாணிக்கக்கற்களை கொள்வனவு செய்வதற்காக வந்திருந்த இரு வர்த்தகர்களை ஏமாற்றி ரூபா 3 லட்சம் பணத்தை அபகரித்துச் சென்ற மூவர் உடவளவை பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கொடக்காவல, மஹாகம் காட்டில் மறைந்திருந்த கொள்ளையர்கள் பிரதேசவாசிகளின் உதவியுடன் மடக்கிப் பிடிக்கப்பட்டனர் என உடவளவை பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கொள்ளையுடன் தொடர்புடைய மற்றுமொருவர் தப்பியோடியுள்ளார். அவரைக் கைதுசெய்ய தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தங்களிடம் மாணிக்கக் கற்கள் விற்பனைக்கு இருக்கின்றன எனக் கூறிய சந்தேகநபர்கள் வர்த்தகர்கள் இருவரையும் பல்லேபெத்த வெல்லாவ பிரதேசத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு சென்றவுடன் வர்த்தகர்களிடமிருந்த 3 லட்சம் ரூபாவை அபகரித்துக் கொண்டு அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.அதனைத் தொடர்ந்து வியாபாரிகள் உடனடியாக உடவளவை பொலிஸாருக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தனர். அதனையடுத்து பத்துப்பேர் கொண்ட பொலிஸ் குழு குறிப்பிட்ட பிரதேசத்தைசுற்றிவளைத்தது.

முதலில் கைதுசெய்யப்பட்ட இருவரிடமிருந்து ரூபா 2, 81,000 பணமும், அதன் பின் வெல்லாவ மகாகமையில் கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து மிகுதிப் பணமும் கைப்பற்றப்பட்டன. (ளி)

# ஆற்றில் நீராடிய மாணவர் பலி

கொழும்பு,செப். 30

இரத்தினபுரி, வெலிகுல்ஓயா ஆற்றில் நீராடிக்கொண்டிருந்த மாணவர் ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார்.

நண்பர்கள் சகிதம் நீராடிக் கொண்டிருந்த இருவர் நீரோட்டத்தினால் இழுந்துச் செல்லப்பட்டார் என்றும், அவர்களில் ஒருவரை காப்பாற்றியபோதும் மற்றவரைக் காப்பாற்ற முடியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

19 வயதான அசித லஹித என்ற மாணவரே இவ்வாறு பலியானார். 4 வருட காலத்தில் அப்பகுதியில் சுமார் 14 பேர் நீரில் மூழ்கி பலியா கியுள்ளனர் என பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர். (ளி)

# சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாக்க சட்டத்தரணிகளின் சேவை இப்போது தேவை

## மாகாணசபை உறுப்பினர் அன்வர் தெரிவிப்பு

திருகோணமலை, செப்.30

தற்போதைய சூழ்நிலையில் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள சட்டத்தரணிகளின் சேவை தேவை என கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர் தமதுரையில் குறிப்பிட்டார்.

புல்மோட்டையில் அண்மையில் நிகழ்ந்த தனியார் கல்வி நிலையத் திறப்புவிழாவில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார். ஜனாப் ஏ.ஆர்.றவூப் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஆர். எம்.அன்வர் தொடர்ந்து பேசுகையில், ''தனியார் கல்விக் கூடங்களில் பயிலும் மாணவர்கள் கூடிய பலன் பெறுகின்றனர். இதை மறுக்க முடியாது.'' - என்றார்.

''மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப, எமது பிரதேசத்தில் போதிய தனியார் கல்வி நிலையங்கள் கிடையா. மாணவர்களின் எண்ணிக்கை இன்று துரிதமாகப் பெருகி வருகிறது. மாணவர்களின் கல்வித் தேவை யைப் பெருமளவில் தனியார் கல்விக்கூடங்கள் தக்கவகையில் ஈடுசெய்கின்றன'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''அதேவேளை, பணத்தைச் சுருட்டும் கூடமாக எந்தவொரு கல்வி நிலையமும் மாறிவிடக் கூடாது. இதயபூர்வமான, அப்பழுக்கற்ற கல்விச் சேவையைப் பெரும் அர்ப்பணிப்போடு, ஒவ்வொரு கல்வி நிலையமும் ஆற்ற வேண்டும். சமூகத்தின் எதிர்பார்ப்பும் இதுதான்'' என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

''இன்று எமது மாகாணத்தில் பல்வேறு பிரச்சினைகள் தலைதூக்குகின்றன. இவற் றிற்கு நாம் முகம்கொடுக்க நேரிடுகிறது. நமது உரிமைகள் மீறப்படும்போது, நாம் எங்கே செல்லவேண்டும் என்று எமக்கே புரியாத புதிராகி விடுகிறது'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''இத்தகைய முடியாத சந்தர்ப்பத்தில்தான் எமக்கு சட்டத்தரணிகளின் சேவை தேவைப்படுகிறது. இத்தகைய கல்வி நிலையங்கள் அர்ப்பணிப்போடு, கல்வித் தொண்டை மேற்கொண்டால், எதிர்காலத்தில் எமது பிரதேசத்தில் வீட்டுக்கொரு சட்டத்தரணி உருவாக வாய்ப்பு உண்டு'' என்றும் அன்வர் தெரிவித்தார்.

புல்மோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டீ.டீ.பீ. நந்தன, பொலிஸ் பரிசோதகர் றீ.முகைதீன், குச்சவெளி பிரதேச நீதிபதி ஏ.கதிர்லெப்பை ஹாஜியார், ஓய்வுபெற்ற அதிபர் எஸ்.ஏ. அஸீஸ், புல்மோட்டை பெரிய பள்ளித் தலைவர் ஆகியோரும் உரையாற்றினர். (ளி)

# கல்முனையில் 9 மாதங்களில் 34 விபத்துகள்

மட்டக்களப்பு, செப். 30

கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த ஜனவரி மாதம் முதல் இன்று வரை 34 விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். கல்முனையின் பிரதான வீதி புனரமைக்கப்பட்டதன் பின்னர் இப் பகுதியில் விபத்துகள் நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணம் உள்ளன.

இவ்விபத்துச் சம்பவங்கள் அதிகரிப்பதற்கு மிகப் பிரதான காரணம் பெற்றோரே எனப் பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவித்த கல்முனை வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரி எஸ். ஐ.காமினி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறிய வை வருமாறு:-

''பெற்றோருடைய பொறுப்பற்ற தன்மை காரணமாகப் படிக்கும் மாணவர்களுக்கு மோட்டார் சைக்கிள்களையும், கையடக்கத் தொலைபேசிகளையும் வாங்கிக் கொடுப்பதால் தான் அதிக விபத்துகள் இடம்பெறுகின்றன.

இதேபோல், மது அருந்திக் கொண்டும், தொலைபேசியில் பேசிக்கொண்டும், அதி வேகமாக வாகனம் ஓடுதல், வீதி ஒழுங்கை சரிவரப் பின்பற்றாமை ஆகியவற்றாலும் விபத்துக்கள் அதிகரிக்கின்றன'' - என்றார். (ளி)

# வெருகலம்பதி உற்சவத்தில் மக்கள் வெள்ளம்

திருகோணமலை, செப்.29

கிழக்கிலங்கையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க சின்னக்கதிர்காமம் என்று சிறப்பாக அழைக்கப்படும் வெருகலம்பதி அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி தேவஸ்தானத் தின் வருடாந்த தீர்த்த உற்சவம் வெருகல் கங்கையில் திங்கட்கிழமை காலை நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான அடியார்கள் கலந்துகொண்டனர்.

தீர்த்த உற்சவத்திற்கு முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை இரவு சுமார் எண்பது ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் ஆலய வழிபாடுகளில் கலந்துகொண்டனர்.

குறிப்பாகத் தென்இலங்கையிலிருந்தும் சிங்கள மக்கள் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டனர். மக்கள் வெள்ளத்திற்கு மத்தியில் திருடர்கள் இம்முறை தம் கைவரிசை யைக் காட்டியுள்ளார் கள்.

பலருடைய தங்கச்சங்கிலி, காப்பு, வளையல், கையடக்கத் தொலை பேசி, பணம் ஆகியவற்றைத் திருடர்கள் திருடியுள்ளனர். இதனால் மக்கள் அச்சத்துடனேயே ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

உற்சவத்தின் இறுதிநாளன்று வெருகல் - திருகோணமலைக்கான பஸ்சேவை மிகவும் குறைவாக இடம்பெற்றது. இதனால் திரு கோணமலை பக்தர்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்துள்ளனர் எனத் தெரிவிக் கப்படுகின்றது. (ளி)

# மீள்குடியேற்றப்பட்ட மக்களின் கஷ்டங்கள் தீர்த்து வைக்கப்படும்

## திருக்கோவிலில் பிரதி அமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

அம்பாறை, செப்.30

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுவதற்கென மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஞாயிற்றுக்கிழமை திருக்கோவில் பிரதேசத் திற்கு விஜயம் செய்தார்.

கடந்த கால யுத்த சூழ்நிலை காரணமாக தாம் பிறந்த மண்ணை விட்டு அகதிகளாக இடம் பெயர்ந்து கடந்த பல வருடங்களாக அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் வாழ்ந்த திருக்கோவில் பிரதேச மக்கள் தற்போது தமது சொந்த கிராமத்தில் குடிய மர்த்தப்பட்டாலும் தொடரும் கஷ்ட நிலைகள் விரைவில் நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக் கப்படும் என பிரதிய மைச்சர் தெரிவித்தார். பிரதியமைச் சருடன் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் செல்வராஜாவும் வருகை தந்திருந்தார்.

பிரதியமைச்சர் இந்த விஜயத் தின் போது திருக்கோயில் விநாயகர் கோயிலுக்கும் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். (ளி)




# தம்பலகாமத்தில் வீதி போக்குவரத்துப் பயிற்சி

பன்குளம், செப்.30

தம்பலகாமம் பிரதேச பாடசாலை மாண வர்களுக்கு, தம்பலகாமம் பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸாரால் அண்மையில் வீதிப் போக்குவரத்து தொடர் பாக பயிற்சி அளிக்கப்பட்டது.

பட்டிமேடு இ.கி.ச.சாரதா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு குளக்கோட்டன் வித்தியால யம், ஆதி கோணேஸ்வரா மகா வித்தியாலயம் ஆகியவற்றிலிருந்து தலா 20மாணவர் கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு இப்பயிற்சி யில் ஈடுபடுத்தப்பட்டனர்.

ஆதிகோணேஸ்வரா மகாவித்தி யாலயத் தில் காலை 8.30மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை இப்பயிற்சி வழங்கப்பட்டது. அதிபர்களும் இதில் கலந்துகொண்டனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாத மேடை

**தேவையா** / **தேவையற்றதா**

## மொபெட் ரக (49cc) வாகனங்களுக்கு புதிதாக அறிமுகப்படுத்தவுள்ள நடைமுறைகள்

### தேவையா

இன்று வியத்தகு விஞ்ஞானத்தின் விந்தையினால் வாகனங்கள் எமது நாட்டில் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத அளவுக்கு பல்கிப் பெருகிக் காணப்படுகின்றன. அது மட்டுமன்றி வாகனம் ஓட்டுவதற்குத் தகுதி என்று கூற முடியாது. வேறுபாடுகளின்றி வாகனங்கள் செலுத்துகிறார்கள். இது ஒரு அபாயமானது. 49cc ரக என்று கூறிவிட முடியாது. எவ்வாறிருப்பினும் நடைமுறைகள் தேவை. அவற்றை கடைப்பிடிப்பதனால்தான் எமது நாட்டிலே அண்மைக் காலமாக தெளிவாக அதிகரித்துக் கொண்டிருக்கும் வீதி விபத்தின் விளைவுகளை ஓரளவேனும் கட்டுப்படுத்த முடியும். நடைமுறைகள் இல்லாது போனால் ஒழுங்கு முறைப்படி வாகனங்களை ஓடக் கற்றுக் கொள்ளாதவன் தனது சுய நலத்துக்காக வாகனத்தை செலுத்துகின்றபோது தேவையற்ற மரணங்களும், போக்குவரத்து இடைஞ்சல்கள், சீரழிவுகள் ஏற்படுவதோடு காலதாமங்களும் ஏற்படும்.

ஏனையோரின் மன உளைச்சலுக்கும் உள்ளாக வேண்டி ஏற்படும்.

எனவே 49cc ரக வாகனங்கள் பாரங்குறைந்ததாக இருந்தாலும், வேகம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், காலத்தின் குறிப்பின்படி நடைமுறைகள் உரிய வகையில் பின்பற்றப்படுவதன் மூலம் வீணான பிரச்சினைகளை விலக்கிக் கொள்ளவும் அவலங்களை ஓரளவு தணிக்கவும் முடியும். எனவே எனது கருத்தின்படி நடைமுறைகள் தேவை. இதுவே என் வாதம்!!

நன்றி

**இ.ரிஷிதா**
நயினாதீவு 8.

### தேவையற்றதா

மொபெட் ரக (49cc) வாகனங்களுக்குப் புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம், ஹெல்மட் என்பன தேவையற்றன என்ற விவாதத்தை முன் வைக்க நான் விரும்புகின்றேன்.

இந்த வாகனங்களுக்குப் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நடைமுறைகள் தேவை என்று சொல்லுபவர்கள் அதற்கான காரணமாக விபத்துக்கள் அதிகரித்துச் செல்கின்றன. எனவே இந்த ரக மோட்டார் சைக்கிள் பாவனையாளர்களும் வீதி ஒழுங்குகளை தெரிந்து வைத்திருக்க வேண்டுமென்று வியாக்கியானங்கள் கூறுகின்றனர்.

'பல்சர் ரக' அதி கூடிய cc கொண்ட வாகனங்களில் இளைஞர்கள் வேகமாய் முறுக்கிச் செல்லும் போது முணு முணுப்பவர்கள் எத்தனை பேர்? இந்த வாகனங்களைச் செலுத்தி செல்பவர்களைப் பார்த்து அவ்வாறு யாரும் முணுமுணுத்தது உண்டா?

அப்படியிருக்கையில் எவ்வாறு இந்த வாகனங்களுக்குப் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் நடைமுறைகள் தேவைப்படும். இந்த வாகனங்களில் செல்பவர்களால்தான் விபத்து ஏற்படுகின்றதா?

நடைமுறையில் இந்த வாகனத்தின் பெறுமதி குறைவு என்பதனால் அதிகளவானோர் வாங்குகின்றனர்.

எமது நாட்டில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவது இலகுவான காரியமா? சாரதி அனுமதிப்பத்திரம் நேர்மையாகத்தான் வழங்கப்படுகிறதா?

சிந்தியுங்கள். இந்த ரக வாகனங்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் தேவையில்லை.

**பா.பிரதீபன்**
இராச வீதி, கல்வியங்காடு.

## மாணவர்களைப் பொறுத்தவரை சமுதாயத்தின் கரிசனை என்ன?

(சென்றவாரத் தொடர்ச்சி)

மாணவர்கள் பரீட்சைக்காக கற்கின்றபோது இரவு நேரங்களில் மின்துண்டிப்பு செய்கின்றமை சமூக அக்கறை இல்லாத மின்சார சேவையையே எடுத்துக் காட்டியது. தேசிய பரீட்சை ஒன்றை எதிர்நோக்கும் மாணவரின் மனநிலை எவ்வாறிருக்கும் என்பது வெளி எவரிற்கும் தெரியாத ஒன்றல்ல ஏனெனில் பத்திரிகைகளில் மாணவர்களைத் திடப்படுத்தி பல கட்டுரைகளை ஏராளமான பத்திரிகைள் வெளியிட்டிருந்தன. இவை தவிர பொதுவாக அனைவரும் இந்நிலையை புரிந்து வைத்துள்ளனர். இவ்வாறான நிலையில் மறுநாள் பரீட்சையை எண்ணியுள்ள மாணவர்கள் அவ் இரவில் மின்சாரம் இல்லாது இருட்டில் இருக்கும்போது அவர்களின் மனநிலை எவ்வளவு தடுமாறியிருக்கும். ஓரிரு மணிநேரங்கள் கூட மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையில் மாணவர்களின் பரீட்சை எழுதும் திறன் மிகவும் பாதிக்கப்பட்டது. எம்தேசத்தில் இடம்பெற்ற யுத்தத்தினால் இதுவரைகாலமும் மின்வெட்டிற்கு காரணம் கூறிய மின்சாரசபை தற்போதைய மின்வெட்டிற்கு என்பதில் கூறப் போகின்றது என்பது எதிர்பார்ப்பாக உள்ளது.

இவ்வாறான நிலைமைகளில் எம்முடைய சமூகத்தின் கரிசனையை நோக்குவோமாயின் மாணவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அந்த தருணத்தில் மாணவர்கள் சார்பில் எவருமே காணப்படவில்லை என்பதே உண்மையாகும். தேசிய பரீட்சை முடிவுகள் வெளிவந்ததும் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பாடசாலைகளை தரப்படுத்தல், மாணவர்களின் பரீட்சை முடிவுகளை சுய பரிசோதனை செய்தல் பெறுபேறுகளின் எழுச்சி, வீழ்ச்சி பற்றி கலந்துரையாடுதல், கார ணங்களை முன்வைத்தல் எனப் பெருமெடுப்பில் மாணவர்கள் பால் அவர்களின் பார்வை திரும்புகின்றது. ஆனால் பரீட்சை நடைபெறும் காலங்களிலோ சாதாரணமாக கற்றல் காலங்களிலோ மாணவர்களின் செயற்பாடுகள் பற்றியோ மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் பற்றியோ விவாதிப்பதற்கு எவருமே முன்வருவதில்லை. பேருந்துகளிலும், வைத்தியசலைகளிலும் மின்பாவனை தொடர்பாகவும் மாணவர் சார்பில் எவருமே இருப்பதில்லை.





எனவே இந்நிலைமை மாற்றி அமைக்கப்பட்டு மாணவர் மீதான கரிசனை சமூகத்தில் ஒவ்வொருவரிற்கும் இருக்கும்போது எம் மாணவர்களின் பெறுபேறுகள் உயர்வடையும் என எதிர்பார்க்கலாம். மாணவர்களிற்காக முன்வருவோம்.

(முற்றும்)

**தமிழகரன், யாழ்.**

## விவாதமேடை

எதிர்காலம் வளமாக அமைய வெளிநாடு செல்வதே வழி என இன்றைய இளம் சமுதாயத்தினர் எண்ணுகின்றனர். இந்த எண்ணம்

சரியானதா | தவறானதா

'விவாதமேடை' விவாதங்களை அனுப்பிய அனைவருக்கும் நன்றிகளும், பாராட்டுக்களும். தொடர்ந்து விவாத மேடைக்கு உங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். வாக்கு எண்ணிக்கையின் முடிவின்படி எந்த அணி வெற்றி பெற்றது என்பதனையும் சிறந்த ஆக்கமாக தேர்ந்தெடுக்கப்பட்ட விவாதத்தை அனுப்பியவரின் பெயரையும் அடுத்தவார இளவல்கள் வட்டத்தில் எதிர்பாருங்கள்.

## பிரிவின் துயரம்

இன்ப துன்பத்தை பகிர்ந்தோமே!
இரவு பகலாய் திரிந்தோமே!
கல்வியைக் கற்றோம்
கற்றதின் படி ஒழுகினோம்

ஒன்றாகத் திரிந்தோம் ஒற்றுமையாய் இருந்தோம்
தீயவற்றை எதிர்த்து நல்லவற்றை ஏற்றோம்
மகிழ்ச்சி தானே எம் இனிய வாழ்வில்
மனமார்ந்த புன்னகை தானே என்றும்

பறவை இனம் போல பகிர்ந்துண்டோம்
பலர் மனதில் இடம் பிடித்தோம்
ஆசானுக்கு அன்பளித்தோம்
அவர் அன்பினால் அடிமையானோம்

இன்று நீ எங்கோ நான் எங்கோ
உன் பிரிவினால் சோகம் என்ற வார்த்தையிலே
அர்த்தம் புரிந்து கொண்டேன்.
நாம் பழகிய அந்த இனிமையான நாள்கள்
மீண்டும் ஒரு முறை வராதா? .....

**ப.சரணியா**
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

கவிதை எழுதி அனுப்பும் வாசகர்களில் 3 மாதத்திற்கு ஒருமுறை ஒரு சிறந்த கவிதை தேர்வு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

## இளவல்கள் வட்டம் வாக்குச்சீட்டு

எதிர்காலம் வளமாக அமைய வெளிநாடு செல்வதே வழி என இன்றைய இளம் சமுதாயத்தினர் எண்ணுகின்றனர். இந்த எண்ணம்

சரியானதா | தவறானதா

பெயர் :- ..........
முகவரி :- ..........
:- ..........
அடையாள அட்டை இல. ..........

உங்கள் தீர்ப்புகளை 07.10.2010 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இவ் வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :- ..........
முகவரி :- ..........
:- ..........
.......... திகதி .......... கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப் புலவர் சங்க பொன்விழா கலைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செப்.30

சைவப்புலவர் சங்கத்தின் பொன் விழாவையொட்டி மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட கலைப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. இவர்களுக்குரிய பரிசில்கள் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் மண்டபத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி நடைபெறவுள்ள சைவப்புலவர் சங்க பொன் விழாச் சபை சைவ மாநாட்டில் வழங்கப்படவுள்ளன என்று சங்கத்தின் செயலாளர் கந்த சத்திய தாசன் அறிவித்துள்ளார்.

போட்டி முடிவுகளின் விவரம் வருமாறு:

**பேச்சு:** க.பிரகான் (யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை), இ.சாயினி (யா/அச்சுவேலி புனித திரேசா கல்லூரி), அ.உமயமாலினி (யா/நயினை ஸ்ரீ கணேச மகா வித்தி.).

**பஞ்சபுராணம்:** யோ.சிந்துயா (யா/இணுவில் மத்திய கல்லூரி), அ.அகன்யா (யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை), ஜெ.தேவரூபா (யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்).

**கதாப்பிரசங்கம்:** ஸ்ரீ.பிரதீஸ்வரன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), ம.பிரதீபன் (யா/இணுவில் இந்துக் கல்லூரி), க.சயீவ் (யா/வட்டு மத்திய கல்லூரி).

**சைவசித்தாந்த அறிவுப்போட்டி:** செ.சேந்தன் (யா/யாழ்.இந்துக் கல்லூரி), பா. சுஜீபா (யா/இராமநாதன் கல்லூரி), க.மோகன ஜெனனி (யா/இணுவில் இந்துக் கல்லூரி).

**வில்லுப்பாட்டு:** யா/ இணுவில் இந்துக் கல்லூரி, யா/வட்டு மத்திய கல்லூரி -வட்டுக் கோட்டை.

**அபிநயம்:** ந.மாதுஷா (யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை).

**இசை நாடகம்:** செ.சசிகலா, சு. நிஷாந்தினி, வே. கம்சானந்தி, பு.றொசாந்தினி (யா/வட்டு. இந்துக் கல்லூரி).

(9)

## ஆன்மீக நிகழ்வுகள்

வடமராட்சி, செப்.30

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு "ஆன்மீகச் சிந்தனைகள்" எனும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

இச் சொற்பொழிவை கொழும்பு ஹரேகிருஷ்ணா ஆலயத்தைச் சேர்ந்த சு.இராஜேந்திரக் குருக்கள் நிகழ்த்துவார்.

(201-236)

* * *

வடமராட்சி, செப்.30

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெற்றுவரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''மகாபாரதம்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

இச்சொற்பொழிவை சைவப் புலவர் பண்டிதர் பொன்.சுகந்தன் நிகழ்த்துவார்.

(201-236)

---


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி பகீரதி சுந்தரலிங்கம்
அவர்களின் அன்புத் தாய்
**கதிரவேலு மகேஸ்வரி**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய நலன்புரி கழகம்,
யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்.

(103931)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பிரதேச அஞ்சல் அத்தியட்சகர்
திரு.சூ.ஜெபரட்ணம்
அவர்களின் அன்புத்தாயார்
திருமதி
**சூசைப்பிள்ளை அக்கினேஸ்**
அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 07.03.1928 மறைவு 31.08.2010

அஞ்சல் சமூகம்
பிரதம தபாலகம்,
யாழ்ப்பாணம்.

(103933)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**நாகமுத்து சின்னம்மா**

பெற்றவரைப் போல்நின்று
உற்ற நல் துணையாக
உலகைக் காட்டினீரே
துன்பம் வந்துவிட்டால் துடித்து நிற்பீர்
உந்தன் பாசமுகம் காண்பதெப்போ
அப்பம்மா என்று சொல்லும் மொழி
ஐந்து ஆண்டுகள் சென்றதம்மா!

தோற்றம்: 01.07.1920
மறைவு: 30.09.2005

இ.ரவீந்திரன் குடும்பம்
கட்டுடை

(103950)

## Nestle NESPRAY சர்வதேச சிறுவர் தினம் 2010

நெஸ்லே நிறுவனம்

யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியம், வலயக் கல்வி அலுவலகங்கள், மாநகரசபை, உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் சிறிலங்கா காவல்துறை ஆகியவற்றுடன் இணைந்து நடாத்தும் நெஸ்பிறே சிறுவர் உலகம்.

எதிர்வரும் ஒக்டோபர் 2 ஆம் 3 ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில்....

உங்கள் குழந்தையின் அறிவு, மகிழ்வு மற்றும் வினோதம்

★ மெரிகோ ரவுண்ட் ★வினோத விளையாட்டுக்கள் ★ பவுன்சர்
★பலூன் மாடி
★ பால்வீடு ★குழந்தைகள் சினிமா ★ சிறுவர் இசைநிகழ்ச்சி
★ மேலும் விசேட அம்சங்கள் பல
★ விசேட வைத்திய சந்திப்பிற்கு குழந்தையை இலவசமாக பங்குபற்ற வைக்க முடிவதுடன் தொலைக்காட்சி நாடகக் கலைஞர்களுடன் களிப்படையவும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.
★ குழந்தைக்கான சேமிப்புக் கணக்கை வெல்லவும் வாய்ப்பு

**களிப்படையுங்கள்.... பரிசை வெல்லுங்கள்....!**

நெஸ்பிறே என்றிட்ச் 400 கிராம் பைக்கற்றின் மேல் அட்டையை கொண்டு வர மறக்கவேண்டாம்.
காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.
யாழ்.மத்திய கல்லூரிக்கும் சுப்பிரமணியம் பூங்காவிற்கும் இடைப் பட்ட வீதியில் குழந்தைகளின் ஊர்வலம் ஆரம்பமாகி சிறுவர்களின் அலங்கரிப்புடன் துரையப்பா விளையாட்டரங்கை வந்தடையும்.
நெஸ்பிறே சிறுவர் உலகைக் காண வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
வாரீர் சிறுவர் உலகை கண்டு களித்திட....
மகிழ்வீர் உங்கள் பிள்ளைகளின் திறமையைக் கண்டு.

(103785)

## நெஞ்சகலா நினைவில் மூன்றாம் ஆண்டு



அமரர்
**க. இராசரத்தினம்**

மலர்வு 30.11.1954
உதிர்வு 03.10.2007

கனவுகளில் மட்டும் உங்கள் முகம் காட்டி- எம்
விடியாத பொழுதுகளை விடியவைக்கும் அப்பாவே !
நெஞ்சுக்குள் உம் பிரிவும் நீர் சுமந்த வேதனையும்
கனலாய் சுழன்று வந்து எம் மனதில் வேகுதப்பா
நீர் இருந்த பொழுதின் மகிழ்வை நினைக்கையிலே
வீழ்ந்த பொழுது வந்து கண் கலங்க வைக்கிறதே.
அன்பு உள்ளங்களுடன் உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை வேண்டுகிறோம்.

பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

தாவளை இயற்றாலை,
கொடிகாமம்.

(103594)

## பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

## பதவி வெற்றிடங்கள்

எமது சங்கத்திலுள்ள பின்வரும் பதவி வெற்றிடங்களுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் தமது முழுப்பெயர், தபால்முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமை அனுபவம் ஆகிய விவரங்களை உள்ளடங்கலாக விண்ணப்பத்தினை சுயமாகத் தயாரித்து எதிர்வரும் 14.10.2010 இற்கு முன்னதாக தலைவர், பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், (வ.து) கிராமக்கோட்டடி, புலோலி, பருத்தித்துறை எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

01. பதவி: களஞ்சிய முகாமையாளர் 208/15
சம்பளத்திட்டம்: 9450-75x10-80x10-11000/-
தகைமைகள்:
அ. கூட்டுறவுப்பணியாளர் 16ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 17ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
அல்லது
ஆ. கூட்டுறவுப் பணியாளர் (சா/த) க.பொ.த. (சா/த)த்தில் இரண்டு அமர்வுக்கு மேற் படாமல் எண்கணிதம் / வர்த்தக கணிதம் / தூய கணிதம், தமிழ் /சிங்கள மொழியினை உள்ளடக்கியதாக 06 பாடங்களிலான சித்தியும் சம்பந்தப்பட்ட துறையிலான 1 வருட அனுபவமும்.

02. பதவி: விற்பனை உதவியாளர் 308/17
சம்பளத்திட்டம்: 8950-65x10-70x10-10300/-
தகைமைகள்:
அ.கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திர சான்றிதழ்
அல்லது
ஆ. 8ஆம் வகுப்புச் சித்தியுடன் விற்பனை அலுவல்கள் பற்றிய துறையில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

03. பதவி: அலுவலக உதவியாளர் 317/16
சம்பளத்திட்டம்: 9200-70x10-75x10-10650/-
தகைமைகள்:
அ. கூட்டுறவுப்பணியாளர் 17ஆவது சம்பளத்திட்டத்தில் ஓர் ஆண்டுக்குக் குறையாத அனுபவத்துடன் குறைந்தது 5ஆம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
அல்லது
ஆ.8ஆம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேற்குறித்த பதவிகளுக்கான வயது எல்லை 21-45 இற்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

01. கூட்டுறவு நிறுவனங்களில் பணி புரிவோருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப் படமாட்டாது என்பதுடன் சங்கங்களில் பணி புரிவோர் சங்கங்களின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.
02. சங்கத்தின் எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
03. தெரிவு செய்யப்படுபவர் சங்கத்தினால் விதிக்கப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.

பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

கிராமக்கோட்டடி,
புலோலி, பருத்தித்துறை.


தலைவர்.

(சி/571420)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## விநாசித்தம்பி ஜெயராஜா



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி ஜெயராஜா 29.09.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி - லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஜோசப் - செல்லம்மா (அப்புகாமி செல்லம்மா) தம்பதியரின் அன்பு மருமகனும் கிறிஸ்ரினாவின் அன்புக் கணவரும் ஜெனாட்றேகன் (ஜேர்மனி), ஜெனாட்ராஜ் (மாணவன், 2ஆம் வருடம் விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), ஜெனாட்சன் (றொலக்ஸ் ஹொட்டேல்), கிறிஸ்ரிஜீனத் (O/L மாணவி, யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மலர், சிவயோகம் (ஜேர்மனி), விக்னேஸ் (ஜேர்மனி), புஸ்பராணி (ஜேர்மனி), சிவராசா (கனடா), நவமணி, நாகேஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் யோகராசாவின் (ஜெயம் லொறி உரிமையாளர்) மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி நிகழ்வுகளுக்காக அவரின் இல்லத்திலிருந்து (30.09.2010) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் யாழ்.மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
தொ.பே.இல. 021 222 1006

*422, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(103964)

## விபத்தில் மூவர் காயம்

தென்மராட்சி,செப்.30

பளை, புலோப்பளை மேற்கில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் மூவர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த நவீனன் (வயது 20) பாலகிருஷ்ணன் (வயது 17) தர்சன் (வயது 17) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் பளை வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர். (எ-207)

## மாடுகள் மர்மச்சாவு

தென்மராட்சி,செப்.30

மறவன்புலோ திருவிக்கிராய் குளத்தில் இரு மாடுகள் மர்மமான முறையில் இறந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கட்டாக்காலி மாடுகள் இக் குளத்தில் தண்ணீர் குடிக்க வருவது வழக்கம். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வேலைக்குச் சென்றவர்கள் குளத்தில் மாடுகள் இறந்து கிடப்பதைக் கண்டு உரிய அதிகாரிகளுக்கு இது குறித்து அறிவித்துள்ளனர். (எ-207)

## குழியினுள் அகப்பட்ட குடும்பஸ்தர் மீட்பு

தென்மராட்சி, செப்.30

எரிபொருள் தாங்கியைப் புதைப்பதற்காக வெட்டிய குழியினுள் மண் இடிந்து வீழ்ந்ததில் குடும்பஸ்தர் அதனுள் மூடப்பட்டார்.

இச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை பளைப் பகுதியில் இடம்பெற்றது. புலோப்பளை மேற்கைச் சேர்ந்த க.ஈசன் (வயது 48) என்பவரே இவ்வாறு மண்ணால் மூடப்பட்டார். பொது மக்களால் காப்பாற்றப்பட்டு பளைப் பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். (எ-207)

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆருயிர் நண்பன்
J.ஜெனாட்ராஜ் அவர்களின் பாசமிகு தந்தை
**அமரர் விநாசித்தம்பி ஜெயராஜா**
அவர்களின் மறைவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்ப்
பூக்களைக் காணிக்கையாக்குவதுடன்
அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை
வேண்டி நிற்கின்றோம்

*2ஆம் வருடம் (20ஆம் அணி மாணவர்கள்)*
*விவசாய பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.*

(103965)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கலைத் தென்றல்
**கந்தன் நல்லையா**
(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரும், இலங்கை சினிமா திரைப்பட நடிகரும் தாசன் எஞ்சினியறிங் சேவிஸ் அன்கோ உரிமையாளரும்.)

பிறப்பு:
21.05.1940

இறப்பு:
03.10.2007

திதி: ஸப்தமி

நிலையற்ற இவ் உலகில் ஐயா!
நிலையாத செல்வம் நீங்கள்
ஊர் போற்ற உத்தம சீலராய்
வாழ்ந்த எம் குலவிளக்கே
பண்பின் இருப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
கலைக்கோர் கலைமகனாய் இருந்து
கல்வி முதற் கொண்டு பல கலையும்
கற்பித்துத்தந்த எம் ஐயாவே!
மூன்றாண்டு சென்றும் உன் நினைவில் தவிக்கின்றோம்..

என்றும் நினைவுடன்
**திருமதி நல்லையா**

மத்தொனி, கரவெட்டி தெற்கு, கரவெட்டி. (101775)

# 45ஆம் நாள் நினைவலைகள்



**தோற்றம்: 07.07.1932**
**மறைவு: 15.08.2010**

## அமரர் சிவஞானசுந்தரம் தங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர், யா/அருணோதயக் கல்லூரி)

ஆலமரமாய் எம் குடும்பத்தை தாங்கி வழி நடத்தினீர்
அன்பினால் எம்மை அரவணைத்தீர் அம்மா...!
எங்கு நீர் சென்றாலும் உம் நினைவுகள் நீங்காது - நிதம்
எம்மை வாட்ட உம் ஆத்ம சாந்திக்காய்
பிரார்த்திக்கின்றோம்

ஸ்கூல் லேன்,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

தகவல்:
மகன்மார்: ஆதித்தன், ஆரூரன்,
மகள்: அனுஜா,
மருமகன்: சத்தியகுமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தகவல் தொழில்நுட்பக் கல்வியகம் விரைவில் யாழ்ப்பாணத்தில் கிளை திறப்பு



இலங்கையில் தகவல் தொழில் நுட்பக் கற்கைகளை வழங்கு வதில் முன்னணியில் திகழும் இலங்கை தகவல் தொழில் நுட் பக் கல்வியகம், தனது புதிய கிளையை யாழ்ப்பாணத்தில் நிறு வுகிறது. பங்களாதேஷ் நாட்டிலும் கிளை ஒன்றை நிறுவத் திட்ட மிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நிறுவப் படவுள்ள கிளை நகரின் மத்தியில் கேந்திர நிலையத்தில் அமைய வுள்ளது.

இங்கு கற்கைகளை முன்னெ டுப்பதற்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திறமை வாய்ந்த பேராசி ரியர்கள் தெரிவுசெய்யப்படவுள் ளனர். அத்துடன் மாணவர்களுக்கு தமது உயர்கல்வியைப் பூர்த்தி செய்வதற்கு இலங்கை தகவல் தொழில்நுட்பக் கல்வியகத்தின் வெளிநாட்டுக் கிளை அல்லது ஏனைய முன்னணி பல்கலைக் கழகங்களை தெரிவுசெய்வதற் கான சந்தர்ப்பமும் வழங்கப்படு கிறது.

தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்குச் சிறந்த தக வல் தொழில்நுட்பக் கல்வியை வழங்கும் நோக்கில் இலங்கை தகவல் தொழில்நுட்பக் கல்விய கம் சர்வதேச ரீதியில் தமது கிளைகளை விஸ்தரிக்கும் நட வடிக்கைகளை மேற்கொண் டுள்ளது.

இலங்கை தகவல் தொழில் நுட்பக் கல்வியகத்தின் தலை வர் பேராசிரியர் கருணாரத்ன கருத்துத் தெரிவிக்கையில், வெகு விரைவில் வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலங் கையில் தமது கல்வியைத் தொடர் வதற்கான வாய்ப்புகளை ஏற் படுத்திக் கொடுக்கவுள்ளோம். இதன் மூலம் எமது நாட்டுக்கு வெளிநாடுகளுடன் சிறந்த உறவை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்றார்.

இலங்கை தகவல் தொழில் நுட்பக் கல்வி யகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி பேராசி ரியர் லலித் கமகே கருத்து தெரி விக்கையில், ''பங்களாதேஷ் விஸ்தரிப்பு மிகவும் முக்கிய மானதாகும். இந்நாட்டில் தகவல் தொழில்நுட்பக் கற்கைகள் மற் றும் வியாபாரக் கற்கைக ளுக் குச் சிறந்த வரவேற்பு காணப் படுகிறது. தெற்காசியாவிலுள்ள முதற்றர 10 பல்கலைக்கழகங் களில் ஒன்றாகத் திகழ்வதே எமது நோக்கம்'' என்றார்.

# முன்னணிக் காப்புறுதி நிறுவனமாக ஏசியன்ஸ் அலையன்ஸ் இன்சூரன்ஸ்

## யாழ்.பிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.30

30வருட யுத்தத்தின் பின்னர் யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப் பட்ட முதலாவது காப்புறுதி நிறு வனமான நாம் இன்று ஆயிரக் கணக்கான வாடிக்கையாளர்களை சம்பாதித்து முதலிடத்தில் இருக் கிறோம்.

இவ்வாறு ஏசியன் அலை யன்ஸ் இன்சூரன்ஸின் முதலா வது ஆண்டு நிறைவு விழாவில் அதன் யாழ்.பிராந்திய விநியோக முகாமையாளர் வி.வி.எஸ்.சர்மா தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரை யாற்றுகையில் எமது நிறுவனத் தின் காப்புறுதித் திட்டமானது மக்களை கவர்கின்ற வகையில் உள்ளன.

எமது காப்புறுதித் திட்டங் களை நாங்கள் அறிமுகப்படுத்து கின்ற போது ஏனைய நிறுவனங் களிலிருந்து வேறுபட்ட புதிய திட்டங்களையே அறிமுகப் படுத்துகின்றோம்.

இதனாலேயே எமது நிறுவ னத்தில் பெருமளவான மக்கள் நம்பிக்கை வைத்து இணைகின்றனர் வாடிக்கையாளர்களினால் தான் இன்று எமது முதலாவது ஆண்டை வெற்றிகரமாகக் கொண்டாடு கின்றோம்.

எமது சேவைகளை மாவட்டத் தில் பரந்துபட்ட அளவில் விஸ் தரித்து பணியாற்ற இருக்கின்றோம்.

நாங்கள் காப்புறுதிச் சேவை யில் தொழில் நிபுணர்களை உரு வாக்கிக் கொள்வதற்கான சந்தர்ப் பங்களையும் வழங்கி வருகின் றோம். எமது குறித்த இலக்கினை ஒன்பது மாதகாலப் பகுதிகளி லேயே அடைந்துள்ளோம் - என் றார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராகக் கலந்துகொண்ட நிறு வனத்தின் பிரதிப்பொதுமுகா மையாளர் லீலாரட்ண பியசேன உரையாற்றுகையில்:-

எமது நிறுவனமானது இலங் கையின் காப்புறுதித் துறையில் நான்காவது நிறுவனமாகத் திகழ் கின்றது.

யாழ்ப்பாணக் கிளை வாடிக் கையாளர்களை தக்கவைப்பதில் முதலிடத்தில் உள்ளது என்பதும் பெருமைக்குரிய விடயம் என் றார். (த-204-15)





ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸின் முதலாவது ஆண்டு நிறைவு நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டபோது எடுக்கப் பட்ட படங்கள் இவை.

நிறுவனத்தின் பிரதிப் பொதுமுகாமையாளர் லீலாரட்ண பியசேன, யாழ்.பிராந்திய விநியோக முகாமையாளர் வி.வி.எஸ்.சர்மா ஆகியோர் இணைந்து 'கேக்' வெட்டுவதை முதலாவது படத்திலும்,நிறுவன ஊழியர்கள் இரத்த தானம் செய்வதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்:டிலீப்)


மிகப் பாரிய சர்வதேச நிதியின் சக்தி

நிலையான வைப்புகளுக்கு வருடத்திற்கு +11.00% (வ.மொ.வ.வீ.)

அதிகூடிய வட்டி

12 மாதங்கள் நிறைவான வட்டி (வ.மொ.வ.வீ. 11.00%)

ஒரிக்ஸ் குழும நிறுவனமானது உலகிலுள்ள பாரிய குத்தகைக் கம்பனியும் ஜப்பானின் இரண்டாவது பாரிய நிதிச் சேவை வழங்குனருமான ஜப்பான் ஒரிக்ஸ் கோர்ப்பரேஷனின் பக்கபலத்துடனேயே இயங்குகின்றது. அதுவே எங்கள் பலமும் சக்தியும் ஆகும்.

லங்கா ஒரிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடட்

LOLC குழும நிறுவனம்

100/1, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை, ராஜகிரிய.

LOLC

அழையுங்கள்

077 3815602


# தேநீர் அருந்துவதற்கு பொகவந்தலாவை உலகின் சிறந்த 10 இடங்களில் ஒன்றாகத் தெரிவு

தேநீர் அருந்துவதற்கு உலகின் சிறந்த 10 இடங்களில் ஒன் றாக பொகவந்தலாவை தெரிவு செய்யப்பட்டுள் ளது.

அவுஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் பழமைவாய்ந்த பத் திரிகையான சிட்னி மோர் னிங் ஹெரல்ட் மேற்கொண்டிருந்த ஆய் வொன்றின் மூலமே பொகவந்தலாவை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பொகவந்தலாவையுடன் றிஸ்ட் லண்டன், ட்ரான்ஸ்- சியேரியன் ரெயில்வே ரஷ்யா, யுயெங் சீனா, ஜப்பானின் டெம்பிள் ஸ்டிறிவ்யுள் ஊஜி மாவட்டம் மற்றும் பெரு நாட்டைச் சேர்ந்த வரலாற் றுப் புகழ்வாய்ந்த இன்கா டிரெய்ல் போன்றனவும் தெரி வில் அடங்குகின்றன.

இலங்கையின் பொகவந்தலாவையில் தேயிலை உற்பத்தி 1860 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகிறது. தேயிலை விசேடமான ரகங்களிலும் வாசனையிலும் மிகவும் தூய் மையான முறையில் தயாரிக்கப்பட்டு வருகின்றது. தேயிலை இலைகள் மிகவும் நுட்பமாகப் பறிக்கப்பட்டு கவனமாகப் பதப்படுத்தப்பட்டு உயர் த்ரங்களுக்கமை யத் தயாரிக்கப்பட்டு அதன் பின்னரே அவை தேயிலை யாக ஒருவருடைய கோப்பையை அடைகின்றன.

இலங்கையிலுள்ள 450 தேயிலை ஏற்றுமதியாளர்களில் 3 ஏற்றுமதியாளர்களுக்கே சொந்தமான தேயிலைத் தோட்டங் கள் உள்ளன. பொகவந்தலாவை அவற்றில் ஒன்று. இங்கே செலவினம் கட்டுப்படுத் தப்பட்டுள்ளதுடன் சர்வ தேச தரத்துக்கு அமைவானதா கத் தேயிலை தயாரிக்கப்படுகின் றது.



பொகவந்தலாவைத் தேயிலை எஸ் டேட் கம்பனி இரண்டு வகையான வர்த்தக நாமங்களைக் கொண்டுள்ளது. சிலோன் டீ கார்ட்ன்ஸ் மற்றும் பொகவந்த லாவை டீஸ் என்பனவே அவையாகும்.

இந்த ரகங்களில் பிளாக் டீ, கிறீன் டீ, ஹேர்பல் டீ, ஓர்கானிக் டீ, ஃபிளேவர்ட் டீ மற்றும் ஐஸ்ட் டீ போன் றன ஏற்றுமதித்தரங்களுக்கமைய தயாரிக்கப்படுகின்றன. பிரித்தானியா, ரஷ்யா, ஜப்பான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய் யப்படுவதுடன், அமெரிக்கா, லித்துவேனியா, ஒல்லாந்து [illegible] தேயிலை தனது நாமத்தை பதித்து வருகிறது. பல சர்வதேச விருதுகளையும் வென்றுள்ளது.

# சூரிய சக்தியில் இயங்கக் கூடிய ஆளில்லா உளவு விமானம் அமெரிக்காவில் உற்பத்தி



உளவு பார்ப்பதற்காகச் சூரிய சக்தியில் இயங்கக்கூடிய ஆளில்லா விமானத்தை அமெ ரிக்கா தயா ரித்து வருகிறது.

அது 'போயிங்' ரக விமா னத்தை போன்று வடிவமைக்கப் பட்டுள்ளது. ரூ. 440 கோடி செல வில் இந்த விமானம் தயார் செய் யப்படுகிறது.

சூரிய சக்தி மூலம் தானாக இயங்கக் கூடிய இந்த ஆளில்லா விமானத்துக்கு ''சோலார் ஈகிள்'' (சூரிய கழுகு) எனப் பெயரிடப் பட்டுள்ளது. பகல் நேரத்தில் இது சூரிய ஒளியை உறிஞ்சி சேமித்து வைத்துக் கொள்ளும்.

அதனால் இரவு நேரத்தி லும் கூட இந்த உளவு விமா னம் தொடர்ந்து பறக்கும். இந்த விமா னத்தில் பொருத்தப்பட் டுள்ள அதி நவீன கருவிகள் புகைப் படங்களை எடுத்து அதன் மூலம் தகவல்களை அமெரிக்க இரா ணுவத்துக்கு அனுப்பும்.

விமானத்தில் சக்தி வாய்ந்த எலெக்ட்ரிக் மோட்டார்கள் மற் றும் 'புரோபல்லர்கள்' (உந்து விசை கருவிகள்) பொருத்தப்பட உள்ளன. அடுத்த ஆண்டு (2011) இது பயன்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் 5ஆவது தேசியப் பாடசாலையாக தரமுயர்ந்துள்ள திருக்குடும்பக் கன்னியர் மடம்

யாழ். நகரின் மத்தியில் அமைந்துள்ள உயர்தரப் பாடசாலைகளுள் ஒன்றான திருக்குடும்பக் கன்னியர் மடம் இன்று யாழ். மாவட்டத்தில் ஐந்தாவது தேசியப்பாடசாலையாகத் தரமுயர்ந்துள்ளது. இப்பாடசாலை வடக்கில் பெண்களுக்கு ஆங்கிலக் கல்வி அளிப்பதற்கென கத்தோலிக்க திருச்சபையால் நிறுவப்பட்ட முதற் பாடசாலையாகும்.

19ஆம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியில் வடக்கில் சில ஆங்கிலப் பாடசாலைகள் புரட்டஸ்தாந்து சபைகளினால் நிறுவப்பட்டிருந்தன. ஆனால் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் பெருந்தொகையாக வாழ்ந்த நகரப்பகுதியில் கத்தோலிக்க பிள்ளைகளுக்கு ஆங்கிலக் கல்வியளிக்க பாடசாலைகளை அமைக்க வேண்டிய தேவை இருந்தது. இந்த அவசியத்தை உணர்ந்த அப்போதைய ஆயர் பெற்றக்கினியால் 1845 இல் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் திருமதி விளனகன்(Flannagan)என்னும் ஜரிஷ்பெண்மணியே இப்பாடசாலையை நடத்தி வந்தார்.

பின்னர் பாடசாலையை நிர்வகிப்பதற்காக ஆயர் பிரான்ஸ் நாட்டிலிருந்து துறவறக் கன்னியரை வரவழைத்தார். இவர்கள்தான் இலங்கையில் முதன்முதல் கால் பதித்த துறவறக் கன்னியராவர். இவர்கள் திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவர்கள். 1862இல் பாடசாலையை இவர்கள் பொறுப்பேற்ற போது அங்கு 100 தமிழ் மாணவிகளும் 8 ஐரோப்பிய மாணவிகளும் இருந்தனர். பிரதான வீதியில் பாடசாலை இயங்கிவந்த கட்டடத்தில் இட வசதியின்மை காரணமாக வேறோர் இடம் தேட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போது பிரதான வீதியிலுள்ள 'புளியடிவளவு' என்னும் விஸ்தாரமான காணி அவர்களுக்குக் கிடைத்தது. அதில் கன்னியர் வசிப்பதற்கான மடம், சிற்றாலயம், வகுப்பறைகள் ஆகியன கட்டி முடிக்கப்பட்டு 1867ஆம் ஆண்டில் பாடசாலை புதிய இடத்திற்கு மாற்றப்பட்டது. கன்னியர் பொறுப் பேற்றபின் இப்பாடசாலையின் முதல் அதிபராக இருந்த வர் ஹெலன் தாயார் அவரைத் தொடர்ந்து பல ஐரோப்பிய கன்னியர்கள் அதிபர்களாகப் பணியாற்றினர். கடைசியாகக் கடமையாற்றிய யோசவீன் தாயார் 1970இல் தாய்நாடு திரும்பிய பின்னர் தமிழ் அதிபர்கள் பொறுப்பில் பாடசாலை இயங்கலாயிற்று.


பாடசாலையின் தோற்றம்

1960இல் அரசாங்கம் தனியார் பாடசாலைகளை சுவீகரித்த போது இப்பாடசாலையை கட்டணம் வசூலிக்காத தனியார் பாடசாலையாக நடத்திவர அப்போதைய ஆயர் பேரருட் திரு எமிலியானுஸ் பிள்ளை தீர்மானித்தார். ஆனால் அவரது மரணத்தின் பின்னர் நிதி நெருக்கடி காரணமாக 1976இல் பாடசாலையை அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

1995இலும் 2000 திலும் ஏற்பட்ட இடப்பெயர்வின் போது முறையே மிருசுவில், மானிப்பாய் ஆகிய இடங்களில் மாணவரை ஒன்று சேர்த்து வகுப்புக்கள் நடத்தப்பட்டன.

2002 இல் திருக்குடும்ப கன்னியர் மடத்துடன் அதை அடுத்துள்ள கன்னியர்மட மகாவித்தியாலயம் இணைக்கப்பட்டது.

பாடசாலையின் தரத்திற்கு பாடசாலைப் பெறுபேறுகள் சான்று பகர்கின்றன. கடந்த 2008, 2009 சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில மொழிமூலம் பரீட்சை எழுதிய மாணவியர் நூறுவீத சித்தி பெற்றுள்ளனர். கலை, நுண்கலை, கணிதம், விஞ்ஞானம்,வர்த்தகம் ஆகிய துறைகளில் வருடாந்தம் மாணவர் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர். 8ஆம் வகுப்புக்கு மேற்பட்ட சகல மாணவருக்கும் கணனி அறிவு புகட்டப்படுகிறது.

பல துறைகளிலும் மாணவர் தமது திறமைகளைக் காட்டி வருகின்றனர். ஆங்கில நாடகம், நாட்டுக் கூத்து,சிறுகதை நாடக ஆக்கம் போன்ற போட்டிகளில் மாவட்ட, மாகாண மட்டங்களில் வெற்றி பெற்று அகில இலங்கைப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

100 பிள்ளைகளுடன் ஆரம்பித்த இப் பாடசாலை இப்போது 1652 மாணவரையும் 75 நிரந்தர ஆசிரியர்களையும் கொண்டு முன்னணிப் பாடசாலையாக விளங்குகின்றது. அதிபர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப் பினர்கள் போன்ற பலரது பெரு முயற்சியாலும், யாழ். ஆயர் பேரருட் திரு தோமாஸ் சவுந்தர நாயகம் அவர்களது வேண்டு கோளினா லும் கடந்த ஆகஸ்ட் 5ஆம் திகதி முதல் இது தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தப் பட்டுள்ளது.

ஆயினும் இப்பாடசாலைக்கு இன்னும் பல தேவைகள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. பாடசாலையின் மிகப்பெருங் குறைபாடு இட நெருக்கடியாகும். சுற்றிவர குடியிருப்புக்களின் நடுவே அமைந்திருப்பதால் பாடசாலை வளாகத்தை விரிவாக்கிக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் இல்லை. பாடசாலையில் வைபவங்களை நடத்துவதற்கென தனியான ஒரு மண்டபம் இல்லை. இவை பெரும் குறைபாடாகக் காணப்படுகின்றது. பாடசாலை அபிவிருத்திச்சங்கமும், பழைய மாணவர் சங்கமும் வெளிநாடுகளிலுள்ள அதன் கிளைகளும் பாடசாலையின் பௌதீக வளங்களை விருத்தி செய்ய தம்மாலான பங்களிப்பைச் செய்து வருகின்றன.

போரின் பிடியில் முகமிழந்து போகாமல் பாரம்பரியத்தையும் ஒழுக்கம், கல்விப் பெறுபேறு என்பவற்றைக் கட்டிக்காத்து இன்று வரை நிலை குலையாமல் காத்து நிற்கின்றது. பண்பாடு, விழுமியங்கள் நோக்குகள் மாறுகின்ற இவ்வேளையில் திருக்குடும்பத்தின் நிழலில் கறைபடியாமல் எதிர் கால சந்ததியை மீட்டு முன்னேற்றும் அரிய செயற்பாட்டில் தற்போதைய அதிபர் கருத்தாய் செயற்பட்டு நிற்கின்றார்.

இடப்பெயர்வுகள், இயற்கையின் புயற் தாக்கங்கள் போன்ற வேளைகளில் அகதிகளின் புகலிடமாக விளங்கிய பாடசாலையின் பௌதீக வளங்களையும் ஆவணங்களையும் பாதுகாத்துப் பேணி மாணவர்களின் கற்றற் செயற்பாடுகளில் தடைகள் ஏற்படாமல் பாடசாலையை உயிர்ப்புடன் இயங்க வைத்தலுக்கான அர்ப்பணிப்பான சேவையை அருட் சகோதரிகள் வழங்கியமை யால் திருக்குடும்பம் காப்பாற்றப்பட்டு இன்று தேசிய பாடசாலையாகத் தரமுயர்ந்து நிற்கின்றது. ***

**வயலற் இம்மனுவேல்,**
உப தலைவி, பழைய மாணவர் சங்கம்




*Management Development and Training Institute (MDTI)*

## Application for Diploma in English for Public Servants – 2010

MDTI proposes to conduct Diploma in English for Public Servants - 2010 with the collaboration of University of Jaffna.

Applications from Interested Officers working in departments attached to Northern Provincial Council, Central Government, Boards and Corporation & Non-Government Organizations are invited for this course to be conducted at the premises of University of Jaffna after office hours and during weekends.

| | |
|---|---|
| Age limit | : Below 45 years on the date of closing of applications. |
| Qualification | :- GCE Advance Level in 03 subjects with credit pass in English at GCE OL |
| Experience | :- 03 Years working experience in a recognized institution |
| Duration | :- 15 Months |
| Course Fee | :- Rs 35,000/= |

***Selection for Courses depends on a written examination and an interview***

**Closing date for applications is 14 Oct 2010**

Duly completed applications should reach the Director, Management Development and Training Institute, Northern Provincial Council, Kanniya Road, Varothayanagar, Trincomalee on or before the closing date.

For further details and Specimen Application Form, please

Visit : website: www.np.gov.lk

OR

Contact : Regional Commissioner,
48, Forest Office Lane, Chundikuli, Jaffna.
T.P No: 0212222643

OR

Contact : Coordinator,
Human Resource Development Unit,
University of Jaffna. T.P No: 0213207377

OR

Contact : Director, MDTI Northern Provincial Council,
Kanniya Road,
Varothayanagar,Trincomalee T.P No: 0263265880

*S.Krishnanandhan*
Director

27.09.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயோத்திப் பிரச்சினை வழக்கில் இன்று தீர்ப்பு

# அமைதி காக்குமாறு மன்மோகன் கோரிக்கை

புதுடில்லி, செப்.30

ராமஜென்ம பூமியில் சர்ச்சைக்குரிய நிலம் யாருக்குச் சொந்தம் என்ற வழக்கில் அலகாபாத் உயர் நீதிமன்றம் இன்று வியாழக்கிழமை தீர்ப்பு வழங்குகிறது. இதனால் இந்தியா முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. 32 இடங்கள் பதற்றமானவை எனக் கண்டறியப்பட்டுள்ளன. இதில் உத்தரப் பிரதேசத்தில் 4 இடங்கள் மிகப் பதற்றமானவை என்று அறியப்பட்டு அங்கு மத்திய படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தீர்ப்பு எப்படி இருந்தாலும் மக்கள் ஒவ்வொருவரும் அமைதியையும், நல்லிணக்கத்தையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங் கோரிக்கை விடுத்துள்ளார்.



கலகமடக்கும் பொலிஸார் காவல் கடமையில் ஈடுபட்டிருக்கின்றனர்

அயோத்தித் தீர்ப்பை ஒத்திவைக்க வேண்டும் என்ற மனுவை உச்சநீதிமன்றம் செவ்வாய்க்கிழமை தள்ளுபடி செய்தது. இதன் மூலம் அயோத்தி வழக்கில் தீர்ப்பு வழங்க பச்சைக் கொடி காட்டப்பட்டுள்ளது.

அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் லக்னெ கிளை நீதிபதிகள் எஸ்.யு.கான், சுதிர் அகர்வால், டி.வி. சர்மா ஆகியோரைக் கொண்ட குழு, வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தீர்ப்பளிக்கிறது. இந்தத் தகவலை அயோத்தி வழக்குக்கான சிறப்பு அதிகாரி ஹரிசங்கர் கூறினார்.

உத்தரப் பிரதேசம் அயோத்தில் ராம ஜென்மபூமி- பாபர் மசூதி நிலம் யாருக்குச் சொந்தம் என்பது தொடர்பான வழக்கை அலகாபாத் உயர் நீதிமன்றம் லக்னெ கிளையின் சிறப்புக் குழு விசாரித்தது.

வழக்கு விசாரணை நிறைவு பெற்று செப்ரெம்பர் 24 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படும் என்று அலகாபாத் உயர் நீதிமன்றம் அறிவித்தது.

''இந்தத் தீர்ப்பு வெளியானால் மத நல்லிணக்கத்துக்கு ஊறு விளையும் வாய்ப்புள்ளது. இதில் பேச்சு மூலம் தீர்வு காண வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். எனவே, தீர்ப்பை ஒத்திவையுங்கள்'' என்று கோரி ஓய்வுபெற்ற அரச அதிகாரி ரமேஷ் சந்திர திரிபாடி மனுத் தாக்கல் செய்தார்.

இந்த மனுவை அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் கொண்ட குழு தள்ளுபடி செய்தது. அதோடு இறுதிக் கட்டத்தில் இப்படியொரு மனுவைத் தாக்கல் செய்ததற்காக திரிபாடிக்கு 50 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டது.

இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார் திரிபாடி. இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் அயோத்தித் தீர்ப்பை ஒரு வாரம் ஒத்திவைக்க உத்தரவிட்டது. மேலும் இந்த மனு மீது செப்ரெம்பர் 28 ஆம் திகதி விசாரணை நடைபெறும் என்றும் அறிவித்தது.

இதைத் தொடர்ந்து தீர்ப்பை ஒத்திவைக்கக் கோரும் மனுவை விசாரிக்க உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.எச்.கபாடியா, நீதிபதிகள் அப்தாப் ஆலம், கே.எஸ். ராதாகிருஷ்ணன் ஆகியோரை கொண்ட குழு இந்த குழு செவ்வாய்க்கிழமை விசாரித்தது.

2 மணி நேரம் விவாதம் நடைபெற்றது. இறுதியில் திரிபாடியின் மனுவைத் தள்ளுபடி செய்ய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழு ஒருமனதாக முடிவு செய்தது. இதை தலைமை நீதிபதி கபாடியா தெரிவித்தார்.

என்ன காரணத்தின் அடிப்படையில் இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்பதை நீதிபதிகள் தெரிவிக்கவில்லை. ஆனால் வாதத்தின்போது, ''இத்தனை நாள்கள் சும்மா இருந்துவிட்டு காலம்கழித்து விழித்திருக்கிறீர்கள். இந்த வழக்கில் வாதி,பிரதிவாதி என எல்லோருமே ஒரு விடயத்தில் ஒற்றுமையாக உள்ளனர். அது தாமதமின்றி தீர்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதுதான்'' என்று நீதிபதி அப்தாப் ஆலம் கூறினார்.

திரிபாடி மனுவைத் தள்ளுபடி செய்து தீர்ப்பு வெளியிட விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடையையும் உச்ச நீதிமன்றம் நீக்கியதை இந்த வழக்கில் தொடர்புடையவாதி, பிரதிவாதிகள் வரவேற்றுள்ளனர். இதுபோல், காங்கிரஸ், பா.ஜ.க., இடதுசாரி கட்சிகள் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை வரவேற்றுள்ளன.

தீர்ப்பு மேலும் தாமதப்படக் கூடாது என பெரும்பாலானோர் விரும்பியதால் உச்ச நீதிமன்றம் எடுத்துள்ள முடிவு சரியானதே என்று மத்திய சட்ட அமைச்சர் வீரப்ப மொய்லி கூறினார்.

ராமஜென்ம பூமி யாருக்குச் சொந்தம் என்ற இந்த வழக்கு 60 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வருகிறது.

தீர்ப்பு யாருக்குச் சாதகமாக இருந்தாலும் மற்ற தரப்பினர் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய முடியும். (ர)



ஜலந்தரில் நடந்த 14வது கருத்தரங்கில், பகத்சிங்கின் 103வது பிறந்த நாளை கொண்டாடும் வகையில் அங்குள்ள அகில இந்திய இளைஞர் பேரவையினர் விழாவில் கலந்து கொண்டனர்

## சொத்துக் கணக்கை வெளியிட்டார் அமைச்சர் மல்லாடி கிருஷ்ணாராவ்

புதுச்சேரி.செப்.30

சுற்றுலாத் துறை அமைச்சர் மல்லாடி கிருஷ்ணாராவ் தனது சொத்துக் கணக்கை நேற்று வெளியிட்டார்.புதுச்சேரி முதல்வர் வைத்திலிங்கம் தனது சொத்துக் கணக்கை கடந்த இரண்டு ஆண்டுகளாக வெளியிட்டு வருகிறார். இதை தொடர்ந்து, அமைச்சர் மல்லாடி கிருஷ்ணாராவும் தனது சொத்துக் கணக்கை நேற்று வெளியிட்டார்.சொத்து விவரம் வருமாறு: மல்லாடி கிருஷ்ணாராவின் பெயரில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு எல்.ஐ.சி., பாலிசியும், 85 ஆயிரம் ரூபாய்க்கு தேசிய சேமிப்பு பத்திரங்களும் உள்ளன. ஏனாமில் 30 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சொந்த வீடும், இரண்டு ஸ்கூட்டர்களும் உள்ளன. 1,340 கிராம் தங்க நகைகள், தங்க மெடல்கள் வைத்துள்ளார்.

20 கிலோ அளவுக்கு வெள்ளிப் பொருள்கள் உள்ளன. இவரது பாங்க் கணக்கில், புதுச்சேரியில் உள்ள ஸ்டேட் பாங்கில் 2,822 ரூபாய், ஏனாமில் உள்ள ஸ்டேட் பாங்கில் 15 ஆயிரத்து 118 ரூபாய் உள்ளது. அமைச்சரின் மனைவி மல்லாடி உதயலட்சுமி பெயரில் 50 ஆயிரம் ரூபாய்க்கு எல்.ஐ.சி., பாலிசி, 165 கிராம் தங்க நகைகள், ஏனாமில் உள்ள ஸ்டேட் பாங்கில் 24 ஆயிரத்து 352 ரூபாய் உள்ளது.மகன் மல்லாடி ரகுவம்சிக்கு, பல்வேறு பாங்குகளில் 77 ஆயிரத்து 141 ரூபாய் உள்ளது. ஹீரோ ஹோண்டா பைக், 120 கிராம் தங்க நகைகள் வைத்துள்ளார். ஸ்டேட் பாங்கில் எட்டு லட்சம் ரூபாய் கல்விக் கடன் நிலுவையில் உள்ளது. (ற)

## தமிழகத்தில் யாருக்கும் பாதுகாப்பற்ற சூழல்

### பழ. நெடுமாறன் குற்றச்சாட்டு



திருச்சி, செப்.30

தமிழகத்தில் இன்று யாருக்கும் பாதுகாப்பற்ற சூழல் நிலவுகிறது. அநியாயத்தை எதிர்த்துப் போராடும் துணிவை மக்களிடம் ஏற்படுத்துவதைத் தவிர, அக்கிரமங்களைத் தடுக்க வேறு வழியில்லை - என்று தமிழர் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் மக்கள் கண்காணிப்பகம் சார்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மனித உரிமைக் காப்பாளர் கூட்டமைப்பின் மாநிலத் திட்டமிடல் கூட்டத்தின்போது, 'தமிழகத்தில் மனித உரிமைகள் - 2008' என்ற நூலை வெளியிட்டு 'இன்றைய தமிழகச் சூழலும், காப்பாளர் கடமைகளும்' என்ற தலைப்பில் அவர் மேலும் பேசியவை வருமாறு -

தமிழக்த்தில் இன்று யாருக்கும் பாதுகாப்பற்ற சூழல்தான் நிலவுகிறது. அரசியல்வாதிகள், தொழில்சங்கவாதிகள், பத்திரிகையாளர்கள், மனித உரிமைக் காப்பாளர்கள் என யாருக்கும் பாதுகாப்பில்லை.

அறிஞர்களைப் போற்றிப் பாதுகாக்கத் தவறும் எந்த நாட்டுக்கும் எதிர்காலம் இல்லை. தமிழறிஞர்கள் இங்கு சிறைப்படுத்தப்படுகிறார்கள். பத்திரிகைகளில் வரும் செய்தியைப் பார்த்துவிட்டு தொலைபேசியில் மிரட்டுகிறார்கள்.

பொலிஸ் இராஜ்யம்தான் நடைபெறுகிறது. மொத்தத்தில் பாசிச அரசு நடைபெறுகிறது என்று சொன்னால் மிகையில்லை.

சட்டத்தரணிகள் மட்டுமல்ல, நீதிபதிகளும் தாக்கப்படுகிறார்கள். மோதல் சாவுகள், சித்திரவதைச் சாவுகள், கூலிப்படையினரை வைத்துக் கொலை செய்தல் போன்றவையும் நடைபெறுகின்றன. பல கொலைகள் மூடி மறைக்கப்படுகின்றன. நேரில் பார்ப்பவர்கள், தகவல் தெரிந்தவர்கள் சாட்சி சொல்ல அச்சப்படுகின்றனர். - என்று தெரிவித்தார்.

## சிறை அதிகாரிகள் மீது கசாப் தாக்குதல்

### வீடியோ ஆதாரம் நீதிமன்றில் தாக்கல்

மும்பை,செப்.30

மும்பைத் தாக்குதல் வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் பயங்கரவாதி அஜ்மல் கசாப், சிறையில் அதிகாரிகளைத் தாக்கியது குறித்த விடியோ காட்சிகள் அடங்கிய 'சிடி'யை மும்பை உயர் நீதிமன்றில் மகாராஷ்டிரா அரசு நேற்று முன்தினம் தாக்கல் செய்தது.

மும்பைத் தாக்குதல் வழக்கின் முக்கிய குற்றவாளியான பாகிஸ்தானைச் சேர்ந்த அஜ்மல் கசாப்புக்கு, கீழ் நீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்துள்ளது. இந்த தண்டனையை உறுதி செய்வது தொடர்பான வழக்கு, மும்பை உயர்நீதிமன்றில் நடந்து வருகிறது.

இந்நிலையில், அரச தரப்பு சட்டத்தரணி உஜ்வல் நிகாழ், மும்பை உயர்நீதிமன்றில் நேற்று முன்தினம் விடியோ காட்சிகள் அடங்கிய ஒரு 'சிடி'யை தாக்கல் செய்தார்.

இதுகுறித்து சட்டத்தரணி உஜ்வல் நிகாம், நீதிபதி ரஞ்சனா தேசாயிடம் கூறியவை வருமாறு -

மும்பைச் சிறையில் அஜ்மல் கசாப் அடைக்கப்பட்டுள்ளார். கடந்த முதலாம் திகதி, சட்ட விரோதமான தவறான நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டிருந்தார். அப்போது சிறை அதிகாரிகள் அவரைக் கண்டித்தனர். ஆத்திரம் அடைந்த கசாப், சிறை அதிகாரிகளைத் தாக்கினார். இந்தக் காட்சிகள், சிறை வளாகத்தில் இருந்த இரகசியக் கண்காணிப்புக் கமராவில் பதிவாகியுள்ளன. அந்த சிடியைத்தான், தற்போது நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளேன். அஜ்மல் கசாப், கொமாண்டோப் பயிற்சி பெற்ற பயங்கரவாதி. அவரின் நடவடிக்கைகளால் சிறை அதிகாரிகளின் உயிருக்கே ஆபத்து ஏற்படும் நிலை உள்ளது.

- இப்படி அவர் கூறினார்.

## காங். ஆட்சி தமிழகத்தில் வேண்டும்-தங்கபாலு



சென்னை,செப்.30

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியின் தலைமையில் ஆட்சி அமைக்க விரும்புகிறோம். அதற்கான சூழல், நேரம், காலம் ஆகியவற்றை காங்கிரஸ் செயற்குழு தீர்மானிக்கும் - சோனியா காந்தி தீர்மானிப்பார்.

- இவ்வாறு தமிழகக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு தெரிவித்தார்.

அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி வரும் 9ஆம் திகதி திருச்சி வருகிறார். இதையொட்டி தமிழகம் முழுவதும் மாநிலத் தலைவர் தங்கபாலு, காங்கிரஸ் செயல் வீரர்கள் கூட்டத்தில் பற்கேற்று ஆலோசனை நடத்தி வருகிறார்.

நேற்றுமுன்தினம் நாகர்கோவிலில் உள்ள பெருமாள் மண்டபத்தில் கன்னியாகுமரி மாவட்ட காங்கிரஸ் கட்சியின் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் தங்கபாலு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொம்மர்ஸ், மணற்காடு அன்ரனிஸ் உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றி

யாழ்ப்பாணம்,செப்.30

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் போட்டிகளில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி, மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி ஆகியவை வெற்றி பெற்றன.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த திங்கட்கிழமை முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழக அணியை 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் 'பி' அணி மோதியது.

இதில் மணற்காடு சென். அன்ரனிஸ் 'பி' அணி தன்னை எதிர்த்து விளையாடிய இமையாணன் விளையாட்டுக்கழக அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (த-23)

# நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மகாஜனா நடத்தும் போட்டிகள்

யாழ்ப்பாணம்,செப்.30

மகாஜனாக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விலகல் முறையிலான கரப்பந்தாட்டம், கிரிக்கெட், உதைபந்தாட்டப் போட்டிகள் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளிலும், 19 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்டப் போட்டி 4 ஆம், 5 ஆம் திகதிகளிலும், 21 வயதுப்பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் 7ஆம், 8ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

19 வயதுப் பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் 9 அணிகளும், 19 வயது ஆண்களுக்கான துடுப்பாட்டப் போட்டியில் 15 அணிகளும், 21 வயது ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் 17 அணிகளும் பங்கு கொள்ளவுள்ளன. (த-23)

# பன்னவெலவின் 800 மீற்றர் ஓட்டம் வட மாகாண சாதனைப் பட்டியலில்

வலி.வடக்கு,செப்.30

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய தடகளப் போட்டிப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பி.ஜி.சி.ஆர்.பன்னவெலவின் பெறுபேறு வடமாகாணத்தின் சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது.

கடந்த மூன்று ஆண்டு பெறுபேறுகளின் அடிப்படையில் சாதனைப் பட்டியலை வடமாகாண விளையாட்டுத் திணைக் களம் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. -

2007 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.சிவதீபன் 2:00:7 செக்கனில் ஓடியும், 2009 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த வி.நேசரூபன் 2:04:4 செக்கனில் ஓடியும் இந்த ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பி.ஜி.சி.ஆர். பன்னவெல 1:59:8 செக்கனிலும் ஓடிய பெறுபேறுகளும் உண்டு.

இதனடிப்படையில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பி.ஜி.சி. ஆர்.பன்னவெல 800 மீற்றரை ஓடிய1:59:8 செக்கன் வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது. (த-86)

# செலான் வங்கி சம்பியன்

வலி.வடக்கு,செப்.30

இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கம் தேசிய மட்டத்தில் நடத்திய வலைப்பந்தாட்டப் போட்டியில் செலான் வங்கி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

திருகோணமலை நகரசபை மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் செலான் வங்கி அணியும் ஹற்றன் நஷனல் வங்கி அணியும் மோதிக் கொண்டன. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் செலான் வங்கி 78:57 புள்ளிகள் என்ற அடிப்படையில் ஹற்றன் நஷனல் வங்கி அணியை வெற்றி பெற்று தேசிய மட்டச் சம்பியனாகியது.

செலான் வங்கி அணியின் வீராங்கனை சிவலிங்கம் தர்சினி போட்டியின் வலைப்பந்தாட்டராணியாகவும், சிறந்த பெறுபேற்றை எய்துபவராகவும் தெரிவு செய்யப்பட்டார். (த-86)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,செப்.30

கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தின் 52 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை கிறின்பீல்ட் சனசமூக நிலைய மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் கிறின்பீல்ட் விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து திருவள்ளுவர் விளையாட்டுக் கழகம் மோதும். (த-23)

# கிரிக்கெட் போட்டி

வலி.வடக்கு,செப்.30

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் அமரர் சுப்பிரமணியம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்தும் 16 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் ஆட்டங்கள் நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலயத்திற்கு அருலுள்ள உள்ள பூமா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

நாளைய ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அணியும் உடுவில் கிங்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (த-86)

# நவசக்தி, மாலு சந்தி மைக்கல் அணிகள் ஆட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம்,செப்.30

நவசக்தி விளையாட்டுக் கழக அணி, மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக் கழக அணி ஆகியன உதைபந்தாட்ட ஆட்டங்களில் வெற்றியீட்டியுள்ளன.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 7பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நவசக்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரணவாய் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் நவசக்தி விளையாட்டுக் கழக அணி எதிர்த்து விளையாடிய கரணவாய் விளையாட்டுக் கழக அணியை 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் ஆட்டம் ஆரம்பமானது முதல் முடியும் வரை இரண்டு அணிகளும் எதுவித கோல்களையும் போடவில்லை. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு 5 சமநிலை தவிப்பு உதைகள் வழங்கப்பட்டது.

இதில் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் யங்கம் பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை வெற்றிகொண்டது. (த-23)




# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் வலைப்பந்தாட்டத்தில் வென்ற அணிகள்

யாழ்ப்பாணம்,செப்.30

வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியின் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வவுனியா வலைப்பந்தாட்ட சங்கத்தின் ஆதரவுடன் வவுனியா மாவட்ட பாடசாலைகளின் இடையில் 19,17,15 வயதுப் பிரிவுகளுக்கிடையே நடத்தப்பட்ட வலைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:-

### 19 வயது பிரிவு

வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி (முதலாமிடம்), வவுனியா பெரிய கோமரசன்குளம் மகாவித்தியாலயம் (இரண்டாமிடம்),

சிறந்த வீராங்கனையாக சைவப் பிரகாச மகளிர் கல்லூரி மாணவி எஸ்.திவ்யா தெரிவானார்.

### 17 வயது பிரிவு

வவுனியா ஸ்கந்தபுரம் வாணி வித்தியாலயம் (முதலாமிடம்), வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி(இரண்டாமிடம்), வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் (மூன்றாமிடம்).

சிறந்த வீராங்கனையாக வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி வி.துவாரகா தெரிவு செய்யப்பட்டார். சிறந்த பெறுபேற்றை எய்துபவராக வவுனியா ஸ்கந்தபுரம் வாணிவித்தியாலய மாணவி ஜி.சிந்துஜா தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த தடுப்பாளராக வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி பி.சஜிரா தெரிவு செய்யப்பட்டார்.

### 15 வயது பிரிவு

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் (முதலாமிடம்), வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி (இரண்டாமிடம்), வவுனியா அல்லிகபால் வித்தியாலயம் (மூன்றாமிடம்).

சிறந்த வீராங்கனையாக வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய மாணவி ஜே.தர்மிகா தெரிவு செய்யப்பட்டார். சிறந்த பெறுபேற்றை எய்துபவராக வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய மாணவி ஆர்.தயானி தெரிவு செய்யப்பட்டார். சிறந்த தடுப்பாளராக வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி ரி.டிலக்சிகா தெரிவு செய்யப்பட்டார்.

வளர்ந்து வரும் அணிக்கான விசேட விருது வவுனியா கனகராயன் குளம் ம.விக்கு வழங்கப்பட்டது. அதிக அணிகள் பங்கு பற்றியமைக்கான விசேட விருது வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு வழங்கப்பட்டது. (த-23)

# நீண்ட இடைவெளிக்குப் பின்னர் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் தேர்வு

வலி.வடக்கு,செப்.30

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தில் காணப்படும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை திருகோணமலை விளையாட்டுத் திணைக்களத்தில் நடைபெற்றுள்ளது.


கடந்த இருபது வருடகால இடைவெளியின் பின்னர் நடைபெற்றுள்ள இந்த நேர்முகப் பரீட்சைக்கு வடமாகாணத்திற்கு உட்பட்ட விளையாட்டு அலுவலர்கள் தோற்றியுள்ளனர்.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் வலைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், கிரிக்கெட் மற்றும் மெய்வன்மைக்கான பயிற்றுவிப்பாளர்கள் மாவட்ட ரீதியாக நியமிக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் பெரும்பான்மையானவர்கள் சம காலத்தில் நியமனம் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பயிற்றுவிப்பாளர்களாக தற்போதைய வடமாகாண விளையாட்டு அலுவலர்கள் நியமனம் பெறும் சந்தர்ப்பத்தில் மேலும் பல விளையாட்டு அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் ஏற்படலாம் என்று கூறப்பட்டது. (த-86)





ஸ்ரீலங்கா கிரிக்கெட்டினால் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயிற்றுநருக்கான (தரம்-1) பயிற்சி முகாம் கடந்த சனிக்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெற்றது. அதன் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் பயிற்றுவிப்பாளர் ஒருவர் [illegible] நுட்பங்களை பயிற்சியாளர்களுக்கு விளங்கப்படுத்துவதையும், பயிற்சியாளர்கள் துடுப்பாட்டப் பயிற்சி பெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹர்பஜன் சிங்குடன் மோதல் போக்கை இந்தியத் தொடரின்போது கடைப்பிடியோம்

## ஆஸி. அணியின் துணைத்தலைவர் கிளார்க் கூறுகிறார்



சண்டிகர், செப். 30

''ஹர்பஜன் சிங்கோடு நாங்கள் மோதல் போக்கைக் கடைப்பிடிக்கப் போவதில்லை. ஹர்பஜன் என்ற பந்துவீச்சாளரை மட்டுமே நாங்கள் எதிர்கொள்வோம்''

- இவ்வாறு ஆஸ்திரேலிய அணியின் துணைத்தலைவரான மைக்கல் கிளார்க் கூறியுள்ளார்.

இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 2 டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரின், முதலாவது டெஸ்ட் போட்டி நாளை (முதலாம் திகதி) மொகாலியில் ஆரம்பமாகிறது.

இதையொட்டி இரு அணி வீரர்களும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

நேற்றுமுன்தினம் பயிற்சியில் ஈடுபட்ட இந்திய அணியின் முன்னணிச் சுழற்பந்து வீச்சாளரான ஹர்பஜன்சிங் காயமடைந்துள்ளார்.

இதனால், அவர் முதலாவது டெஸ்ட் போட்டியில் ஆடுவதில் சந்தேகம் நிலவுகிறது.

இந்நிலையில், இது தொடர்பாக ஆஸ்திரேலிய அணியின் துணைத் தலைவரான மைக்கல் கிளார்க், நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:-

ஹர்பஜன் சிங் விளையாடுவார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக ஆடுவதில் அவருக்கு எவ்வளவு ஆர்வம் உள்ளது என்பது எங்களுக்குத் தெரியும்.

ஆனால், அவர் விளையாட முடியாமல் போனால், அது எங்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய சந்தர்ப்பமாக இருக்கும். ஆஸ்திரேலிய வீரர்களுக்கு எதிராக அவர் எப்போதுமே சிறப்பாகப் பந்து வீசியிருக்கிறார்.

கடந்த காலங்களில் ஹர்பஜன்சிங்குக்கும், ஆஸ்திரேலிய வீரர்களுக்குமிடையே நடந்த மோதல்கள் பற்றி அதிகமாகப் பேசப்படுகின்றது.

சில வீரர்கள் மோதலை விரும்புகிறார்கள். அதேவேளை சிறப்பாகவும் ஆடுவார்கள்.

ஆனால், நாங்கள் அதுபோன்ற விடயங்களில் கவனம் செலுத்தப் போவதில்லை. ஹர்பஜன்சிங் என்ற பந்து வீச்சாளரை மட்டுமே எதிர்கொள்வோம்.

ஹர்பஜன்சிங் போன்று மோதல் போக்கோடு சிறப்பாக ஆடக்கூடிய வீரர்கள் எல்லா அணிகளிலும் இருக்கிறார்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரை ஹர்பஜன்சிங் உலகின் தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவர். எப்போதும் - எந்தச் சூழ்நிலையிலும் அவரது பந்து வீச்சை எதிர்கொள்வது கடினம்.

இதேபோல் சஹீர்கான், இஷாந்த் ஷர்மா ஆகியோரின் பந்துவீச்சும் சவாலாக இருக்கும். அவர்கள் இருவரும் 'ரிவர்ஸ் ஸ்விங்' வீசுவதில் திறமையானவர்கள். எனவே, இந்தியத் தொடர் எமக்குச் சவாலாகவே இருக்கும்.

- இவ்வாறு கிளார்க் கூறினார்.

### கொமன்வெல்த் போட்டிகள் ஆரம்பமாகவுள்ள நிலையில்...

## கொமன்வெல்த் கிராமத்தில் சானியா!

புதுடில்லி,செப். 30

கொமன்வெல்த் போட்டிகளுக்கான விளையாட்டுக் கிராமத்தில் சானியா மிர்ஷா தங்குவார் என, அவரது தந்தை இம்ரான் உறுதியளித்துள்ளார். இதையடுத்து கணவர் சொய்ப் மாலிக்குடன் வேறு இடத்தில் சானியா தங்கப்போகிறார் என எழுந்த சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.



கொமன்வெல்த் போட்டிகள் எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை டில்லியில் நடக்கவுள்ளன.

இதற்கான மைதானங்கள் கட்டுவது, அனுமதி வழங்குதல் போன்ற பல பணிகளில் கோடிக்கணக்கில் ஊழல் நடந்தது. போட்டி ஆரம்பமாக இன்னும் 3 நாள்களே உள்ள நிலையில் மைதானக் கட்டுமானப்பணிகள் இன்னும் முழுமையடையாமல் உள்ளன.

வீரர், வீராங்கனைகள் தங்குவதற்காகக் கட்டப்பட்டுள்ள விளையாட்டுக் கிராமத்தில் சுகாதாரக் கேடு நிலவுகிறது. இதையடுத்து இங்கு வருவதற்கு முன்னணி நட்சத்திரங்கள் தயக்கம் காட்டினர். இவர்கள் வரிசையில் இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்ஷா, மகேஷ் பூபதி ஆகியோரின் பெயர்களும் அடிபட்டன.

சானியா - சொய்ப் மாலிக் வேறு இடத்தில் தங்கப் போகிறார்கள் எனக் கூறப்பட்டது. இதனை மறுத்த சானியாவின் தந்தை இம்ரான் கூறுகையில்,

''ஏனைய வீராங்கனைகளுடன் விளையாட்டுக் கிராமத்தில்தான் சானியா தங்குவார்'' - என்றார்.

இதேபோல இந்திய டென்னிஸ் வீரர் மகேஷ் பூபதி தமது வருங்கால மனைவி லாரா தத்தாவுடன் வேறு இடத்தில் தங்க முடிவு செய்திருக்கிறார் எனவும் செய்திகள் வெளியாகின. இது தொடர்பாக பூபதி கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

## புதிய பாடல் வெளியீடு

கொமன்வெல்த் போட்டிகளுக்கான அதிகாரபூர்வ பாடலை ஏ.ஆர்.ரஹ்மான் வெளியிட்டுள்ளார். போட்டிச் சின்னமான ஷேராவுக்காக, மற்றொரு பாடல் வெளியிடப்பட்டது.

இதுகுறித்து ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் சுரேஷ் கல்மாடி கூறுகையில்,

''கொமன்வெல்த் போட்டிகளுக்காக ரஹ்மானின் பாடல் மட்டுமன்றி, ஷேராவுக்காகவும் பாடல் வெளியானது. தற்போது 'டில்லி யுனைடெட்' என ஆரம்பமாகும் புதிய பாடல் வெளிவந்துள்ளது. இது கேட்பதற்கு இனிமையாக உள்ளது.'' - என்றார்.

### தொடர்கிறது புறக்கணிப்பு

## உலக சம்பியன்கள் விலகல்!

பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் போன்ற காரணங்களால் பல முன்னணி வீரர்கள் டில்லித் தொடரைப் புறக்கணித்து வருகின்றனர்.

இந்நிலையில் 800 மீற்றர் ஓட்டப் போட்டியின் உலக சம்பியனான தென்னாபிரிக்காவின் மபுலேனி முலாட்ஜி காயம் காரணமாக விலகியுள்ளார்.

அதேவேளை, பாலின சர்ச்சையில் சிக்கி மீண்ட, 800 மீற்றர் உலக சம்பியனான தென்னாபிரிக்காவின் செமன்யாவும், டில்லி வருவது சந்தேகமாக உள்ளது.

இதேபோல, இங்கிலாந்தின் டென்னிஸ் வீரர் புளும்பீல்டும் காயம் காரணமாக இத்தொடரிலிருந்து விலகியுள்ளார்.

## பாதுகாப்புப் பணியில் போர் விமானங்கள்

கொமன்வெல்த் போட்டிகளின் போது, அசம்பாவிதம் எதுவும் நிகழாமல் இருக்க, பாதுகாப்புப் பணியில் போர் விமானங்கள் ஈடுபடுத்தப்படவுள்ளன. அத்துமீறி தடை செய்யப்பட்ட பகுதிக்குள் நுழையும் விமானங்கள், அதிரடியாகச் சுட்டு வீழ்த்தப்படும். இதற்கு சுகாய் மற்றும் எம்.ஐ. ஜி-21 ரக போர் விமானங்கள் தயார் நிலையில் உள்ளன.

போட்டி நடக்கவுள்ள நாட்களில் ஆளில்லாத 2 விமானங்கள், டில்லி முழுவதும் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளன. 6 ஆயிரம் அடி முதல் 10 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து, இவை கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடும். அதேவேளை, பாதுகாப்புப் பணியில் குரங்குகளும் ஈடுபடுத்தப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## கொமன்வெல்த் கிராமத்தில் திருட்டு

பாதுகாப்பு, சுகாதாரம், டெங்கு, மழையின் பாதிப்பு எனப் பல்வேறு பிரச்சினைகளைக் கடந்து, கொமன்வெல்த் போட்டிகள் இன்னும் சில நாட்களில் ஆரம்பமாகவுள்ள நிலையில் வீரர்கள் தங்கியுள்ள விளையாட்டுக் கிராமத்தில் புதிதாகத் திருட்டுப் பயம் ஏற்பட்டுள்ளது.

ஆங்காங்கே சிறியளவிலான திருட்டுகள் நடப்பது குறித்து டில்லி முதல்வர் ஷீலா திக்சித் கூறுகையில்,

''என்னைப் பொறுத்தவரையில் வீரர்கள் தங்கள் அறைகளைப் பூட்டி வைத்துக்கொள்வது நல்லது.'' - என்றார்.

# டெண்டுல்கரிடம் பொண்டிங் கற்றுக்கொள்ளவேண்டும்!

### ஆஸி. அணியின் முன்னாள் தலைவர் ரெய்லர் அறிவுரை



''பொண்டிங் துடுப்பாட்டத்தில் தமது பழைய திறமையைத் திரும்பப்பெறவேண்டுமாயின் இந்திய நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கரின் ஆட்டத்திலிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.'' - என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரான மார்க் ரெய்லர் அறிவுரை கூறியுள்ளார். கடந்த ஓராண்டில் டெண்டுல்கர் 6 சதங்களுடன் 81.84 என்ற ஓட்ட சராசரி விகிதத்தில் உள்ளார். ஆனால், பொண்டிங்கின் துடுப்பாட்டத்தில் சரிவு ஏற்பட்டுள்ளது. அவர் கடந்த ஆண்டில் ஒரு சதம் மட்டுமே அடித்துள்ளார். ஓட்ட சராசரி விகிதம் 41 மட்டுமே. ஆனால், பொண்டிங்கிடம் இன்னும் துடுப்பாட்டத் திறன் உள்ளது. அதேவேளை, அவர் சச்சினின் சத எண்ணிக்கையை எட்ட முடியாது. ஏனெனில், அவர் இடைவெளியை அதிகப்படுத்திவிட்டார். சச்சின் மறுபிறவி எடுத்துள்ளார், அவர் இப்போது அபாரமாக விளையாடி வருகிறார். இது பொண்டிங்கிற்கு நிச்சயம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும்.

பொண்டிங்கிற்கு இளம் ஆஸ்திரேலிய அணியை மறுகட்டுமானம் செய்யும் மிகப் பெரிய பொறுப்பு உள்ளது. இது அவரை துடுப்பாட்டத்தில் கவனம் செலுத்தவிடாமல் செய்துள்ளது. அதிஷ்டவசமாக டெண்டுல்கருக்கு இதுபோன்ற சுமை இல்லை.

- இவ்வாறு கூறினார் மார்க் ரெய்லர்.

# "உதைபந்தாட்டத்தை மட்டும் விளையாடு விலை மாதர்களுடன் விளையாடாதே!"

## இப்படிக் கேலி செய்த ரசிகருடன் பெக்காம் மோதல்

இங்கிலாந்து உதைபந்தாட்ட அணியின் முன்னாள் தலைவரான டேவிட் பெக்காம், விலை மாதர்களுடன் தொடர்பு வைத்திருக்கிறார் எனச் சர்ச்சை எழுந்துள்ளது. இதனைக் கண்டித்து மைதானத்தில் கோஷம் எழுப்பிய ரசிகர் ஒருவருடன் பெக்காம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரும் தற்போது லொஸ் ஏஞ்சல்ஸ் கெலக்சி அணிக்காக விளையாடி வருபவருமான பெக்காம், இர்மா நைஸி என்ற விலை மாதுவுடன் நீண்ட காலமாகத் தொடர்பு வைத்திருந்துள்ளார்.

இந்த உறவு குறித்து நைஸி தமது இணையத்தளத்தில் எழுதியுள்ளார். இது பெக்காமுக்கு தர்மசங்கடமான நிலையை உருவாக்கியுள்ளது.

ரியல்மாட்ரிட்டிலிருந்து விலகி லொஸ் ஏஞ்சல்ஸ் கெலக்சி அணியில் இணைந்த பின்னர், 2007ஆம் ஆண்டு நியூயோர்க் ஹோட்டல் ஒன்றில் பெக்காமைச் சந்தித்தார் எனவும், அப்போது இருவரும் உறவு வைத்துக் கொண்டோம் எனவும் நைஸி தமது இணையத்தளத்தில் தகவல் வெளியிட்டிருந்தார்.

இது குறித்து அமெரிக்கப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது. அந்தப் பத்திரிகை மீது பெக்காம் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இந்த நிலையில் அண்மையில் நடந்த ஒரு போட்டியில் லொஸ் ஏஞ்சல்ஸ் கெலக்சி அணி, நியூயோர்க் ரெட்புல்ஸ் அணியுடன் மோதியது.

இந்தப் போட்டியில் கெலக்சி தோல்வி கண்டது. வீரர்கள் ஆடை மாற்றும் அறைக்குத் திரும்பும் போது,

''பெக்காம்! உதைபந்தாட்டம் மட்டும் விளையாடு. விலைமாதர்களுடன் விளையாடுவதை நிறுத்து!'' என்று ரசிகர் ஒருவர் ஆவேசமாகக் கத்தினார்.



இதனைக் கேட்டதும் பெக்காம் அந்த ரசிகருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதுவும் அப்படியே தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

மேலும் லண்டனின் 'நியூஸ் ஒவ் தி வோர்ல்ட்' பத்திரிகை பெக்காம், ரசிகருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதைப் படத்துடன் செய்தியாக வெளியிட்டது. இந்தச் செய்தியால் இங்கிலாந்தில் பெக்காமின் செல்வாக்கு கிட்டத்தட்ட வெறுமையாகிவிட்டது.

மேலும், 2018ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியை நடத்தும் வாய்ப்பை இங்கிலாந்துக்குப் பெற்றுத்தரும் குழுவுக்கும் பெக்காம் தலைவராக இருக்கிறார். அந்தப் பதவியிலிருந்து பெக்காமை நீக்க வேண்டும் என்றும் கோரிக்கை எழுந்துள்ளது.

லொஸ் ஏஞ்சல்ஸ் கெலக்சி வீரர்களிலேயே அதிக சம்பளம் பெறும் வீரர் பெக்காம். வருடத்திற்கு 70 லட்சம் அமெரிக்க டொலர்களைச் சம்பளமாக அவர் பெறுகிறார்.

முன்னாள் 'ஸ்பைஸ்கேர்ள்' விக்டோரியாதான் இவரது மனைவி. இந்தத் தம்பதியர்க்கு 3 குழந்தைகள் உள்ளனர்.இவர்கள் இருவரும் உலகிலேயே விலை அதிகமுள்ள பகுதியாகக் கருதப்படும் லொஸ்ஏஞ்சல்ஸின் பெவர்லிஹில்சில் ஒரு கோடி 90 லட்சம் டொலர் மதிப்புள்ள வீட்டில் வசித்துவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

சங்கானை ப.நோ.கூ. சங்கப்பணியாளரும், எமது சங்க உறுப்பினருமாகிய திருமதி கோ.கிருஷ்ணவேணி அவர்களின் அன்புத் தந்தை

**தர்மலிங்கம் சந்திரசேகரம்**

அவர்கள் 28.09.2010 மரணமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/571460)

சங்கானை ப.நோ.கூ. சங்கப்பணியாளர் சிக்கன சேமிப்புக்கடனுதவிக் கூட்டுறவுசங்கம். (வ.து)

## கண்ணீர் அஞ்சலி



**முருகேசு சத்தியநாதன்**

(முன்னாள் ஊழியர் இல.மின்சாரசபை- சுன்னாகம்)

சுன்னாகம் ஐயனார் தேவஸ்தான அடியவராகிய முருகேசு சத்தியநாதன் அவர்களின் திடீர் மறைவுச்செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய ஐயனார்பாதம் தொழுகின்றோம்.

ஐயனார் தேவஸ்தான பரிபாலனசபை,
சுன்னாகம்.

ஐயனார் தேவஸ்தான பரிபாலனசபை உறுப்பினர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



எங்கள் சக ஊழியரான ஜே.ஜெனாட்சனின் அன்புத் தந்தை

**வினாசித்தம்பி ஜெயராஜா**

அவர்கள் 29.09.2010 புதன்கிழமை காலமாகிவிட்டதாகக் கிடைத்த செய்தியை அறிந்து மிகவும் வேதனை அடைந்துள்ளோம். அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(103971) ஹொட்டல் றொலெக்ஸ் ஸ்தாபனத்தாரும் சக ஊழியர்களும்

## வியாபாரக் கணக்கு

வியாபார இலாப நட்டக் கணக்குகளும் வருமானவரி, புரள்வு வரி (Turnover Tax) சம்பந்தமான திரட்டுக்களும் தயாரித்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு : 0774431701, 0775051327

## தவறிவிட்டது

No:5,1/3, சென். லோறன்ஸ் ரோட், வெள்ளவத்தை என்னும் முகவரியுடைய கல்யாணி சுரேஸ் என்பவரின் (678181 234V) தே.அ.அட்டை கதுமலை ரோட், தாவடிச் சந்தி அருகில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும்.

Dr.சுரேஸ், தாவடிச்சந்தி,
கொக்குவில். தொ.பே. : 0212226368

## தவறிவிட்டது

NP JW 8166.ஆம் இலக்க மோட்டார் சைக்கிளின் பின் இலக்கத்தகடு தாவடியிலிருந்து மருதனார்மடம், பண்டத்தரிப்பு ஆகிய இடங்கள் ஊடாகச் செல்லும்போது தவறிவிட்டது.

ஆகவே, கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ஆ.செ.நடேசபிள்ளை, வன்னியசிங்கம் வீதி,
தாவடி வட க்கு, கொக்குவில். தொலைபேசி-021 222 6292

## தவறிவிட்டது

ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய பத்மநாதன் அகிந்தன் (862041321V) என்னும் இலக்கமுடைய தே.அ. அட்டை யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது.இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் T.P இலக்கத்துடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும். தொடர்பு : 0770690533

## வாடகைக்கு

கஸ்தூரியார் வீதியிலும் நாவலர் வீதியிலும் வீடும் கடையும் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு கொள்ள : 0212223479
0215670313

(103841)

## தவறிவிட்டது

கோயிற்குளம், மன்னார் என்னும் முகவரியுடைய சு.வரதகுமார் என்பவரின் சாரதி அனுமதிப்பத்திரம் (DL-A011051848) தவ்றிவிட்டது.கண்டெடுத்தவர்கள் 0773 844276 என்ற தொ.பே. இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (103947)

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு சத்தியநாதன்

(C.E.B. Chunnakam)



வரியப்புலம், சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் அம்பலவாணர் வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சத்தியநாதன் (28.09.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசமலரின் அன்புக் கணவரும் மதிவதனி, நவநீதன் (C.E.B. Chunnakam) ஆகியோரின் அன்புத் தந்தையும் தனபாலசிங்கத்தின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பலவாணர் வீதி,
உடுவில். (103972)

தகவல் :
குடும்பத்தினர்.

### செல்வவிநாயகம் இராமநாதன்

புலோலி மேற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வவிநாயகம் இராமநாதன் கடந்த (26.09.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தங்கமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்வவிநாயகம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆழ்வாப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், இராமச்சந்திரன் மற்றும் சிவஞானசுந்தரம், குமாரசாமி, அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சூரியகலா (தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு), ஸ்ரீதரன் (முகாமையாளர், கணனிவள நிலையம், வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி), மனோகரன் (கனடா), சந்திரகலா (லண்டன்), பத்மகலா, விஜயகலா (ஆசிரியர், சுண்டுக்குளி, மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிறிஸ்ரி (தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு), அமுதா (ஆசிரியை, வட.இந்துமகளிர் கல்லூரி), சிவரஞ்சினி (கனடா), ஆனந்தகுமார் (லண்டன்), நடராசா (புலோலி), ரஞ்சித்காந் (ஆசிரியர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் டென்சியா, ஜொவிற்றா, சஜித், அபிஷா, துவாரகன், அபிநயா, வினுஷ், தனிகா, வாணி, வாகினி, துவாரகா, மிதுலராஜ், நவீன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P. 0212264219
0773580755

தகவல் :
(98704) இ.ஸ்ரீதரன் (மகன்)

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்




நாதஸ்வரவித்துவான்

## அமரர் நல்லரசு இராஜேஸ்வரன்(ராஜன்)

கோபுரம் சாய்ந்ததே
கொடுந்துன்பம் நேரிட்டதே
எங்கள் கோலங்கள் அழிந்ததுவே
ஏது கதி
தாங்க முடியாத துயரத்தில்
தவிக்குதையா எம்நெஞ்சு
அமைதியாக துயிலும் தங்கள்
ஆன்மா இறைபதம் சேர
இறைவனை இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மலர்வு
30.03.1956





உதிர்வு
14.09.2010

கடந்த 14.09.2010 செவ்வாய்க்கிழமையன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (30.09.2010) வியாழக்கிழமை பருத்தித்துறை வீதி, நல்லூர் சட்டநாதர் கோயிலுக்கு அருகிலுள்ள திவ்யஜீவன சங்க மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் நடைபெறும்.தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் அன்னாரின் மரணச் செய்தியறிந்து எமது துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

259, பருத்தித்துறை வீதி,
சங்கிலியன் தோப்பு,
நல்லூர். (103975)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலாலிக்குத்தெற்கே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்பிரதேசங்களில் அதிகளவில் கண்ணிவெடிகள் இருக்கின்றன. அண்மையில் ஒரு கிராமத்தில் கண்ணிவெடி அகற் றும் நடவடிக்கையின்போது சுமார் 565 கண்ணிகள் மீட்கப்பட்டன - என்றார். கடந்த ஒரு சில தினங்களில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் இருவர் கடும் காயமுற்றிருக்கின்றனர் என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

✱கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அச்சுவேலி, தம்பாலை ஆகிய பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றும் பணிகளைத் துரிதப்படுத்துமாறு டீ.டீ.ஜீ. பிரிவு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்புட்டது. எனினும்,வேறு இடங்களில் தமது கண்ணிவெடி அகற்றும் குழுவினரை ஈடுபத்தியிருப்பதால், இந்தப் பணிகளை ஆரம்பிக்க தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் இரண்டு குழுவினரை இப்பிரதேசங்களில் ஈடுபடுத்த தாங்கள் தயாராகி வருவதாகவும் டீ.டீ.ஜீ. கண்ணிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த மைக்கேல்ரான், மார்க் ஏலிவின்சன் ஆகியோர் அங்கு தெரிவித்தனர்.

✱தெல்லிப்பழை பிரதேசத்தில் மாவிட்டபுரம் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியைத் துரிதப்படுத்துமாறு கேட்டபொழுது; அங்கு பற்றைகள் அதிகமாக காணப்படுகின்றன என்றும் பாதுகாப்புத் தூரத்தைக் கருத்தில்கொள்ள வேண்டியிருப்பதனால் அங்கு கூடுதலான கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களை ஈடுபடுத்த முடியாதிருக்கும் அதேசமயம் வேலைகளைத் துரிதப்படுத்த முடியாதுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

✱கண்ணிவெடி அகற்றுவதற்கு ஆளணியை அதிகரிப்பது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டபோது, இதுமுடியாத காரியம் என்று கண்ணிவெடி அகற்றும் பகுதியினரால் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், மாதகல், பொன்னாலை ஆகிய பகுதிகளில் விரைவாகக் கண்ணிவெடிகளை அகற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டபோது, தற்போது மழைகாலம் ஆரம்பித்துவிட்டதால் கண்ணிவெடி அகற்றும் பணி எதிர்வரும் ஜனவரி மாதம் வரைக்கும் மிகவும் கஷ்டமான பணியாக இருக்கும் என்றும் கண்ணிவெடி அகற்றலை விரைவுபடுத்த முடியாது என்றும் விளக்கப்பட்டது.

✱மக்கள் மீள் குடியமர்வதற்காக மிகுந்த எதிர்பார்போடு இருப்பதாகவும், யாழ். நகரத்தில் அவர்களைத் தற்காலிகமாக வசிப்பதற்கு உறவினர்கள் நீண்டகாலத்திற்கு உடன்படாத நிலையே காணப்படுவதாகவும் அதிகரித்த வாடகையை வீட்டு உரிமையாளர்கள் எதிர்பார்ப்பதாகவும் அரச அதிபர் திருமதி இமல்டா சுகுமார் அங்கு எடுத்துக் கூறினார்.

இராணுவக் கட்டளைத் தளபதியிடம் மக்களை எந்தப் பிரதேசத்தில் விரைவாக மீள்குடியமர்த்த முடியுமோ அந்தப் பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றலைத் துரிதப்படுத்துமாறும், கிராம அலுவலர் பிரிவு ரீதியாக கண்ணிவெடி அகற்றலை நிறைவேற்றுமிடத்து மீள் குடியமர்வு விரைவாக சாத்தியப்படும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

இராணுவக் கட்டளைத் தளபதி அவ்வாறு தாம் நடவடிக்கை எடுப்பதாக பதில் அளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமல்டா சுகுமார், இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, யு.என்.டி.பி. கண்ணிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த ஜி.ரீஏரன், எஸ். டெனி, டீ.டீ.ஜீ. கண்ணிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த மைக்கேல்ரான், மார்க் ஏ.லிவின்சன், ஹலோ டிரஸ்ட் நிறுவனத்தைச் சேர்ந்த றதிச்சார்ட் போஜா், ஹெலன் றிபெக் ஆகியோரும் பங்குபற்றினர்.

(ஓ-15)

## தவறிவிட்டது

மீசாலை தெற்கு, மீசாலை வல்லிபுரம் நாகலிங்கம் எனும் பெயர், முகவரியுடைய தே.அ.அட்டை மற்றும் (சுவிஸ் நாட்டின் பிரஜா உரிமைப்பத்திரம்)அந் நாட்டு மருத்துவ நிலைப்பத்திரம் உட்பட ஒரு தொகை பணத்துடன் கைப்பை சத்திரச் சந்திக்கும் நவாலிக்கும் இடையில் தவறிவிட்டது.

குறிப்பு-சுவிஸ்லாந்து நாட்டு முக்கிய பத்திரங்கள் தவறியுள்ளமையினால் அவர் அந் நாட்டுக்கு திரும்பிச் செல்ல முடியாதுள்ளதால் தயவு செய்து இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(103977) க.தபாலசிங்கம்,
மீசாலை தென்கிழக்கு, மீசாலை.T.P.0772937358

## 14 ஆம் ஆண்டு நினைவலைகள்

### சண்முகநாதன் சிவகுமார் (வெள்ளை)

தோற்றம் 07.02.1973 மறைவு 30.09.1996



எம் அன்புச் செல்வம் சிவகுமாரா!
நீ எங்களை விட்டு வெகுதூரம்
சென்றாலும்
உன் நினைவுகள் ஒவ்வொன்றும்
எம் மனதில் பதிந்துள்ளது
உன் நினைவுகளோடு நாம் இங்கு
வாழ்கின்றோம்

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம் (103949)

அம்மா, அத்தான்,
அக்கா, மச்சான்,
தங்கை, மருமக்கள்.

## 16 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது ஆலய நாதஸ்வர வித்துவான்
நல்லரசு
இராஜேஸ்வரன் (ராஜன்)
அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவில் ஏங்கி நிற்கும்
நிர்வாகத்தினர்
(103970) கௌரி அம்மன் ஆலயம் - நல்லூர்.

## விண்ணக வாழ்வில்
## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
07 ✱ 03 ✱ 1928



விண்ணில்
31 ✱ 08 ✱ 2010

### திருமதி சூசைப்பிள்ளை அக்கினேஸ்

எமது பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் சூ.ஜெயரட்ணம் அவர்களின் பாசமிகு தாயார் திருமதி சூசைப்பிள்ளை அக்கினேஸ் அவர்களின் 31 ஆம் நாள் நினைவு தினத்தில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அகில இலங்கை தமிழ்பேசும் உப-தபால் அதிபர்கள் தொழிற்சங்கம், யாழ்ப்பாணம்.

(103945)

## இனப்பிரச்சினை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஒரு கட்சி எடுக்கும் முயற்சிகள் அனைத்தையும் மற்றைய கட்சி எதிர்ப்பதே வழமையானது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் முன்வைக்கப்பட்ட தீர்வுப் பொதியை ஐ.தே.கவினர் நாடாளுமன்றத்தில் எரித்தனர். பின்னர் ரணில் - புலிகள் சமாதான உடன்படிக்கையை தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ரத்துச் செய்தார்.

தமிழர்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதில் இருந்து தப்பிக் கொள்வதற்கும், சிங்கள மக்களின் உணர்வுகளைத் தமிழர்களுக்கு எதிராகக் கிளறிவிட்டு அதில் தமக்கு ஆதாயம் தேடிக் கொள்வதற்கும் கடந்த காலங்களில் சிங்களக் கட்சிகள் இதேபோக்கையே தொடர்ந்து கடைப்பிடித்தன என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

''உறுதியான, கவர்ச்சிகரமான தலைமை ஒன்று இல்லாது திண்டாடும் ஐ.தே.க. இப்போது தனது பழைய உத்தியை மீண்டும் கையில் எடுத்துள்ளது. உலக நாடுகள் அதிகாரப் பகிர்வை வலியுறுத்தி மகிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கடி கொடுத்து வரும் இந்தச் வேளையில் அதற்கு எதிரான முடிவை எடுத்து ஜனாதிபதிக்கு நெருக்கடியைக் கொடுப்பதன் மூலம் கடும்போக்குச் சிங்களவர்களின் ஆதரவைத் தமது பக்கம் திருப்பிக்கொள்ள நினைக்கிறது'' - என்று பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் தெரிவித்தார். தனது பெயரைக் குறிப்பிட அவர் விரும்பவில்லை.

''உலக நாடுகளின் நெருக்கடி இருந்தபோதும் தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதில் தற்போதைய அரசு நாட்டம் காட்டவில்லை. இதனாலேயே 18ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் அவசரம் காட்டிய அரசு இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இழுத்தடித்து வருகின்றது'' - என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டினர்.

பிரதான சிங்களக் கட்சிகளின் இந்தப் போக்கால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சந்தர்ப்பம் மிக மிக அருகி வருகின்றது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதுவரை காலமும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பயங்கரவாதமும் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாததும்தான் காரணங்கள் என்று இலங்கை அரசுகள் கூறி வந்தன. இப்போது அந்த இரண்டு காரணங்களும் களையப்பட்டிருப்பதால், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இதைவிட வேறு சரியான சந்தர்ப்பம் கிடைக்காது என்ற நிலை [illegible] அனைத்தையும் [illegible] என அவர்கள் மேலும் கூறினார். (அ-உ)

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கலந்துரையாடலில் முஸ்லிம் புத்திஜீவிகள் பலர் கலந்து கொண்டு மேற்படி சட்டமூலம் தொடர்பாகக் கலந்தாலோசித்தனர். இச்சட்டமூலத்தில் முஸ்லிம் களுக்குப் பாதகமாகக் காணப்படும் விடயங்கள் இவர்களால் சுட்டிக்காட்டப்பட்டன. கலந்துரையாடலின் முடிவிலேயே பிரஸ்தாப குழு நியமிக்கப் பட்டது.

இந்தக் குழுவில் முஸ்லிம் கவுன்ஸில் தலைவர் என்.எம். அமீன், சட்டத்தரணி யு.என். நசீம், மசூர் மௌலானா, கலாநிதி அனீஸ், ஏ.எம்.நஹியா, மீராத் ரஹீம், ஆதம்பாவா மற்றும் அஸ்கர்ஜான் அடங்குகின்றனர். (ஓ-சி)

## யாழ்.பல்கலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் முதன்மைப் பேருரையை பேராசிரியர் ரட்ணஜீவன் எச்.கூல் நிகழ்த்தினார். அவர் தமது உரையில்; யாழ்ப்பாணத்தில் பொறியியல் பீடம் அமைவது சிறந்தது. எனினும் இடத்தை ஒரு பிரச்சினையாகக் கருதாது கிளிநொச்சியில் அமைப்பதாயினும் சரி இப்பீடத்தை நிறுவுவது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இங்கு அமையப் பெறும் பொறியியல் பீடத்துக்கு விரிவுரையாளர் பிரச்சினை ஏதும் கிடையாது என்றும் இதில் இணைந்து கொள்வதற்கு விரிவுரையாளர்கள் பலர் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும் கலந்துரையாடலில் கலந்துகொண்ட முக்கியஸ்தர்கள் சுட்டிக் காட்டினர்.

இந்நிகழ்வில் பொறியியலாளர் அலெக்ஸ், பொறியியலாளர் கலாநிதி கே.பிரபாகரன், பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் பே.கந்தசாமி, பேராசிரியர் கே.சத்தியசீலன், பொறியியல் கலாநிதி கே.அற்புதராஜா, பொறியியலாளர் தர்மேந்திரா மற்றும் பலர் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். (ஓ-16)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 05.02.1966 உதிர்வு 01.09.2010



### அமரர் ஜினதாஸ் ரோசப் எல்விஸ் பிரஸ்லி

உனது ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை (01.10.2010) வெள்ளிக்கிழமையன்று யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அடைக்கல அன்னை ஆலயத்தில் மு.ப.11.30 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத்தொடர்ந்து ஆலயவளாகத்திலுள்ள மண்டபத்தில் இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

குருசு மதவடி,
ஆனைக்கோட்டை.

மனைவி.

## மரண அறிவித்தல்கள்

### அமரர் கனகசபை செல்வரத்தினம்

(நில அளவையாளர் திணைக்களம்)

கல்வத்தை, வதிரி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது சுவிஸ்நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை செல்வரத்தினம் கடந்த 26.09.2010 ஞாயிற்றுக்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை (தபால் அதிபர்) தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற கனகராசா (SKP & Sons அம்பாந்தோட்டை, அம்பலாந்தோட்டை, திஸமகராமை) பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ராஜேஸ்வரியின் (மருகா) அன்புக்கணவரும், ஸ்ரீகுகனேசன் (S.S.P. வவுனியா), காலஞ்சென்ற சிவனேசன் மற்றும் பிரிந்தா(UK), சுரேஷ்கரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுத்திக்கிரியைகள் சுவிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: S.ஸ்ரீகுகனேசன் (மகன்)
S.S.P.வவுனியா,
சிங்கத்தின் வீடு,
கரவெட்டி. (சி/571461) P.ஈஸ்வரநாதன்- மைத்துனர்.

### திருமதி துரைச்சாமி கனகம்மா



பொன்னம்பலம் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் இல.44, முதலியார் வீதி, நல்லூர் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி கனகம்மா நேற்று (29.09.2010) புதன்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி (மேற்பார்வையாளர், யாழ்.போதனா வைத்தியசாலை), பத்மாவதி, கனகாம்பிகை மற்றும் வீரசிங்கம், கிருஷ்ணபாலன் சாந்தினி (ஆசிரியை, யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் விமலதாஸ் (தபால் அலுவலகம், சுண்டுக்குளி), ரூபா, தாரணி உதயச்சந்திரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2010) வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 44, முதலியார் வீதி,
நல்லூர் தெற்கு. (103980)

தகவல்: சாந்தினி (மகள்),
விமலதாஸ் (பேரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக அரசு எதிர்த்த போதும் யுத்தத்தை ஆதரித்தது இந்தியா

## பாதுகாப்புச் செயலாளர் கூறுகிறார்

கொழும்பு, செப். 30

வன்னியில் இறுதிப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது தமிழக அரசு அதனை எதிர்த்தாலும் இந்திய அரசு அதற்கு முழு ஆதரவு வழங்கியது எனத் தெரிவித்துள்ளார் பாதுகாப்புச் செயலாளர் கோத்பாய ராஜபக்ஷ.

இலங்கை மத்திய வங்கியின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ராஜகிரியவிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் வங்கிக் கற்கைகளுக்கான நிலையத்தில் நேற்று மாலை இடம்பெற்ற 'பொருளாதார முகாமைத்துவமும் யுத்தத்தினால் கற்றுக் கொண்ட பாடங்களும்' எனும் தொனிப் பொருளிலான கருத்தரங்கில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு :-

கடந்த 30 வருடமாக நாட்டில் இடம்பெற்று வந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த அரசிற்கு, நாட்டில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

இதற்கு முன்னர் இருந்த அரசுகளும் ஜனாதிபதிகளும் விடுதலைப் புலிகளுடனான இந்த யுத்தத்தை நிறைவு செய்ய முடியாது என்றார்கள். ஆனால், இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இந்த அரசு நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தை நிறைவு செய்துள்ளது. இதற்குப் பிரதான காரணம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அர்பணிப்பும் அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்புமே ஆகும்.

இந்த யுத்தத்தை நேரான சிந்தனையுடன் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையுடன் ஆரம்பித்தோம். அப்போது இதற்கு முன்னர் இருந்த அரச தலைவர்கள் ஏன் யுத்தத்தில் தோல்வி அடைந்தார்கள் என்பதை மிக நுணுக்கமாக ஆராய்ந்தே யுத்தத்தை ஆரம்பித்தோம்.

அன்று எமது அரசு நாடாளுமன்றத்தில் பலவீனமாக இருந்தது. அந்நிலையிலேயே நாங்கள் யுத்தத்தை நிறைவு செய்தோம்.

அச்சந்தர்ப்பத்தில் தமிழக அரசு எதிர்த்த போது, இந்திய அரசு யுத்தத்தை எதிர்க்கவில்லை. இந்தியாவுடன் நட்புறவை பேணுவதற்காக மூன்று பேரைக் கொண்ட குழுவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்தார். அக்குழு உறுப்பினர்கள் இந்தியாவுடன் நட்புறவுப் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது இலங்கையில் மேற்கொள்ளப்படும் யுத்தத்திற்கு எதிராக தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார். அப்போது என்னுடன் தொடர்பு கொண்ட இந்திய வெளிவிவகார செயலாளர் இதுதொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச வேண்டும் என்றார். நான் ஜனாதிபதியோடு பேசிய போது இந்திய வெளிவிகார செயலாளரை மறுநாள் இலங்கை வந்து தன்னை சந்திக்கும்படி தெரிவித்தார்.

ஒரு நாட்டின் வெளிவிவகார அமைச்சர் மற்றொரு நாட்டுக்குச் செல்வதற்கு அனுமதி கிடைப்பது இரண்டு மணி நேரத்தில் இயலாத காரியம். எனினும் எமது ஜனாதிபதி அதனைச் செய்து காட்டினார். அவர் இலங்கை வந்தவுடன் கலந்துரையாடி யுத்தத்தின் போது கனரக ஆயுதங்களை பயன்படுத்துவதில்லை எனத் தெரிவித்தார். இதையடுத்து கருணாநிதி உண்ணாவிரதத்தைக் கைவிட்டார். அந்தளவு நாங்கள் இந்தியாவுடன் நெருக்கமாகச் செயற்பட்டோம்.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

### ஆயுதப்போராட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி தீர்வை முன்வைத்திருந்தால் இன்று இவ்வாறானதோர் நிலை உருவாகியிருக்காது.

அன்று அவ்வாறு தமிழ் மக்களை ஏமாற்றிய ஐக்கிய தேசிய கட்சி, இன்று தமிழ் மக்களின் போராட்டம் முடிந்து விட்டது என்று கூறுவது விந்தையானதாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அழிவுடன் தமிழ் மக்களின் பிரச்சினைகள் முடிந்துவிட்டதாக திஸ்ஸ அத்தநாயக்காவினால் எவ்வாறு கூற முடியும்? புலிகளின் ஆயுதப் போராட்டம் தோல்வியில் முடிந்ததை நாங்கள் அங்கீகரிக்கின்றோம். ஆனால் தமிழ் பேசும் மக்களின் அரசியல் தீர்வுக்கான போராட்டம் இன்னும் முடிவடையவில்லை.

இந்த ஜனநாயகப் போராட்டத்தின் வெற்றியில்தான் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் தங்கியுள்ளது. இந்த சூழ்நிலையில் ஆயுதப் போராட்டத்தின் முடிவுடன் எல்லாம் முடிந்து விட்டன என்று அத்தநாயக்க கூறுவது எந்த வகையில் நியாயமாகும்?

தமிழ் மக்களை நேசிப்பதாகக் காட்டும் ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறு கூறுவதன் மூலம் அதன் இரட்டை முகம் வெளிப்படுகின்றது. -இவ்வாறு பா.அரியநேத்திரன் எம்.பி. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஒ-சி)

# குடிதண்ணீர் கட்டண நிலுவை செலுத்தாத அமைச்சர் டக்ளஸ்

## 101 லட்சத்து 36 ஆயிரம் ரூபா தரவேண்டும்

கொழும்பு, செப்.30

பாரம்பரியக் கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கொழும்பிலுள்ள இரு வீடுகளுக்கான குடிதண்ணீர் கட்டணம் 101 லட்சத்து 36 ஆயிரத்து 443 ரூபா நிலுவையாக உள்ளது - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் நிரோஷன் பாதுக்க தெரிவித் துள்ளார்.

கொழும்பு 5 பார் வீதியில் அமைச்சர் வசித்து வரும் இலக்கம்; 121 வீட்டிற்கான குடிநீர் விநியோகக் கட்டணமாக 83 லட்சத்து 65 ஆயிரத்து 695 ரூபா செலுத்த வேண்டியுள்ளது எனவும்,கடந்த மாதம் 25 ஆயிரம் ரூபா மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை கொழும்பு 4 லெயாட்ஸ் வீதியில் உள்ள அமைச்சர் தேவானந்தாவின் 15/1 என்ற இலக்க வீட்டின் குடிதண்ணீர் கட்டணமாக 17 இலட்சத்து 70 ஆயிரத்து 750 ரூபா செலுத்த வேண்டிள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தின் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளார்.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு தண்ணீரை போத்தல்களில் அடைத்து அனும்பும் தொழிற்சாலையை நடத்தியதால், இவ்வாறு குடிநீர் கட்டணங்கள் அதிகரித்துள்ளதா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

சாதாரண மக்கள் இரண்டு மாதங்கள் குடிதண்ணீர் கட்டணங்களைச் செலுத்தத் தவறினால் நீர் விநியோகம் துண்டிக்கப் படும். எனினும் அமைச்சர் தேவானந்த 101 லட்சம் ரூபாவுக்கு மேல் கட்டணம் செலுத்தாத நிலையில், அவருக்கான தண்ணீர் விநியோகம் துண்டிக்கப்படவில்லை என்றும் அவர் சாடியுள்ளார்.

### உண்ணாவிரத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், பொது மக்கள் ஆகியோர் முன்னிலையில் தம்மை அமைச்சர் பஸில் விரட்டினார் எனவும் -

தம்மை அவமானப்படுத்திய அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேரில் வந்து தம்மிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் கோரியே தேரர் உண்ணாவிரதம் இருந்து வந்தார்.

இந்நிலையில் நேற்றும் மூன்றாவது நாளாக விகாரையின் வளாகத்தில் போராட்டத்தைத் தொடர்ந்துக் கொண்டிருந்த வேளையிலேயே தேரரைப் பொலிஸார் பலாத்காரமாக ஏற்றிச் சென்று வைத்திய சாலையில் சேர்த்துள்ளனர். (ஒ-சி)

### பொன்சேகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்திருந்தமை தெரிந்ததே. அத்துடன் அவர் கணவரின் விடுதலைக்காக ஏனைய மதத் தலைவர்களையும் இந்நாள்களில் சந்தித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

மல்வத்தைபீட மகாநாயக்கர் திப்பட்டுவாகே ஸ்ரீ சுமங்களா, அஸ்கிரிய பீட மகாநாயக்கர் உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த, அமரபுர சங்க சபையின் மகாநாயக்கர் தவுள்தென ஸ்ரீ ஞானாதிஸ்ஸ, ராமக்ஞ பீட மகாநாயக்கர் வேவய்தெனிய மேதாலங்கார ஆகியோர் பதிவுத் தபால் மூலம் இக் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளனர். (அ-சி)

### வருடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்து பொலிஸ் தலைமை கத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண் உரையாற்றுகையிலேயே அவர் மே கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்த வருமாறு-

ரயில் மற்றும் வாகன விபத்துக்க வருடாந்தம் இரண்டாயிரம் பேர்வ உயிரிழக்கின்றனர். இவற்றைத் தவிர் கொள்வதற்குப் பொதுமக்கள் பெ புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும். இ மூலமே அநாவசியமாக இடம்பெ விபத்துகளைக் கட்டுப்படுத்த முடியு

இன்று நாட்டில் நாளொன்றுக்கு ஆ கும் அதிகமானவர்கள் வீதி விபத்துக்க பலியாகின்றனர். அதேவேளை, 10 மு 15 பேர் வரை படுகாயமடைந்த நிலை வைத்தியசாலையில் சேர்க்கப்படுகி னர்.

ஆகவே போக்குவரத்துப் பொலிஸ தாம் பெற்ற பயிற்சிகளின் அடிப்படையி கடமையாகவும், திறம்படவும் பொதும களை வழிநடத்த வேண்டும் அதுே அவர்கள் நாட்டுக்கு ஆற்றும் சேவை.

- இப்படி பிரதிப் பொலிஸ்மா அ தெரிவித்துள்ளார். (ஒ-

### சாதாரண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரட்டுவதில் சிக்கல் நிலைமை கா படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ள

குறித்த நபர்களிடம் மேற்கொள் படும் விசாரணைகளில் பல முக்கிய வல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்கள் தொடர்பிலான வல்களை திரட்டிக் கொள்வதற்கு சந்ே நபர்களை நீண்டகாலம் தடுத்து வை நேரிட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்

இலங்கை ஓர் சுயாதீனமான நாடு வும், வெளிநாட்டு சக்திகளின் உத்தர ளுக்கு இலங்கை ஒருபோதும் அடிபண செயற்படாது எனவும் அவர் தெரிவித்

விடுதலைப் புலிகள் என்ற சந்ே தில் ஏராளமான இளைஞர்கள் தடு வைக்கப்பட்டுள்ளமை சர்வதேச சட் துக்கு முரணானது என்று இந்தவார அ பத்தில் சர்வதேச நீதியாளர்கள் சபை ெ வித்திருந்தது. இந்நிலையில் யாப்பா ே கண்டவாறு தெரிவித்துள்ளார்.

**விற்பனையாகின்றவ**

A/L - CHEMISTRY
English Medium
6 வகையான புத்தகங்கள்
ஆக்கம் : அனுரா பண்டார
வேகமான விற்பனையில் புத்தம்புதிய வெளியீடு
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
222 9881

**THE SCIENCE CORNER**
**CLOCK TOWER LANE, JAFFNA**
PHYSICS - 2011 A/L
ELECTRICITY
ஆரம்பம் : 02.10.2010 (சனி)
Sat, Sun :- (6.00-7.00) a.m.
By - K. SELVAN B.Sc. (Hons.)

**Jaffna College Institute of Technology**
**Vaddukodai**
உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளவும்
Certificate Craft Courses (தமிழ் மூலம்) All Includes NVQ level Syllabus
Refrigeration & Air-Conditioning (குளிரூட்டுதல் பயிற்சி)
Electrical Wiring (மின் இணைப்பும் நிர்மாணமும்)
Radio & T.V Servicing (ரேடியோ ரீ.வி பழுதுபார்த்தல்)
Welding
Duration : Six Months (Full time)
Certificate Computer Courses in Business & Scientific Applications
MS Office (Ms Word , Ms Excel , Ms Access, Ms Power point)
Printing Technology (PageMaker, CorelDraw, Adobe PhotoShop)
Maya (Advantages : Advertisement creations, Computer Games, 2D background Creations, Miracle Animation, 3D Modelling Objects)
C/C++ Visual Basic 6. 0/NET Internet & E-Mail
JAVA Computer Hardware Macromedia Flash M
Duration : 3 - 4 Months (Part time)
* அரச "Tertiary and Vocational Education Commission" ஆல் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.
* விண்ணப்பப் படிவங்களைக் கீழ்க்கண்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.
DIRECTOR
Jaffna College Institute of Technology
Vaddukoddai. E-mailjcit @sltnet.lk Tel.Phone:021-2228275

**NEW SCIENCE HALL, JAFFNA**
A/L COM.MATHS
By
Mr. S. பிரேம்நாத் B.Sc.
★ சனி, ஞாயிறு வகுப்புக்கள் ★
2012 - தொடர்பு வேகம்
Sat, Sun : 11.00 - 12.30
2011 – வரிசை மாற்றமும் சேர்மானமும்
Sat, Sun : 12.30 - 2.00
DAY CLASS
(2011 பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குரியது)
அலகு ரீதியான துரித மீட்டல் வினா விடை வகுப்பு
Sat, Sun : 8.00 - 11.00
ஆரம்பம் :- 02.10.2010

புதிய ஆரம்பம்
A/L 2011, 2012, PaperClass, DayClass

| நாடக அரங்கியல் | வரலாறு |
| --- | --- |
| திரு.S.சுகந்தன் | திரு.S.ஸ்ரீ |

தனிப்பட்ட அனுமதி வழங்கப்படும்.
இவ் முன்னணி ஆசிரியர்க
யாழ்நகரில் எமது நிறுவனத்தில் மாத்திரமே.
யூனிவேர்சல் யா/இந்துமகளிர் கல்லூரி அருகே

**வீடு விற்பனைக்கு**
கரவெட்டி பிரதேச வைத்தியசாலைக்கு அருகில் 2½ பரப்புக் காணியில் நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் புதிதாகக் கட்டப்பட்ட வீடு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு : 0715397117

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org